

சக்தி

மாத வெளியீடு

•

சாரத் திரள்

தமிழ் எழுத்துச்சீர்திருத்தம்	... தலையங்கம்	1
காலச்சுழல்	... குறிப்புகள்	3
இந்தியாவும் உலக......	... மகாத்மா காந்தி	4
இத்தாலியத் தேர்தல்	... 'காலக்கோலன்'	6
அவலட்சணத்தின் அழகு	... ஆன் அதிமர்	11
பிளேட்டோவின் தத்துவக் கொள்கைகள்	... வி. சக்கரை செட்டியார்	12
ராஜுவின் கல்யாணம்	... 'தியாகபூபன்'	17
டையைப் பற்றி	... தேசீர்வாதி	22
காதலும் பிராயமும்	... ஆல்பிரெட் எச். மைல்ஸ்	25
தேன்	... எச். எம். வால்டன்	39
படங்கள்	... ...	41—48
புதுக்கோட்டை	... இ. ரா. சுப்பிரமணியன்	49
பாரதியும் பட்டாடையும்	... ஜ. சகுந்தலா பாரதி	54
இப்படியும் நடக்கிறது!	... வித்தியாவதி வர்மா	56
இடிக்குத் தப்புவது எப்படி?	... நெட் ஜான்ஸ்டன்	64
கண்ணாடித் தொழில்	... டி. வெ. ராமசாமி	68
ஆரம்ப காலத்தின் ரயில்கள்	... பிரயாணி	71
ஆரம்ப காலத்தில் டிக்கட்டுகள்	... டி. டி. ஆர்.	73
நித்திரை	... "லக்ஷ்மி"	74
சாக்கடையிலிருந்து (தொடர் கதை)	... பி. கேசவதேவ்	78

முதலியவை

✲

சர்வதாரி சித்திரை

மலர் 15 இதழ்

சக்தி

புது வருஷப் பரிசு

-600 008.

சுதந்திரம்

வாரப் பத்திரிகை

மே 12உ வெளி வருகிறது

அறிஞர் வ. ரா. ஆசிரியராக
இருக்க இசைந்துள்ளார்

விலை அணா ஒன்று
வருஷ சந்தா ரூ. மூன்று

உங்கள் சந்தாத் தொகையை
அனுப்பிப் பதிவு செய்துகொள்ளுங்கள்

★

சக்தி காரியாலயம்

சென்னை—14

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

No. 1

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாப

மதுரை மில்ஸ் கம்பெ

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்ப 80 வகை நூல்களை

●

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற் றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகா ணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

எப். ஹார்வி லிமிடெ

மானேஜர்கள்

ற்றுக் கோளாறுகளிலிருந்து விடுதலை

வயிற்று வலி, வயிற்று எரிச்சல், அஜீரண ஏப்பம்
பவற்றால் துன்பமடைந்தாலும் அதிவிரைவில் குண
ந்து குதூகலமடைவீர்கள்—உடனடியாக "மில்க் ஆப்
நீஷியா" சாப்பிட ஆரம்பியுங்கள். ஹ்ருதய எரிச்ச
உண்டாகும் உபாதையும், வாயுத் தொந்தரவுகளும்
தில் ஒழிகின்றன. இரவில் வயிற்று உபாதையால்
மில்லாதிருந்தால் படுக்கும்பொழுது "மில்க் ஆப்
ந் நீஷியா"வை உபயோகியுங்கள். அன்றைய வேலை
க் குதூகலமாகச் செய்யும் ஊக்கத்துடன் எழுந்திருப்பீர்
"பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்நீஷியா" வயிற்றுப்
லை ஒழித்து மலத்தை இளக்கக் கூடிய ஓர் அரிய
ரம் என்பதை நீங்கள் மறவாதீர்கள்.

PHILLIPS

"MILK OF MAGNESIA"

LIQUID or TABLETS

No. 1

புதிய விஷயங்களுடன் இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்



சர்வதாரி
மலர் 15

சக்தி

சித்திரை
இதழ் 1

மெய்ப் பொருள் காண்பது அறிவு

●

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ் எழுத்துக்கள் நடை முறையிலிருப்பவை அச்சு, டைப்ரைடிங் மெஷின், லைனே மெஷின் ஆகியவைகளுக்கு உகந்ததாக இல்லை. இந்த அபிப்பிராயத்தைக் கொண்டே பல வருஷங்களாகத் தனிப்பட்டவர்களும், கூட்டத்தார்களும் முயற்சி செய்தார்கள். ஏதோ சில சில மாற்றங்களைச் செய்தார்கள். அந்த மாற்றங்களை எல்லோரும் கடைப்பிடிக்க வில்லை. ஸ்ரீ ராமசாமிப் பெரியார், அவரைச் சேர்ந்த சில நண்பர்கள் மட்டும் அந்தச் சில திருத்தங்களை நடை முறைக் குக் கொண்டுவந் திருக்கிறார்கள். அவர்களாவது நடை முறையில் கொண்டு வந்தார்களே என்று சிலர் மகிழ்வடை கிறார்கள். பலர் கேலி செய்கிறார்கள். இப்பொழுது தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைச் செய்ய அரசாங்கமே முன் வந்திருப்பதை வரவேற்கிறோம்.

இப்பொழுது தமிழில் பழக்கத்தில் உள்ள ஒலிகளுக்கு முந்நூறுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் இருக்கின்றன. ஆங் கிலம் 26 எழுத்துக்களுக்குள்ளே இருப்பதால்தான் டைப் மெஷின், லைனே மெஷின், டெலிப் பிரிண்டர் ஆகியவைகள் செய்ய முடிகிறது. இந்த மாதிரி வசதிகளெல்லாம் ஒரு மொழி வளருவதற்குப் பெரிதும் பயனுடையதாக இருக் கின்றன. அதே மாதிரியாகத் தமிழுக்கும் வசதிகளிருந்தால் தமிழும் மேம்பாடடையும். இந்த மாதிரி வசதிகளைத் தமிழ் மொழி அடையவேண்டுமானல் எழுத்துக்கள் சுருக்கமாக வேண்டும். எழுத்துக்களைக் குறைப்பதற்கு இப்பொழுதுள்ள

வடிவங்களில் எவ்வளவுதான் குறைத்தாலும் சுமார் அறுபது வடிவங்களாவது வேண்டும். இப்பொழுது அரசாங்கத்தார் விஞ்ஞான நூல்களுக்கு ஆங்கில வார்த்தைகளை அப்படியே உபயோகிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அதுதான் சரியுங்கூட. அப்படி ஆங்கில வார்த்தைகளை உபயோகித்தால் F. Z. போன்ற சில எழுத்துக்கள் வேறு வேண்டும். அவைகளுக்காக வேறு தமிழ் எழுத்துக்கள் புதிதாகச் சேர்க்க வேண்டும். எல்லாம் சேர்த்து எழுபதுக்குக் குறையாமல் எழுத்துக்கள் தேவைப்படுகின்றன. நடைமுறை எழுத்துக்களால் எந்த வகையிலும், அச்சு, டைப் ரைடிங் மெஷின் போன்றவைகளுக்குச் சங்கடந்தான்.

இருக்கும் தமிழ் எழுத்துக்களைக் குறைப்பதையோ கூட்டுவதையோ காட்டிலும் ரோமன் எழுத்துக்களையே உபயோகித்தால் ஆங்கில பாஷைக்கு உள்ள எல்லா வசதிகளும் நமக்குக் கிடைக்கும். தமிழ் வளரும். தமிழை உலக பாஷையாகக்கூடச் செய்ய முடியும். ரோமன் எழுத்தில் உள்ள Q.W.X நமக்குத் தேவையில்லை. ள. ண. ற. ழ. இந்த நான்கிற்கும் L. N. B. Z என்ற எழுத்துக்களில் மேலே சிறு கோடிட்டுக் கொள்ளலாம். இது ரொம்ப வசதியான முறை. இந்த முறையைப் பின்பற்றலாம் என்பது நமது எண்ணம். இந்த எண்ணத்திற்குப் பலர் ஆதரவு தந்திருக்கிறார்கள். ஸ்ரீ நேருஜி, நேதாஜி போன்ற பேரறிஞர்களின் எண்ணமும் இதுதான். தமிழ் வளருவதற்கு இதுதான் சரியான வழி.

*

வெற்றியின் ரகசியம்

நான் என் பரீட்சையின்போது ஒரே ஒரு தாளில்தான் ஏதோ எழுதிவைத்தேன். வேண்டுமென்றே கடைசி வாக்கியத்தை முற்றுப் பெறாத வாக்கியமாக நிறுத்திவிட்டேன். பிறகு ஒரு தந்திரம் செய்தேன். அந்த ஒரே ஒரு விடைத்தாளின் மேல்பாகத்தில் 'கிளிப்'பை மாட்டி வைத்துவிட்டேன். இதைப்பார்த்தால், விடைத்தாள்களைத் திருத்துபவர், நான் பல தாள்களில் விடைகள் எழுதி அவற்றைக் 'கிளிப்' பண்ணிக் கோத்தத்தாகவும், அந்தத் தாள்களை அந்தப் பரீட்சாதிகாரி தாமே எப்படியோ தவறுதலாகத் தொலைத்துவிட்டதாகவும் கருதுவதற்கு ஏதுவாக இருக்கும் அல்லவா?

என் தந்திரம் பலித்தது. நான் பரீட்சையில்]வெற்றிபெற்று விட்டேன்

—விருப்பின் பத்திரிகையில் ஒருவர்

காலச் சூழல்

மகாத்மா நினைவு வாரம்:

முப்பது ஆண்டுகளுக்கு முன் இந்த வாரத்தில்தான் காந்தி மகான் இந்திய சுதந்திர இயக்கத்துக்குத் தலைமை வகித்து அஹிம்சா பூர்வமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடத் தொடங்கினர். அந்த ஆண்டிலிருந்து நாடெங்கும் இந்த வாரத்தைத் தேசீய வாரமாகக் கொண்டாடத் தொடங்கினர். நமக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த பெருந்தகை மகாத்மா இன்று நம்மிடையே இல்லை. தேசிய வாரத்தின் சிருஷ்டி கர்த்தாவான நம் தந்தையின் ஞாபகார்த்த வாரமாக இதைக் கொண்டாடுவதுதான் நேர்மையாகும். காந்திஜி நினைவுவாரத்தில் காந்தி மகான் எந்த நோக்கத்துக்காக உழைத்தாரோ, எந்தக் கொள்கைக்காக இறுதிவரைப் பாடுபட்டு, அந்தப் பணியிலேயே உயிர் துறந்தாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்ற, அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தொழுக நாம் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அடையாளமாக மகாத்மா காந்தியின் ஞாபகார்த்த நிதிக்குத் தாராளமாகப் பொருளுதவி செய்யவேண்டும். வாழ்க மகாத்மா!

ஹைதராபாத்:

ஹைதராபாத் விவகாரமும் முற்றி, காஷ்மீர் நிலைமை அடைந்துவிட்டது. சென்ற சில மாதங்களாக ஹைதராபாத் நிஜாமுக்கும் இந்திய யூனியனுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகள் ஒரு முடிவுக்கும் வாராமல் நீடித்தது, நிஜாம் தன் படை பலத்தைப் பெருக்க அவகாசம் பெறச் செய்த சூழ்ச்சியிலோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ஹைதராபாத்தில் இன்று ஓடும் ரத்த ஆற்றுக்குக் காரணம் ரஸாக்கர்களென்னும் மத வெறியர்கள்தான் என்று நிஜாம் கூறுகிறார்.

இந்த நிலையில் இத்தா ஹுத் முஸ்லிமீன் ஸ்தாபனத்தின் தலைவர் காசிம் ரஜ்வி சென்ற வாரம், மதவெறியர்களுக்கு ஆவேசமூட்டும் முறையில் பேசினது கண்டிக்கத் தக்கது. இதைப்பற்றிப் பிரதமர் நேருவும் 'மக்களை அடாத செயல் புரியத் தூண்டும் பொறுப்பற்ற பேச்சு' என்று கண்டித்துப் பேசியிருக்கிறார். மேலும் இந்த விஷயத்தில் இந்தியப் பார்லிமெண்ட் பூரண சிரத்தையுடன் ஆலோசனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறோம்.

வ. ரா. வுக்கு மணிவிழா:

சென்ற முப்பது ஆண்டுகளாகத் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் சேவை செய்து வருகிற அறிஞர் வ. ரா. வுக்கு மணிவிழா கொண்டாடத் தமிழர்கள் தீர்மானித்திருப்பதை வரவேற்கிறோம். தமிழ், பண்டிதர்களுக்கு உரிய தனிச் சொத்து என்றிருந்ததை உடைத்து, பாமரருக்கு உரிய பொது உடமைச் சொத்தாக ஆக்கியவர் ஸ்ரீ வ. ரா. மறுமலர்ச்சி இயக்கத்தில் பெரும் பங்கு எடுத்து, இன்றையத் தமிழ் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியவர் ஸ்ரீ வ. ரா. எனவே, அறிஞர் வ. ரா. வுக்கு உரிய முறையில் மரியாதை செலுத்துவது நம் கடமை.

இது, நம் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன் எழுதப்பட்ட கட்டுரை, ஆனால், யுத்த மேகங்கள் சூழுறுவதாகச் சொல்லப்படும் இந்தக் குழப்பமான சந்தர்ப்பத்தில் நமக்குப் பல படிப்பினைகளை இக் கட்டுரை போதிக்கிறது.

இந்தியாவும் உலக சமாதானமும்

●

மகாத்மா காந்தி

நேச நாடுகளோ அல்லது உலகமோ யுத்தத்தினாலும் யுத்தத்தின்போது நடக்கும் ஏமாற்று வித்தைகள், திருட்டுத்தனங்கள் முதலியவற்றினாலும் காரியசித்தி பெற்றுவிடலாம் என்று நினைத்து, எல்லா வர்க்கத்தினரிடமும் எல்லா நாட்டினரிடமும், சுதந்திரம் சமத்துவம் என்பனவற்றின் அடிப்படையில் நிலவியுள்ள உண்மையான சமாதானத்தை ஒழித்துக் கட்டுவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் வரையிலும், நேசநாடுகளுக்கோ, உலகினருக்கோ சமாதானம் கிட்டப்போவதே இல்லை. இது என் உறுதியான நம்பிக்கை. ஆகவே மறுபடியும் இந்த நம்பிக்கையை வற்புறுத்திக் கூறுகிறேன். உலகத்தினர் யுத்தங்கள் வராமல் தடுக்க முயலுகின்றனர். அப்படியானால் ஒரு நாட்டை மற்றொரு நாடு சுரண்டுவதோ அடிமைப்படுத்துவதோ கூடாது. அப்பொழுதுதான் ராணுவ அம்சத்தில் பலஹீனமாக உள்ள நாடுகள் எல்லாம் உருட்டல் மிரட்டல்கள், சுரண்டல்கள் போன்ற ஆபத்துக்கள் இல்லாதபடி இருக்க முடியும்.

இன்று உலகத்திலுள்ள அறிவாளிகள், ஒன்றோடு ஒன்று எதிர்த்துப்போராடிக்கொண்டிருக்கும் சுயேச்சையான சுதந்திர அரசாங்கங்களை விரும்பவில்லை; ஒன்றை ஒன்று சிநேக முறையில் சார்ந்து வாழக் கூடிய நாடுகளின் சமஷ்டியைத்தான் விரும்புகிறார்கள். இந்த லட்சியம் கைகூட வெகு காலம் பிடிக்கலாம். இந்த விஷயத்தில் நம் நாட்டுக்கு என்று பிரமாதமான ஒரு தனி யோக்கியதை இருக்கிறது என்று நான் உரிமை கொண்டாடவில்லை. ஆனால், சுதந்திரத்தைவிட உலக சமஷ்டிக்குப் பாடுபட நாம் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுவதில் 'தனி யோக்கியதை' என்ற பிரஸ்தாபமோ, 'சிரம சாத்தியம்' என்ற பிரச்னையோ எழாது.

இந்தியா எந்த ஒரு நாட்டையும் எதிர்த்து யுத்தம் செய்தது கிடையாது. சில சமயங்களில் இந்தியா கட்டுப்பாடில்லாத முறையிலோ, அல்லது அரைகுறைக் கட்டுப்பாடுடனோ தற்காப்புக்காக சாதாரணமான முறையில் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியிருக்கிறது. யுத்தப் பழக்கமில்லாத காரணத்தால் சமாதானப் பிரியத்தை இந்தியா வளர்த்துக் கொள்ளவில்லை. ஆனால், இந்தியாவிற்கு

தெரிந்தோ தெரியாமலோ சமாதானத்தின்மீது மட்டற்ற பிரியம் இருக்கிறது. இந்தியா சமாதானத்தை உத்தாரணம் செய்வது எப்படி? தன்னைப் பிறர் சுரண்டுவதைச் சமாதானமான வழிகளில் எதிர்த்துப் போராடிவெற்றிபெறவேண்டும். அதாவது, இந்தியா சமாதானமான வழிகளில், தன் சுதந்திரத்தைப் பெறவேண்டும். அப்படி சுதந்திரத்தைப் பெற்றுவிட்டால் அது உலக சமாதானத்துக்கு ஒரு தனி நாடு செய்யக்கூடிய பேருதவியாக இலங்கும்.

நம் தேசிய உணர்ச்சி பிற நாடுகளுக்கு ஓர் ஆபத்தாக இராது. ஏனென்றால் நாம் யாரையும் சுரண்டப் போவதில்லை; அதே போல யாரும் நம்மைச் சுரண்டும்படி விடப் போவதுமில்லை. சுயராஜ்யத்தின் மூலம் நாம் உலகத்துக்கெல்லாம் சேவை செய்வோம்.

✻

ஓர் அறிவிப்பு

சக்திக்கு இந்திய பாஷைகளைத் தவிர மற்ற அந்நிய பாஷைகளிலிருந்து மொழிபெயர்த்து அனுப்பும் கதைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இந்திய பாஷைகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட கதைகளையும் சொந்தமாக எழுதப்பட்ட கதைகளையும், கவிதைகளையும் மட்டுமே வரவேற்கிறோம். பிரசுரத்துக்கு அங்கீகரிக்கப்படாத கதை, கவிதைகளைத் திரும்பப் பெற வேண்டுமென்றால்,விஷயதானத்தை அனுப்பும் போதே போதிய தபால் ஸ்டாம்புகளை வைத்து அனுப்பவேண்டும். போட்டோக்கள் சம்பந்தமாகவும் இதுவே நிபந்தனை. போட்டோப் படம் ஒவ்வொன்றின் பின்புறத்திலும், அனுப்புகிறவரின் விலாசம் எழுதப்பட் டிருக்கவேண்டும். போட்டோப் படம் ஒவ்வொன்றும் குறைந்த பக்ஷம் போஸ்ட்கார்டைப் போல் இரண்டு மடங்கு அளவுள்ளதாக இருக்கவேண்டும். முதலில் ஸ்டாம்பு வைத்து அனுப்பாமல், பிறகு தனிக் கடிதத்தில் ஸ்டாம்பு வைத்து அனுப்பினாலும்] கதை, கவிதைகளையோ போட்டோக்களையோ திருப்பி அனுப்புவது சிரமம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர், சக்தி

பரஸ்பரம் ஒரு கட்சியோடு ஒரு கட்சி மோதிக் கொள்ளுவதால் தேசத்தின் பொதுநலம் பாழ்படுவது இன்றைய உலக சரித்திரத்தில் காணப்படும் சாதாரண நிகழ்ச்சி. ஆகவே இன்று இத்தாலி எவ்வாறு இருக்கிறது என்பதை விளக்குகிறார் கட்டுரையாளர். கடந்த சில நாட்களாக இத்தாலியப் பிரச்னை உலகின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

இத்தாலியத் தேர்தல்

"காலக் கோலன்"

ஒன்றரை வருஷங்களுக்கு முன்னால் மன்னரின் முடியாட்சி வேண்டாம் என்று ஓட்டளித்தனர் இத்தாலிய மக்கள். அப்பொழுது குடியரசுத் திட்டத்தை ஏற்றனர். அதன் அரசியல் சட்டத்தின் கீழ் சட்டசபைப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க ஏப்ரல் 18-ம் தேதியன்று தேர்தல் தினமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தாலியில் நடக்க விருக்கும் இந்தத் தேர்தல் ஒரு முக்கியமான தேர்தல். அதன் முடிவைப்பற்றி மற்ற நாடுகளிலும் விசேஷ கவனம் ஏற்பட்டு வருகின்றது. அரசியல் துறையிலும், பொருளாதார நிலையிலும் நெருக்கடி முற்றி வரும் ஐரோப்பா கண்டத்தில் இந்தத் தேர்தல் ஒரு முக்கியமான சம்பவமாக இருக்கும். இத்தாலியில் எந்தக் கட்சியினர் அதிகாரத்துக்கு வருவார்கள் என்பது பற்றி வல்லரசுகளுக்குள் போட்டி ஏற்பட்டுள்ளது. அமெரிக்க சர்க்கார், தற்போது அதிகாரத்தி லிருக்கும் டிகாஸ்பேரி என்ற கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சித் தலைவரும் அவரது சகாக்களும் வெற்றி பெறவேண்டும் என்றும், அவர்களுக்கு எதிராகத் திரண்டுள்ள சோஷலிஸ்டு—கம்யூனிஸ்டுக் கூட்டணி தோல்வி அடைய வேண்டும் என்றும் விரும்புகின்றது. அமெரிக்க சர்க்காரின் உதவியைப்பெற்று, அதற்குச் சாதகமாக நடந்து வரும் டிகாஸ்பேரி மந்திரி சபையைத் தோற்கடிக்க வேண்டும் என்று இத்தாலியத் தொழிலாளர்களும் இதர தீவிர வாதிகளும் விரும்புகின்றனர்.

இன்றைய ஐரோப்பா அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் இரண்டாகப் பிரிந்து வருகின்றது. கிழக்கே செக்கோஸ்லோவேகியா, யூகோஸ்சவியா, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, போலந்து ஆகிய நாடுகளில் புதிய ஜனநாயக ஆட்சி ஏற்பட்டுவிட்டது. இந்த நாடுகளில் பழைய பணக்காரக் கும்பல்களின் ஆதிக்கம் ஒடுக்கப்பட்டு வருகின்றது. நில உரிமை மாற்றப்பட்டு பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். இந்த நாடுகளில் பொருளாதாரம் திட்டப்படி மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றது. அவை மேலும் மேலும் சோவியத் யூனியனுடன் நெருங்கிய உறவு ஏற்படுத்திக் கொண்டு வருகின்றன.

மேற்கே பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் மேலும் மேலும் அமெரிக்காவிடம் பொருளாதார உதவி பெற்று வருகின்றன. அவற்றில் கம்யூனிஸ்டு எதிர்ப்பு அதிகரித்து வருகின்றது. அவை அனைத்தும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு எதிரான ஒரு முகாமில் சேர்ந்து, அதற்குத் தக்கபடி ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இவ்விரண்டு பகுதிகளுக்குமிடையே தத்துவ ரீதியில் அரசியல் முரண்பாடு ஏற்பட்டுவிட்டது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் முகாம் "ஜனநாயகப் பாதுகாப்பு அணி" என்று கூறப்படுகின்றது. "கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சுதந்திரம் பறிபோகின்றது; எதேச்சாதிகாரம் தலை தூக்குகின்றது" என்று கூறப்படுகின்றது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளோ "நாங்கள் உண்மையான ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தி வருகிறோம். பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை நிறைவேற்றுகிறோம். மேற்கே அமெரிக்காவின் டாலர் ஏகாதிபத்தியம் வியாபித்து வருகின்றது" என்று கூறுகின்றன.

இத்தாலி தேசம் ஒரு முக்கியமான இடத்தில் அமைந்துள்ளது. அதன் வட கிழக்கில் யூகோஸ்லாவியா. மத்தியதரைக் கடல் நாடுகளில் முக்கியமானது இத்தாலி. அதன் தென் கிழக்கில் கிரீஸ். கிரீஸ், துருக்கி ஆகிய இரு நாடுகளுக்கும் அமெரிக்க சர்க்கார் கடந்த ஒரு வருஷத்துக்கு மேலாக கோடியாக இராணுவ உதவி அளித்து வருகின்றது. 1947 மார்ச்சு மாதத்தில் ஜனாதிபதி ட்ரூமன் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் ஐரோப்பிய நாடுகளில் எதேச்சாதிகாரம் வியாபிப்பதை அமெரிக்கா தடுத்து நிறுத்துவதற்கு உதவும் என்றார். கடந்த டிசம்பர் மாதத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு இடைக்கால உதவியாக 59 கோடி டாலர் கொடுக்கும் திட்டம் நிறைவேறியது. அதன் கீழ் உதவி பெறும் நாடுகளில் இத்தாலியும் ஒரு நாடு. ஆகவே அமெரிக்க சர்க்காருக்கு இத்தாலியத் தேர்தலில் உள்ள அக்கறைக்குக் காரணம் உண்டு.

பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளும் அமெரிக்காவுடன் சேர்ந்து தற்போதுள்ள டிகாஸ்பேரி மந்திரி சபையின் வெற்றியை விரும்புகின்றன. அதனால்தான் சென்ற மாதம் டிரியஸ்ட் பிரதேசம் இத்தாலிய சர்க்காருக்குச் சேரவேண்டும் என்று பிரகடனம் செய்தன. டிரியஸ்ட் பிரதேசத்தில் யூகோஸ்லாவியாவுக்கும் அக்கறை உண்டு. சோஷலிஸ்டு—கம்யூனிஸ்டுக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் டிரியஸ்ட் இத்தாலிக்குத் திரும்பிக் கொடுப்பதை ஆதரிக்கவில்லை என்றால் அவர்களை நாட்டை விட்டுக்கொடுப்பவர்கள் என்று கூறி அவர்களுக்கு ஏற்படும் ஆதரவைக் குறைத்து விடலாம் என்பதே மேற்படி பிரகடனத்தின் நோக்கம்.

இந்தப் பிரகடனத்துக்கு முன்னர் சோவியத் யூனியனும் ஒரு பிரகடனம் செய்தது. அது பழைய இத்தாலிய காலனிகளைப் பற்றியது. அந்தக் காலனிகளை வேறு நாடுகளின் மேற்பார்வையில் விடுவதற்குப் பதிலாக, அவற்றிற்குத் தர்மகர்த்தாவாக இத்தாலியையே நியமிக்கலாம் என்று சோவியத் அறிக்கை

கூறிற்று. இந்த அறிக்கையின் மூலம் சோவியத் யூனியன் இத்தாலிய காலனிகள் வேறு ஒரு வல்லரசின் ஆதிக்கத்துக்குச் செல்வதை தான் ஆதரிக்கவில்லை என்பதை வெளிப்படுத்தியது.

இவ்வாறாக வல்லரசுகள் தங்கள் தந்திர விளையாட்டை நடத்தி இத்தாலியத் தேர்தலின் முடிவைத தங்களுக்குச் சாதக மானபடி ஏற்படுத்திக்கொள்ளு வதற்கு முயலுகின்றன.

இத்தாலிய மக்களுடைய நிலைமை என்ன?

இத்தாலி நமது சென்னை மாகாணத்தில் முக்கால் பங்குக்கு மேற்பட்ட விஸ்தீரணமுள்ள நாடு. அதன் ஜனத் தொகை 4 கோடி 40 லட்சம்;நமது மாகாண ஜனத் தொகைக்கு 20 லட்சம் குறைவு.

இத்தாலிய மக்கள் பல நூற் றூண்டுகளாக ஆஸ்திரிய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தனர். அவர்கள் புராதனப் பண்புவாய்ந்தவர்கள். கலிலியோ என்ற வானசாஸ்திர நிபுணர் இத்தாலி தேசத்தவர்; உலகம் போற்றும் ஓவியக்காரர் லியனூர்டோ-டா-வின்ஸி ஓர் இத்தாலியர்; நேபிள்ஸ், வெனிஸ் போன்ற நகரங்கள் வெகு கால மாக அழகில் பிரசித்தி பெற்ற நகரங்களாக இருந்து வருகின் றன.

மேலும் சுதந்திரப் போர் புரிவதில் இத்தாலியர்களும் சிறந்தவர்கள். சென்ற நூற் றூண்டில் போரிட்ட கரிபால்டி யின் விடுதலை இயக்க வீரர்கள் சரித்திரப் பிரசித்தி அடைந்தவர் கள். முதலாவது மகாயுத்தம் முடிந்த பின்னர் 1919 லிருந்து 1922 வரை புரட்சி இயக்கம் வேகமாக வளர்ந்தது. 1922 லிருந்து முஸோலினியின் பாஸிஸ்டு ஆட்சியில் அவதியுற்ற போதிலும் இரண்டாவது உலக யுத்தம் முடியும் சமயத்தில் இத்தாலியருடைய சுதந்திர உணர்ச்சி மீண்டும் மலர்ந்தது.

தொழில்கள் வளர்ந்துள்ள வட இத்தாலி, பாஸிஸ்டு எதிர்ப்பு இயக்கத்தில் முதன்மைபெற்றது. மிலான் நகரத்தில்தான் ஒரு முச் சந்தியில் முஸோலினி ஜனங்க ளால் கொல்லப்பட்டான். அந்த மிலான் நகரத்துத் தொழிலாளி கள்தான் கடந்த நவம்பர் மாதத்தில் அந் நகருக்குப் போலீஸ் அதிகாரியாக நியமனம் செய்யப்பட்ட ஒரு பாஸிஸ்டு அனுதாபியை ஆக்ஷேபித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். டிகாஸ்பேரி மந்திரி சபை, அவ னுடைய நியமனத்தை வாபஸ் வாங்கும்படி செய்தனர்.

யுத்தம் முடிந்ததிலிருந்து பரி பூரண ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பும் மக்களுக்கும், சில் லறைச் சீர்திருத்தங்களைச்செய்து காலத்தைக் கடத்திப் பழைய சமூக அமைப்பைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கும் பகுதிக்கும் போராட்டம் நடந்து வந்திருக்கின்றது.

யுத்தம் முடிந்த பின்னர் பல நாட்கள் ஆட்சி புரிந்த நேச நாட்டு ராணுவ அதிகாரம் பாஸிஸ்டு அதிகாரிகள் பலரை விடுவித்தது. இத்தாலியரிடம் அதிகாரத்தைத் தந்த பின்னரும் அமெரிக்கப் படைகள் அந் நாட்டி லிருந்தன. சமாதான உடன்படிக்கை கையெழுத்தான பிறகு, அவை அந் நாட்டில் இருப்பதற்கு எந்த விதமான

காரணமும் கூற முடியவில்லை. துருப்புகள் வாபஸ் வாங்கப்பட்ட பின்னரும் அமெரிக்க ராணுவ தூதுகோஷ்டியினரை இத்தாலிய சர்க்கார் வைத்துக்கொண்டிருந்தது.

1947 ஜுலை மாதத்தில் இத்தாலிய மந்திரி சபையிலிருந்து சோஷலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும் ஒதுக்கப்பட்டனர். "கம்யூனிஸ்டுகளைச் சேர்க்கும் எந்தச் சர்க்காருக்கும் அமெரிக்க உதவி கொடுக்கப்பட மாட்டாது" என்ற அமெரிக்க எச்சரிக்கைக் கிணங்க இந்த மாறுதல் நடந்தது.

ஆனல் நாட்டு மக்களுடைய நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டு வந்தது. 1947 செப்டம்பரில் சுமார் 20 லட்சம் பேர் வேலையில்லாது திண்டாடினர். விசேஷ உலோகங்களை உற்பத்தி செய்து, எஞ்சினீரிங் வேலைகளைச் செய்து வந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டன. அன்ஸால்டோ மோட்டார் ஆலையும், கப்பல் கட்டும் ஆலையும் மூலப் பொருள் இல்லாததால் அக்டோபர் மாதத்தில் தங்கள் ஆர்டர்களைப் பூர்த்தி செய்யவில்லை. யுத்தத்திற்கு முன்னல் நடந்த தொழிற்சாலை உற்பத்தியில் 65 சத விகிதம்தான் 1947 டிசம்பரில் நடந்தது. யுத்தத்திற்கு முன்னல் இத்தாலி வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ததில் 11 சதவிகிதம்தான் அமெரிக்காவிலிருந்து வந்தது. இப்பொழுது 50 சதவிகிதம் அமெரிக்காவிலிருந்து வருகின்றது. தொழிலாளிகளுடைய வருமானம் குறைந்துவிட்டது. உண்மையான கூலி 50 சத விகிதம் குறைந்துவிட்டது. டிசம்பர் மாதத்தில் வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக அரசாங்கம் முன்வர வேண்டும் என்று ரோம் நகரத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர்.

பொருளாதார நிலைமை இவ்வாறு இருக்க அரசியல் துறையிலும் பழைய கட்சிகள் தலை தூக்குவதற்கு ஆரம்பித்து விட்டன. நாட்டிலுள்ள முக்கியமான கட்சிகளாகிய சோஷலிஸ்டுக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி, ராடிகல் (தீவிரவாதிகள்) கட்சி, கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி முதலியன ஆகியவற்றைத் தவிர சிறு சிறு கட்சிகளாகப் பல ஏற்பட்டுவிட்டன. பிரிட்டிஷ்—அமெரிக்க ராணுவ அதிகாரிகளால் விடுவிக்கப்பட்ட பழைய அதிகாரிகள் பலர் சேர்ந்து "மூவிமெண்டோ சோஷல்" (Mouviemento Social) என்று ஒரு கட்சி ஏற்படுத்திவிட்டனர். அக் கட்சியின் திட்டத்திற்கும் முஸோலினியின் கட்சித் திட்டத்திற்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை என்று கூறப்படுகின்றது. 1947 அக்டோபரில் நேஷனல்—சோஷலிஸ்டுக் கட்சி என்று ஒரு பாஸிஸ்டு கட்சி வெளிப்படையாக வேலை செய்தது.

கம்யூனிஸ்டுக் கட்சிக்கு 25 லட்சம் அங்கத்தினர்களிருப்பதாகக் கூறப்படுகின்றது. சோஷலிஸ்டுக் கட்சியின் அங்கத்தினர் தொகை 9 லட்சம். இவ்விரண்டு கட்சிகளும் தேர்தலில் ஒன்ருக வேலை செய்கின்றன. அவற்றுடன் இன்னும் சில 4 இடது சாரிக் கட்சிகள் சேர்ந்து ஒரு பொது ஜனநாயக அணியை நிறுவி இருக்கின்றன.

கடந்த டிசம்பர் மாதத்தில் சோஷலிஸ்டுக் கட்சியில் பிளவு ஏற்பட்டது. டிகாஸ்பேரியை

ஆதரிக்கும் ஒரு சிலர், ஸாரகாட் என்பவரின் தலைமையில் ஒரு தனி ஸ்தாபனத்தை அமைத்தனர். ஆனால் அவரை ஆதரிக்கும் பகுதியில் ஒரு சிலரேதான் இருக்கிறார்கள். சோஷலிஸ்டுக் காங்கிரஸில் ஸாரகாட்டைப் பின்பற்றியவர்கள் 15 சதவிகிதம்தான்.

வட பகுதியில் சோஷலிஸ்டு--கம்யூனிஸ்டுகளுக்குப் பலத்த ஆதரவு இருக்கின்றது. தென் பாகத்தில் விவசாயமே முக்கியமான தொழில். நிலபாத்தியதை சீர்திருத்தம் செய்யப்படவேண்டும், உழுது பயிரிடுவோருக்கு நிலம் சேர வேண்டும் என்ற அடிப்படையில் பொது ஜன நாயக முன்னணி பிரசாரம் செய்து வருகின்றது. தெற்கிலும் அவர்களுடைய செல்வாக்கு அதிகரித்து வருகின்றது. ஏனெனில் ஜனவரி மாதக் கடைசியில் 2 லட்சம் பண்ணைக்காரர்கள் தென் பகுதியில் ஒரு பெரிய வேலை நிறுத்தம் செய்தனர். இத்தாலிய விவசாயிக்குப் போதிய நிலம் கிடையாது. இன்னும் பல பெரிய நிலச்சுவான்தார்களிடம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலமிருக்கின்றது. சிசிலி மாகாணத்தில் 6½ லட்சம் விவசாயிகளிடம் சராசரி ½ ஏக்கரா நிலம்தான் இருக்கிறது என மதிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் நெருங்க நெருங்க டிகாஸ்பேரிக்கு ஆதரவு இருக்காதோ என்ற பீதி அமெரிக்க வட்டாரங்களில் அதிகரித்து வருகின்றது. "கிரீஸில் ராணுவ உதவி அளித்து ட்ஸால் தாரிஸ் சர்க்காரைக் காப்பாற்றுவது போல் இத்தாலியிலும் அமெரிக்கா நடக்க வேண்டியிருக்கும்" என்று நியூயார்க் பி. எம் பத்திரிகை எழுதுகின்றது. செக்கோஸ்லோவேகியசம்பவங்களுக்குப் பின்னர் கம்யூனிஸ்டுகள் பலாத்காரத்தை உபயோகித்து அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள் என்று வதந்தி கிளம்பியிருக்கின்றது. சோஷலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும், பழைய பாஸிஸ்டு அதிகாரிகள் அடக்குமுறை ஆட்சியினால் அதிகாரத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டிருக்கின்றனர் என்று கூறுகின்றனர்.

ஆகவே ஒரு பகுதி மற்றொரு பகுதியின் மீது பழி போட்டுக் கொண்டு, தேர்தல் நடக்குமா என்ற பிரச்னையையே கிளப்பி விட்டது.

இத்தாலிய நிலைமை ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்துகின்றது. "மூன்றும் சக்தி" (Third Force) இடது சாரியிலும் இல்லை, வலது சாரியிலுமில்லை என்று கூறி ஒரு தனிக் கட்சிக்கோ போக்குக்கோ இன்று இடமில்லை என்பதைத் தெளிவாக்குகின்றது. ஆறு மாதங்களுக்கு முன்னர் பிரான்சு தேசத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும் இந்த உண்மையையே உணர்த்திற்று. எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும் தோல்வி அடைந்த கட்சி வெற்றியை அங்கீகரிக்காது; வெற்றியைப் பலாத்காரச் சதி என்றுதான் கூறும். 'ஜனநாயகம் நிலைத்து, பொது மக்களுடைய தொல்லைகள் தீருமா, தீருவதற்கு வழியுண்டா?' என்று சாதாரண மனிதன் இன்று ஏங்கி நிற்கிறான்.

✲

The AIRMAN and his watch!

விமானியும் அவருடைய கை கடிகாரமும் நல்ல ரகமான கைகடிகாரங்களை தேர்ந்தெடுப்பதில் விமானிகள் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். மிகவும் துல்லியமாக மணி காட்டும் உறுதியும், அழகும், கைக்குப் பொருத்தமுமான கடிகாரங்களையே விரும்புகிறார்கள். வெஸ்ட் எண்ட் கடிகாரங்களைப் பாராட்டி அவர்கள் அளித்த நற்சாக்ஷிபத்திரங்கள் பல.



க்வீன் ஆன் - க்ரிஸ்டல் ஷேப்

நிக்கல் சில்வர்-பின்புறம் எவர்பிரைட் ஸ்டீல் ரூ. 52

ஓர் விமான இலாகா அதிகாரி எழுதுகிறார்: ''என் நண்பர் ஒருவர் கடந்த செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் இந்தியாவில் இருந்தபொழுது எனக்காக உங்கள் கம்பெனி கடிகாரம் ஒன்று வாங்கி வந்தார். அது மிகவும் நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.''

ஆர்டர்கள் அதிகம் வருவதாலும், போதிய அளவு இறக்குமதியின்மையாலும் விளம்பரம் செய்துள்ள எல்லா கடிகாரங்களும் சப்ளை செய்வதற்கில்லை. ஆனாலும் சப்ளை செய்ய எங்களாலானவரை முயற்சி செய்வோம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கம்பெனி

பம்பாய் — கல்கத்தா

WEST END WATCH C

BOMBAY • CALCUTT

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்

அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்..

கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றிபெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

353.A.E..

கேசரி குடீரம் லிட். மதராஸ்

கேஸரி குட்டீரம் லிமிட்டெட், மதருஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திரா ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள்:

...காராமா ஜெனரல்ஸ்டோர்ஸ்

...பர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை.

பிரபஞ்ச ஜோதி பிரசுரங்கள்

சமீபத்தில் வெளியான

வெ. சாமிநாத சர்மா நூல்கள்

★

அரசியல் வரலாறு	2 10
கார்ல் மார்க்ஸ்	3 4
மானிட ஜாதியின் சுதந்திரம்	1 4
ஸ்ரீராம கிருஷ்ணர்—ஒரு தீர்க்கதரிசி	2 4
ஆசியாவும் உலக சமாதானமும்	2 8
ஐக்கியதேச ஸ்தாபனம்	2 0
ருஷ்யா-சரித்திர வரலாறு	1 8
சுப்பிரமணிய சிவம்	1 2
பிளேட்டோவின் அரசியல்	(அச்சில்)
சமுதாய சிற்பிகள்	(அச்சில்)

சென்னையில் கிடைக்குமிடம்:

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை 14

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

புதுக்கோட்டை

திருச்சி ஜில்லா

ராஜூவின் கல்யாணம்

"தியாகபூபன்"

"கல்யாணம் என்பது பெரிய பெரிய சூதாட்டங்களில் ஒன்று."—இது தேவராஜுவின் பேச்சு. இதனைக் கேட்டுக்கொண்டிருந்த சதாசிவன் சொன்னான் இப்படி: "ஆனால் அந்த சூதாட்டத்தில் வெற்றிபெறும் அதிர்ஷ்டக் காரர்களில் நீ ஒருவன். உன் வாழ்க்கையும் மதுரம் வாய்ந்தது என்றே நான் சொல்வேன்."

"சரிதான்; ஆனால் அவள்..."

"என்? அவளுக்கென்ன? நிறம் கொஞ்சப ......மாநிறம் தான். ஆனால் களை சொட்டும் முகம ஒன்றே போதும். இதோ பார் ராஜு, ஜெகன்மாதா பார்வதியின் நிறமென்ன? குமரன் காதலித்த குறமகள் சிவப்போ? இன்ப கீதமிசைத்து நிற்கும் குயிலின் நிறமென்ன? சற்றே சிந்தித்துப் பார்" என்று மேலே மேலே பேசிக் கொண்டிருந்தான் சதாசிவன்.

"எதேது, ஒரேயடியாய் அளந்து கொட்டுகிறாயே. நான் அதை சொல்ல வில்லையப்பா, அதைச் சொல்லவில்லை. அறிவு, தெளிவு, இனிமை ஆகிய அருங்குணங்கள் அமையப்பெற்ற ஆரணங்குதான் அவள். ஆனால் அவள் என் வாழ்க்கைத் துணைவியாக வந்ததே ஒரு சூதாட்டம் தான்."

"என்ன? நீ சொல்லு......"

"வேடிக்கைதான். தனி நாடகம் அது. என் கல்யாணத்தைப் பற்றிய விவரங்களை யெல்லாம் நீ கேள்விபட்டாயானால்.........

......என்னுடைய மனோராஜ்யத்திற்கு விரோதமாகவே எலலாம் நிறைவேறிவிட்டது."

"அப்படியானால்......"

"கேள். முழுவதும் கேட்ட பிறகு நீ சொல்ல வேண்டியதைச் சொல்" என்று கையமர்த்திவிட்டு ஆரம்பித்தான் தேவராஜு:

"என் மாமனார் ராவ்சாகிப் சதானந்தம் அவர்களை உனக்குத் தெரியும் அல்லவா? அவருடைய மகள் கலாவதியின் கல்யாணத்திற்கு நான் சென்றிருந்தேன். என் மாமனார் வீட்டில் தேங்கிக் கிடந்த ஜனக் கும்பல் இடத்தையெல்லாம் அடைத்து விட்டது. நல்ல வேளையாக, மேல் மாடியில் எனக்குத் தனியாக ஓர் அறை கிடைத்தது.

பக்கத்து அறையொன்றில் ஒரு மனிதர் தங்கியிருந்தார். அவரும கலியாண விருந்ினர்தான். ஒட்டியுலர்ந்து போன வற்றல் உடம்பு; ஓயாத உழைப்பின் சலிப்புத் திரைகள். சிப்பிப் பாறைகள் போலப் படிந்திருந்த அவருடை முகம், வாழ்க்கையின்

உலகத்தில் கல்யாணங்கள் நடப்பது சர்வ சாதாரணமான காரியங்களாகத் தோற்றுகின்றன. ஆனால், உண்மையில் ஒவ்வொரு கல்யாணமும் ஏதோ சந்தர்ப்ப வசமாக நிகழும் ஒரு காரியமாகத்தான் இருக்கிறது. இந்த விசித்திரத்தை வர்ணிக்கிறது இக் கதை.

முடிவான யாத்திரை ஆரம்பித்து விட்டதென்பதைக் காண்பித்தது. அவருடைய மீசை கட்டுக்கடங்காமல் எப்படியெல்லாமோ வளர்ந்திருந்தது. ஓய்வற்ற உழைப்பாலும் தீர்க்க முடியாத கவலையாலும் தலையில் சிறிது வழுக்கைகூட விழுந்திருந்தது. ஒன்றிரண்டு வெள்ளி மயிரும் கூட இழைவிட்டிருந்தன. 'இவர் யார்?' என்று என் மாமனாரிடம் விசாரித்தேன். 'இவரா; இவர் பம்பாயில் உள்ள பிரபல டாக்டர்; பத்மநாபன் என்பது இவருடைய பெயர்' என்று என்னிடம் தெரிவித்தார்.

கலியாணத்திற்கு மறுநாள் ஒரு பெரிய விருந்து நடந்தது. அது முடிய இரவு பன்னிரண்டு மணியாகிவிட்டது. எனக்கோ தூக்கம் பிடிக்கவில்லை. தோட்டத்தில் அப்படியும் இப்படியும் உலாவினேன். சுற்றிலுமிருந்த பல ஜாதி மலர்களின் சுகந்தத்தை அள்ளி வந்து தெளித்தது, மந்த மாருதம். மேலே நட்சத்திர மணிகள் பூண்டு அலங்காரமாக விளங்கியது நீல வானம். வானக் குளத்திடை பூத்த வெண்தாமரை போன்ற சந்திரன் பாலொளியைப் பாங்காகத் தெளித்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் கழித்து, அங்குள்ள பெஞ்சியில் சாய்ந்தேன். ஆனால் என் கண்கள் ஏனோ மூட மறுத்தன. கொட்டாவிகள் உதிர்ந்தன. சோம்பல் முறித்தேன். ஆடை திருத்தினேன். வெளியே வீதிப்பக்கம் சற்று போய் வரலாம் என்று எண்ணினேன்.

போய்க் கொண்டேயிருந்தேன், புகை வண்டி நிலையத்தை நோக்கி. அங்கே அந்த நிசப்த இரவில், நீண்ட கரத்தைக் கொண்டு வேம்பை அணைத்த வண்ணம் அரசு நின்ற ஒய்யாரம் தான் என்ன? வேம்பு என்றால் நமக்குக் கசப்பு. ஆனால் அரசுக்கு அது கரும்புதான். வீசிய காற்றிலே இலேசாக அசைந்தாடின இலைகள்! அந்த 'சல சல' சப்தம்! அதில் பொதிந்திருக்கும்பொருள். 'கரும்பிலும் இனியவளே' என்று சொன்ன அரசுக்கு 'ஆசை ஊட்டும் அரசே!' என்று வேம்பு பதில் தருவது போலிருந்தது அந்தக் காட்சி.

இந்தக் காட்சி என் இதய மூலையில் கிடந்த ஒரு இரகசியத்தைப் பிடித்து இழுத்து என் முன்னே கொண்டு வந்து நிறுத்தியது. அப்போது என் உள்ளம் எந்த நிலையில் இருந்தது என்று நினைக்கிறாய்?

நிர்மலா—இந்தப் பெயர் அவளுக்குத் தகும். அவள் எனது காதற்கனி என்று நான் எண்ணிய வினாடியிலிருந்து அவளையே நான் நம்பியிருந்தேன். அவளது லாவண்யம் என் உள்ளத்தைக் கொண்டு போய் விட்டது. சதாசிவா, கேள். பொன்னிறமே அந்தப் பெண்ணின் நிறம். பொன்னகையுடன் புன்னகையும் பூண்டிருந்தாள் அவள். கூந்தலின் கருமையுடன் கண்மணிகள் போட்டியிட்டன. தந்தப் பற்களுக்குப் பவள இதழ்கள் காவல் புரியும் அழகு, அடடா! கன்னத்துக் குழி ஒரு கவிதைச் சுனைதான். அவளை அலங்கரித்த ஆடை ஆபரணங்கள் பாக்கியம் செய்தன என்பதில் சந்தேகமில்லை. இவளையே என் காதலியாகக் கொண்டேன். வாழ்க்கைத் துணைவியாக வாய்க்கப் பெற்று இன்பத் தேன் உண்ண என்று சமயம் வருமோ

என்று எங்கினேன்; எத்தனையோ தடவை, அவளும் என்மேல் உயிரை வைத்திருக்கின்றாள் என்பதைக் கண்டு கொண்டேன். அவள் வீட்டிற்கு ஒரு தடவை நான் சென்றிருந்த சமயம், அவள் என்னைக் கடைக்கணித்து விட்டுத் திரும்பவும் குனிந்துகொண்டாள். மௌனம் மோகன ஔஷதம் என்று எண்ணிய நான் அவளைப் பார்த்து, 'கண்கள் கட்டை விரலைப் பார்க்கின்றன; கட்டை விரல் தரையில் கோலம் போடுகிறது. எங்கே என்னைப் பார்' என்றேன். ஆனால் அவள், எதிரே மாட்டப்பட்டிருந்த நிலைக் கண்ணாடியைப் பார்த்தாள். 'ஏது? என்னைப் பார்க்காமல் கண்ணாடியைப் பார்த்தால்...' என்று சொல்லி அவளருகே சென்றேன். அவள் வாய்திறந்து, 'கண்ணாடியில் உங்களையும் என்னையும் சேர்த்துப் பார்க்கிறேன்' என்றாள். ஆகா, அதில்தான் என்ன இனிமை!......சதாசிவா, கோபித்துக் கொள்ளாதே...என்னவோ சொல்ல வந்தவன் எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறேனே............ஆமாம். புகைவண்டி நிலையம் சென்றேன்.

சூடாக ஒரு கப் காபி அருந்தலாம் என்று சிற்றுண்டிச்சாலையருகே நடந்தேன். என்ன ஆச்சரியம்! என் நண்பன் காந்திநாதன் நின்று கொண்டிருந்தான். அவன் வேறு யாருமல்ல; என் காதலி நிர்மலாவின் சகோதரன்தான். விருதுநகரிலிருந்த காந்திநாதன் இங்கு எப்படி வந்தான் என்பது எனக்குப் புரியவில்லை. அவன் விஷயத்தைச் சொன்ன பிறகுதான் எனக்குத் தெரிந்தது. இரண்டு தினங்களுக்கு முன்தான் அங்கு மாற்றலாகி வந்ததாகவும், அந்த நிலையத்தில் நிலைய அதிகாரியாக நியமனம் பெற்றிருப்பதாகவும் அவன் சொன்னான். அதன் பிறகு காந்திநாதன் என்னை உபசரித்தான். கடைசியாக...அவன் மதுபானமும் வாங்கித் தந்தான். நானும் மறுத்துப் பார்த்தேன். ஆனால் வேண்டா வெறுப்போடு குடித்துவிட்டு, குடியில் மயங்கிச் சிதறிய மனதை ஒன்று சேர்த்துக்கொண்டு நண்பனுக்கு வந்தனம் கூறிவிட்டுக் கல்யாண வீட்டிற்குத் திரும்பினேன்.

மாடிப் படிகளில் ஏறி வாசல் படிகளை எண்ணிக் கொண்டே அறைக்குள் நுழைந்தேன். ஏதோ காலில் பட்டது. கையால் தடவிப் பார்த்தேன். வெளியே உள்ள நிலவொளியைத் தவிர அறைக்குள் வேறு வெளிச்சமே இல்லை. ஸ்பரிசத்தினால் அது என்னுடைய சாய்வு நாற்காலி என்று தெரிந்து கொண்டேன். அப்பொழுது ஒரு தீக்குச்சியைக் கிழித்து வெளிச்சம் உண்டாக்கிக் கொள்ள எனக்கு ஞாபகம் வரவில்லை. மேல் சட்டையைக் கழற்றிவிட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். நாற்காலியின் சட்டத்தில் தட்டி காலிலிருந்த செருப்பைக் கழற்றினேன். கண்களை மூடினேன். தூக்கம் என்னைத் தழுவியது.

தூக்க மயக்கத்தில் என் அருகிலேயே ஒரு மனிதக் குரல் கேட்டது. 'என்னம்மா இன்னும் தூங்குகிறாய்? மணி ஏழு ஆகிவிட்டதே' என்ற குரல் தான் அது. யாருடைய கையோ என் உச்சந்தலையில் பட்டதை உணர்ந்தேன். 'யார் அது?' என்ற கேள்வியும் தொடர்ந்து வந்தது. அடுத்த வினாடி எழுந்து நின்றேன். அருகே நின்ற மனிதர் என்னை

ஒரு தள்ளு தள்ளினார், 'போக்கிரி' என்று கூவினார். எனக்கு ரோஷம் வந்து விட்டது. 'யார் போக்கிரி? நானா?'......என்று சொல்லிக் கொண்டே அவர் மேல் மோதினேன். இருவரும் புரண்டு உருண்டு களேபரம் செய்தோம். அந்தச் சமயம் ஒரு பெண் வீறிட்ட கீச்சுக் குரல் என் செவியில் விழுந்தது. விருந்தினர் எல்லோரும் ஓடி வந்து எங்களைச் சமாதானப்படுத்தினர்.

சதாசிவா! என் எதிரி யாராயிருக்கலாம் என்று நினைக்கிறாய்? டாக்டர் பத்மநாபன் தான். நிகழ்ந்து போன சம்பவம் என் மூளைச் சுழற்சியில் அப்போது தான் உதயமாயிற்று. இரவில் என் அறைக்குப் போவதாக நினைத்துக்கொண்டு, டாக்டர் பத்மாபனுடைய குமாரி லதாவின் அறையினுள் நுழைந்திருக்கின்றேன் என்ற தப்பிதத்தை அப்பொழுது தான் உணர்ந்தேன். அது மாத்திரமல்ல; அவர் குமாரி லதா படுத்திருந்த கட்டிலருகேதான் தூக்கக் கலக்கத்தில் மதுவின் மயக்கத்தில் நானும் சாய்வு நாற்காலியில் விழுந்திருக்கிறேன். இது தலை தாழ்த்தும் செயல்தானே? அதற்குப் பிறகு அங்கே என்னால் நிற்க முடியவில்லை. விருந்தினரின் பார்வை என்னைப் பிடுங்கித் தின்றது. விரைந்து நடந்தேன். மிதியடியைக்கூடக் காலில் மாட்டிக் கொள்ள மறந்து அதை அந்த அறையிலேயே விட்டு வந்தேன். என் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்த உள் தாழ் போட்டு, ஜன்னல் கம்பிகளினூடே என் பார்வையைத் திருப்பினேன்.

சிறிது நேரம் கழித்து கதவு தட்டும் சப்தம் கேட்டது; திறந்தேன். என் மாமனார் அறைக்குள் நுழைந்தார். எனது எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகி விட்டது.

'நீ ஒரு முட்டாள்; கழுதை! என் வீட்டில் ஒழுக்கங் கெட்ட காரியத்தைச் செய்துவிட்டாயே' என்று கத்தினார். அது என் குற்றம் தான் என்று ஒப்புக்கொண்டு விட்டேன். கசப்பு மருந்தை விழுங்கியவன் போல் தலையை அசைத்தேன். அவர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, 'ஒரு பெண்ணின் பரிசுத்த குணத்திற்குப் பங்கம் வரும்படியாக நடந்துகொண்டு விட்டாய்...பங்கம் வருவித்தே விட்டாய். என்னைப் பார்; இப்பொழுது செய்ய வேண்டிய காரியம் இதுதான். நீ அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு விடு' என்று சொல்லும் போது அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே! ஆனால் நான் அப்பொழுது என்ன செய்தேன் தெரியுமா? 'அது முடியாத காரியம்' என்றே பதில் கொடுத்தேன்.

உடனே என் மாமனார் கோபத்தினால் கதவைப் படீர் என்று இடித்து விட்டு வெளியே போய் விட்டார். எனக்கு என்ன செய்வது என்றே ஓடவில்லை. ஒரு பத்து நிமிடங்களுக்குப் பிறகு திரும்பவும் வந்தார் என்னிடம். 'ராஜு, என் மானத்தைக் காப்பாற்று. உனக்கு அந்தப் பெண்ணையே கல்யாணம் செய்து வைத்து விடுவதாக முடிவு செய்திருக்கிறார்கள். இதில் நான் ஒன்றும் மறுத்துச் சொல்வதற்கில்லை. இதற்கு நீ சம்மதம் தந்தே ஆக வேண்டும்' என்று நளினமாகப் பேசினார். ஏதோ ஓர் உணர்ச்சி உந்தித் தள்ளப்பட்ட நானும் சம்மதம் கொடுத்தேன். வேறு வழியே இல்லை.

அதன் பிறகு டாக்டர் பத்மநாபன் குமாரி லதாவுக்கும் எனக்கும் முகூர்த்தம் குறிக்கப் பட்டது.

கல்யாணத் தினத்தன்று எனக்கு வாழ்க்கைத் துணைவியாக வாய்க்கப் பெற்ற அந்த லதாவைப் பார்த்தேன். அவள் எனக்கு ஏற்ற துணைவிதான் என்று என் உள்ளம் சொல்லிற்று. ஆனால் நான் காதலித்த அந்த நிர்மலாவை இனி நான் நினைத்துப் பார்க்கத்தான் முடியுமா? மூன்று வருடங்களுக்கு முன்னர் அவள் ஏறி யமர்ந்திருந்த என் இதய பீடத்தைத் தான் லதா நிரந்தரமாக அபகரித்துக் கொண்டாளே! வாழ்க்கையின் விசித்திர ஜாலக் கூத்து இது'' என்று சொல்லி முடித்தான் ராஜு.

நண்பன் சொல்லிக் கொண்டு வந்ததை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சதாசிவன் சொன்னான்:

"ஆம் உண்மை; வாழ்க்கையில் 'திருப்பம்' என்பது சந்தர்ப்பங்களால் நிகழக் கூடியது. இது இயற்கையே. மனித வாழ்க்கையும் இயற்கையின் லீலையில் பிணைந்து கிடப்பதுதானே!"

அகப்பட்டதைப் பிடி!

அமெரிக்காவில் பாஸ்டன் என்னும் நகரத்திலுள்ள மிருகக் காட்சிச் சாலையிலிருந்து பன்னிரண்டு குரங்குகள் தப்பி ஓடிவிட்டன. உடனே காட்சிச் சாலையின் காவற்காரர்கள் ஓடிப்போய் மொத்தம் பதினைந்து குரங்குகளைப் பிடித்துக்கொண்டு வந்துவிட்டார்கள்!

—ஈவ்னிங் எக்ஸாமினர்

சுடுகாட்டுக்குப் போனவள்!

அயோவாவில், கிராபோர்ட்ஸ் வில்லி என்னும் இடத்திலுள்ள ஸாம் ரஸ்ஸல் என்பவர் மிகவும் அடக்கமான பேர்வழி; அதிகம் பேசமாட்டார். ஒரு நாள் அவர் வீட்டுக்கு ஒரு பெண் வந்தாள். அவள் ஒரு வியாபாரி. வந்து ரஸ்ஸலிடம், "தங்கள் மனைவியார் வீட்டில் இருக்கிறார்களா?'' என்று கேட்டாள்.

"வீட்டிலே இல்லை'' என்றார் ரஸ்ஸல்.

"அப்படியானால் நான் அவர்களுக்காக காத்திருக்கட்டுமா?'' என்றாள் அந்தப் பெண்.

"சரி, இந்த நாற்காலியில் உட்கார்ந்து கொள்."

ஒரு மணி நேரம் கழித்து அந்தப் பெண், "தங்கள் மனைவியார் எங்கே போயிருக்கிறார்கள?'' என்று கேட்டாள்.

"சுடுகாட்டுக்குப் போயிருக்கிறாள்."

"வர எவ்வளவு நேரம் ஆகும்?''

"எனக்குத் தெரியாது. அவள் போய் பதினொரு வருஷங்களாகின்றன'' என்றார் ரஸ்ஸல்.

—ரால்பி ஈ. ஷானன்

டீயைப் பற்றி

தேநீர்வாதி

உலகத்தில் பல நாடுகள் தேயிலைக்காக நம் நாட்டை எதிர்பார்க்கின்றன. ஆனால் நமக்கு மட்டும் இந்த டீயைப் பற்றி ஒருவித கெட்ட அபிப்பிராயம்தான் இருக்கிறது. இந்தத் தவறான எண்ணத்துக்கும், காரணமில்லாமல் நிராகரிப்பதற்கும் காரணம் நாம் விஞ்ஞான ரீதியில் இதை ஆராயாதிருப்பது தான்.

டீ ஓர் ஊக்கமளிக்கும் பானம் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இதனால் ஊக்கமளிக்கும், வீரியத்தைத் தூண்டும் மற்ற மருந்துகளைப் போல டீயைக் குடிப்பதாலும் பல கெடுதல்கள் நேரும் என்று எண்ணத் தலைப்படுகிறார்கள். இந்த எண்ணம் முழுக்க முழுக்கத் தவறானது. நாம் உட்கொள்ளும் எந்தப் பதார்த்தமும் சரியான முறையில் இல்லா விட்டால் உடலமைப்பைப் பாதிக்கத்தான் செய்யும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்பதை நினைவில் வைக்க வேண்டும்.

அளவோடு வேளா வேளையில் டீ குடிப்பதால் கெடுதல் இல்லை என்பது மட்டுமல்ல, உடம்புக்கு நல்லதும்கூட. டீ அயர்வை நீக்கி, புத்துணர்ச்சியைப் பெருக்குகிறது. மூளை முயற்சியுடையவர்களுக்கு இந்தப் பானம் பெரிதும் பயன்படுகிறது. சில சமயங்களில்,...ஆகா, டீயின் குணத்தை என்னென்று சொல்லுவது! களைத்துப் போயிருக்கிற மனிதன் டீ குடித்ததும் மழை முகங் கண்ட பயிர்போல அயர்வு நீங்கி அவன் முகம் பிரகாசமடைகிறது. டீயின் இந்த விசேஷமான குணத்தைத் தவறாகப் புரிந்துகொண்டு, டீ குடிப்பதைக் கண்டிக்கிறவர்கள் உடலின் நோய் வாய்ப்பட்ட தன்மைக்கும், மன நிம்மதியாக மகிழ்ச்சியோடு யிருப்பதற்கும் வித்தியாசம் தெரியாமல் குறை கூறுகிறார்கள்.

நம்பகமான எந்த டாக்டரைக் கேட்டாலும் டீயைப் பற்றிய உண்மையைத் தெரிவிப்பார். டாக்டர் வீட்டுக்குச் சரியாக, காலை 11 மணிக்கும், மாலை 4 மணிக்கும் எதிர்பாராத விதமாகச் சென்று பார்த்தால் டீயைப் பற்றி டாக்டர் கொண்டுள்ள உண்மையான கருத்து என்ன என்பது தெரியும்.

'டீ குடிப்பதால் தூக்கம் கெடும், பித்தம் ஏறி வாந்தி உண்டாகும்' என்று சொல்வது எவ்வளவு தூரம் உண்மை என்பதை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து மருத்துவ நிபுணர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றனர். ஆங்கில முறை வைத்தியம், ஆயுர்வேதம், யுனானி முதலிய துறைகளில் தலை சிறந்து விளங்கும் வைத்தியர்கள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அவர்களுடைய முடிவு என்ன தெரியுமா? டீ எவ்வளவு தான் கெடுதலான பானம் என்றாலும் உடலுக்கு ஒருவிதத் தீங்கையும், செய்ய முடியாது; மேலும், கொஞ்சமாகக் குடிப்பதால் டீயினால் எவ்வளவோ நன்மைகள் ஏற்படுகின்றன. இந்த வைத்திய ஆராய்ச்சியாளர்

டீ குடிப்பது கெடுதலான பழக்கம் என்று கூறுகிற கட்டுரைகள் பலவற்றை நீங்கள் படித்திருக்கலாம். இங்கே தேநீர்வாதி ஒருவர் டீ குடிப்பதனால் நன்மைகள் ஏற்படுகின்றன என்று எழுதுகிறார்.

களின் அபிப்பிராயப்படி டீ உடம்புக்கும் மூளைக்கும் எந்த விதக் கெடுதலும் செய்யாது. டீ அஜீரணத்தை உண்டாக்காது. மதுபானம் போல மயக்கத்தையும் உண்டாக்காது. ஆனால் அது தீங்கற்ற, ஊக்கமளிக்கும் ஒரு பானம். அது உடற்களைப்பைப் போக்குகிறது. உடற் சக்தியைப் பெருக்குகிறது. கொதிக்கக் காய்ச்சிய தண்ணீர் அல்லாத குளிர்ந்த தண்ணீர் குடிப்பதைக் காட்டிலும் டீ குடிப்பது நல்லது.

டீ நம் நாட்டில் விளையும் நம் தேசியப் பொருள். அதன் உற்பத்தியும், அதன் உபயோகமும், அதை உற்பத்தி செய்ய வேண்டிய உற்சாகமும் இப்பொழுது அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆகவே, மக்கள் டீயின் குணாதிசயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுவது அவசியமாகிறது. டீ குடிப்பதைக் கண்டிக்கிறவர்கள் தான் டீயின் உண்மைக் குணத்தை உணர்ந்திருக்கிறார்கள். டீக்கு வேறு பெயர் கொடுத்து, படாடோபத்தோடு கடினமான நடையில் அதனுடைய குணங்களைக் கூறினால் இந்தக் கண்டனக்காரர்களும் உலகத்தோடு ஒட்டி, டீ குடிப்பதை மேற்கொள்ளுவார்கள்.

* * *

சிலர் டீயைக் கண்டிக்கிறார்கள். எதைக்கண்டாலும், நல்லதோ கெட்டதோ கண்டிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுடைய மனம் சாந்தி யடையும். அந்த மாதிரிக் கும்பலைச் சேர்ந்தவர்கள்தான் டீயைப் பற்றியும் அவதூறாகப் பேசுகிறார்கள். டீயை இன்று உலக மக்கள் அனைவரும் குடிக்கிறார்கள். ஊக்கமளிக்கும் ஒரு நல்ல பானம் என்ற பெயரைச் சம்பாதித்து விட்டது டீ. இதைக் காண அவர்களுக்குச் சகிக்க வில்லை. எதையும் அவர்கள் கண்டிக்க வேண்டும் என்ற மனப்பாங்கினால் கண்டிக்கத் தலைப்படுகிறார்கள். இம் மாதிரியானவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

மிகச் சிலருக்குத்தான்—டீ குடிக்கும் நண்பர்களில் கூடச் சிலருக்குத்தான்—பானமாக உள்ள டீயினுடைய இன்பமளிக்கச் செய்யும் மூலப் பொருள்களின் ரகசியம் தெரியும். தேயிலையில் 'காபின்', 'டானின்' என்பவைகளும் எண்ணெய்ப் பசையும் இருக்கின்றன. காபின் ஊக்கமளிக்கிறது, ஆனால் மற்ற மயக்க மருந்துகளைப் போல இது இருதயத்தைத் தாக்குவதில்லை. இது புத்துணர்ச்சி ஊட்டும் ஒருசாதனம். டானின்தான் டீக்கு அந்த நிறத்தைக் கொடுக்கிறது. டீயிலுள்ள காசின் பால் சேர்த்தவுடன் வாயின் உள்பாகத்திலுள்ள மெல்லிய சதைப் பாகத்தையும், வயிற்றுக்குச் செல்லும் உணவுக் குழாயின் உட்புறத்தையும் பாதிக்கும் டானினுடைய தீய குணங்களைப் போக்கிவிடுகிறது.

பால் சேர்க்காத டீயைக் குடித்தால் டீயிலுள்ள டானின், ஜீரணமாகாத புரதத்துடன் சேர்ந்துவிடுகிறது. எளிதில் ஆவியாக மாறிவிடுகிற எண்ணெய் வஸ்துக்கள்தான் டீயின் அந்தப் பிரமாதமான மணத்துக்குக் காரணம். இந்த எண்ணெய் வஸ்துக்கள்தான் தளர்ச்சி யடைந்த நரம்புகளை முறுக்கேற்றிப் புத்துணர்ச்சி ஊட்டுகின்றன. வைட்டமின் அதிகமாக உள்ள ரிபோபிளேவின் டீயில் இருப்பதாக ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடித்துள்ளனர். ரிபோபிளே

வின், ஜீரண சக்தியைப் பெருக்கி நரம்புகளுக்கு ஆக்கம் தருகிறது. டீயுடன் உடலுக்கு வளர்ச்சி தருகிற பாலையும் கலந்து சாப்பிடுவதால் கெடுதலா உண்டாகும்!

தர்க்க ரீதியில் எண்ணாமல் சிலர் டீயைப்பற்றிக் கெடுதலான அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். தங்களுக்கு வருகிற உடல் அசௌகரியங்களுக்கெல்லாம் காரணம் டீதான் என்று நினைக்கிறார்கள். நரம்புத் தளர்ச்சியும் நரம்புப் பலஹீனமும் உள்ள சிலருக்கு இரவில் தூக்கம் வராது. உடனே முன்பின் யோசிக்காமல் இதற்கெல்லாம் காரணம் டீதான் என்று சொல்லிவிடுவார்கள். டீ குடிக்க ஆரம்பித்ததற்கு முன்பேயே இந்த வியாதி அவர்களுக்கு இருந்ததா என்பதைப் பற்றிச் சிறிதுகூட நினைத்துப் பார்ப்பது கிடையாது. மாமிச உணவை அதிகமாகச் சாப்பிடுகிறவர்கள், தங்களுடைய மலச்சிக்கலுக்கு டீதான காரணம் என்று கூசாமல் சொல்லுகிறார்கள். தனி மனிதருடைய குதர்க்க புத்தியும், உடற்கட்டும், மூளைக்கோளாறும்தான் இந்த மாதிரியான அபூர்வமுடிவுகளுக்குக்காரணம்!

டீக் குடியர்கள் எத்தனையோ பேர் முழுவயது வரையில் சௌகரியமாக இன்பவாழ்வு நடத்தியிருக்கிறார்கள். டாக்டர் ஜான்சன், சிட்னிஸ்மித், கிளாட்ஸ்டன் முதலிய அறிஞர்களும் பெரும் டீக் குடியர்கள்தான். நம் நாட்டிலும் பல பெரிய தேசிய வாதிகளும் தலைவர்களும் டீக் குடியர்கள்தான். ஸ்ரீமதி சரோஜனி நாயுடு, மௌலானா அபுல்கலாம் ஆசாத், ஆச்சாரிய கிருபளானி போன்ற தலைவர்கள் முதல், சாதாரண மக்கள் ஈறாக டீ குடித்து அதன் இன்பத்தை நுகர்கின்றனர்.

✲

புது அதிசயம்!

20-ம் நூற்றாண்டில் புத்தம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அதிசயங்களைப்பற்றிக் குழந்தைகளுக்குச் சொன்னார் வாத்தியார். சொல்லி முடித்தபிறகு குழந்தைகளைப் பார்த்து, "சரி சென்ற நூற்றாண்டில் இல்லாமலிருந்து, இந்த நூற்றாண்டில் காணப்படக்கூடிய ஒரு பெரிய அதிசயம் எது என்று சொல்லுங்கள்" என்றார்.

ஒரு சிறு பையன் எழுந்து பதில் சொன்னான். அவன் சொன்னதாவது: "நான் தான், சார்"

முதலில் வந்தவர்!

பிரசவ ஆஸ்பத்திரியின் வாசலில் பல ஆடவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுடைய மனைவிமார் பிரசவத்தின் பொருட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தனர். ஆஸ்பத்திரியின் உள்ளேயிருந்து ஒரு நர்ஸ் வந்து அங்கே நின்றுகொண்டிருந்த ஒரு ஆசாமியை அழைத்து, "உங்களுக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்திருக்கிறது" என்றாள். இதைக் கேட்டதும், பக்கத்திலிருந்த ஒருவர் மிகவும் கோபத்துடன் நர்ஸிடம் போய், "என்ன இது? இவர் வருவதற்கு வெகு நேரத்திற்கு முன்னாடியே நான் வந்து காத்துக்கொண்டிருக்கிறேன். எனக்கு முதலில் சொல்லாமல், அவருக்குச் சொல்லுகிறாயே!" என்று புகார் பண்ணினாராம்!

கமலா கோட்னிஸ்
தனது அழகிய மேனியை
லக்ஸ்
டாய்லட்
சோப்பினுல்
பாதுகாத்துக்கொள்கிருர்
LUX
LUX TOILET SOAP
சுந்தரவதனி கமலா சொல்வதாவது : "என் மேனி அழகை லக்ஸ் டாய்லட் சோப்பினுலேயே காப்பாற்றிக்கொள்கிறேன். சுத்தமானதும் சௌமியமானதுமான இச்சோப்பின் சுறுசுறுப்பான நுரை சருமத்தை சுத்தம் செய்வதுடன், அப்பழுக்கற்றதாகவும் சோபையுடையதாகவும் வைத்துக் கொள்கிறது. மேனி அழகை முக்கியமாகக் கருதும் ஒவ்வொரு மங்கையும் தவருமல் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகிப்பதை ஒரு பழக்கமாகக்கொள்ளவேண்டும்."
லக்ஸ் டாய்லட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!
LTS. 176-50 TM

அவளுடைய பொக்கிஷம்

சூதக வியாதியினின்று விடுதலையளித்து, புத்திர பாக்கியத்திற்கு உதவிய அருண டானிக்கை தன் அருமைக் குழந்தையைப் போல் பொக்கிஷமாகவும், வரப்ரசாதமாகவும் கருதுகிருள்.

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

அருண

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

உங்கள் பல் வைத்தியர் சொல்லுவார்

பற்களையும், ஈரையும் "மில்க் ஆப் மெக்னீஷியா டூத் பேஸ்ட்" காப்பாற்றுவதுபோல் வேறு எதுவும் கிடையாது. "பிலிப்ஸ் டூத் பேஸ்ட்" பற்களுக்குப் பூரண பாதுகாப்பளிக்கிறது. ஏனென்ருல் இதில் வைத்திய சாஸ்திரத்தில் கண்டுள்ள பற்களைக் கெடுக்கும் துர் நீர்களைச் சமனப்படுத்தக் கூடிய சக்திவாய்ந்த "பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னீஷியா" 75 சத விகிதம் "பிலிப்ஸ் டூத் பேஸ்டில்" கலந்திருப்பதால் பற்களுக்கு பூரணப்பாது காப்பளிக்கிறது. பிலிப்ஸ் டூத் பேஸ்ட் ஒன்றுதான் சுத்தம் செய்தல், பள பளப்பாக்குதல், காப்பாற்றுதல் ஆகிய மூவகை வேலைகளையும் செய்கிறது.

நாசத்தைத் தடுப்பது
பிலிப்ஸின் குணம்

No. 3

'காதல் என்பது சுதந்திரமான ஒரு உணர்ச்சி; அதற்கு எவ்விதமான வரம்பும் கட்டு திட்டமும் கிடையாது' என்ற விஷயத்தை அடிப்படையாக வைத்து ஐம்பத்தொரு வயதுக் கிழவருக்கும் பத்தொன்பது வயதுக் கன்னிக்கும் கல்யாண சம்பந்தத்தை ஏற்படுத்தி எழுதுகிறார் ஆங்கில எழுத்தாளர் ஸ்ரீ ஆல்பிரெட் எச். மைல்ஸ். சுமார் 100 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட அழகான சிறு கதை இது.

காதலும் பிராயமும்

ஆல்பிரெட் எச். மைல்ஸ்

ஜான் ஸ்டர்கஸுக்கு ஐம்பத்தொரு வயதாகிறது. நாற்பத்து ஒன்பது வருஷ பாரத்தையும் பொறுப்பையும் கொஞ்சம் கூடத் திணறாமல் சுமந்துவிட்டு, வயோதிகத்தின் தள்ளாமையைப் பொருட்படுத்தாதவாறு தம் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொண்ட நிலையில் அவர் தம் ஐம்பதாவது வயதில் பிரவேசித்தார். இப்போது ஐம்பத்தொன்று பிறந்துவிட்டது.

இதெல்லாம் அவர் தம் முகத்தைக் கண்ணாடியில் பார்க்கும்போது எண்ணமிடுவது. அவருடைய தலைமயிர் நரைத்து, அங்கொன்று இங்கொன்றாக முராடாக முளைத்திருக்கும். இந்த நரையை மறைத்து மூடவேண்டும் என்று அவர் தொப்பியொன்றும் அணிய முற்படவில்லை. காலத்தின் அடையாளத்தை மறைக்கும் தோரணையில் அவர் தம் நரை மயிர் எல்லாவற்றையும் களைந்த போதிலும் அவை தம் உடலை துருத்திக் கொண்டு முளைத்துவிடும். "அரை நூற்றாண்டு காலம் நாங்கள் எங்கள் உருவத்தைக் காணச் சரியான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்தோம். இப்பொழுது எங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. எங்களை யாரும் மறைத்து வைக்க முடியாது" என்று சொல்வது போல முளைத்திருந்தன அந்த நரை உரோமங்கள். ஜானுடைய சிநேகிதைகளும் அவரை மேற்கண்டவாறு சொல்லிப் பரிகசிப்பார்கள். அவருடைய மனதைக் கவரவேண்டும் என்று இதுவரை எந்தப் பெண்ணும் நினைத்ததுகூடக் கிடையாது. அந்த இளம் பெண்கள் யௌவனம் நிறைந்த தம் காதலர்கள் முன்னிலையில் எவ்வளவோ அடக்கமாக இருப்பார்கள். அந்த மதுரபாவமான அடக்கத்தால் எவ்வளவோ இன்பத்தைத் தம் காதலர்களுக்கு அள்ளிக் கொடுப்பார்கள். ஆனால் ஜான் முன்னிலையில் யாரும் எதையும் அலட்சியமாய்ப் பேசுவார்கள். தங்கள் கன்னிமையின் அந்தரங்கக் காதலை வெளிக்குக் காட்டாதவாறு ஊடல் கொண்டு என்னென்ன சைகைகள் எல்லாம் காட்டுவார்கள்! அதெல்லாம் ஜானிடம் காட்ட என் விரும்பப் போகிறார்கள்?

ஜானுடைய வாலிப வாழ்க்கையின் லீலைகளும் இன்ப துன்பங்

களும் மறைய ஆரம்பித்தன. வாழ்க்கையே அவருக்கு ஒரே வெள்ளைப்போக்காக இருந்தது— ஆம்; அவருடைய நரைஉரோமம் போல்தான்—வயது ஐம்பத்தொன்று அல்லவா?

சில நாட்களுக்கு முன்பு மார்டன் லாட்ஜில் ஒரு டென்னிஸ் பந்தாட்டம் நடந்தது. அங்கே பந்து, வலை முதலியவற்றைப் போட்டுவைக்கும் அறை ஒன்று இருக்கிறது. ஜான், எதற்கோ அந்த அறைக்குள் திடீரென்று நுழைந்துவிட்டார். அங்கே அப்போதுதான் குதித்து விளையாடிவிட்டு வந்த ஓர் அழகான பந்தாட்டக்காரி தன் கூந்தலைக்கோதி ஒதுக்கிக்கொண்டிருந்தாள். முன்பின் எதிர்பாராதவாறு தன் அறைக்குள் யாரோ ஒருவர் நுழைவதைப் பார்த்து அவள் முதலில் திடுக்கிட்டாள். ஆனால் அந்த ஆசாமி ஜான் என்று தெரிந்துகொண்டதும், "ஓ, நீங்களா? பரவாயில்லை" என்று அலட்சியமாகச் சொன்னாள். அப்பொழுதுதான் ஜான் தமக்கு ஐம்பத்தொரு வயதானதைத் தெளிவாக உணர்ந்துகொண்டார்.

ஜானும்கூட ஒரு காலத்தில் ஒருத்தியை காதலித்தார். அதெல்லாம் பழங்கதை. அவருடைய வாலிபப் பிராயத்திலே, ஒரு நாள் ஒரு பெண்ணைச் சந்தித்தார். அவளுடைய இனிய குணபாவங்களை வியந்து வியந்து போற்றினார். மிகவும் தப்பிதமான முறையில் ஆசையை வைத்து அவளைப் பின்தொடர்ந்து அலைந்தார். அவர் அவளை அடைவதற்குப் பிரயோகித்த தந்திரங்களையெல்லாம், ஒரு நகரத்தை வெற்றிகொள்ள உபயோகித்திருந்தால் நிச்சயமாய் வெற்றி கிடைத்திருக்கும். ஆனால் பாவம், ஒரு மெல்லிய, இனிமை பொருந்திய, பெண் இருதயத்தை முற்றுகை போட முயன்றார். பருவகாலங்களைப் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தால் ஜான் திடீரென்று அந்தப் பெண்ணைப் புகழத்தொடங்கிவிடுவார். கடைசியில் தம் லட்சியத்தைச் சீக்கிரம் அடைய வேண்டும் என்ற பரபரப்பினால் காரியம் கைகூடாமல் போய் மனமுடைந்து போனார்.

அவளோ கல்யாணம் செய்துகொண்டாள். யாரை, எந்த இடத்தில் என்ற விபரம் ஒன்றும் ஜானுக்குத் தெரியாது. இது இருபத்தைந்து வருஷத்துக்கு முந்திய சமாச்சாரம்.

சமீபத்தில், ஒருநாள் அவர் ஓர் இடத்தில் நின்றுகொண்டிருக்கையில் அந்தப் பெண் ஒரு மாடியின் ஏணிப் படிகளின் வழியே மேலேறிப் போவதைச் சந்தர்ப்பவசமாகப் பார்த்துவிட்டார். உடனே அந்த ஏணியின் உருவத்தைத் தம் ஞாபகத்தில் பதித்துக்கொண்டார். அது முதல், அவர் தனியாக இருக்கும் பல இரவுகளில் அந்த நினைவு-ஏணி வழியாக அதே வெண்ணிறமான பாதங்கள் ஏறிச் செல்வதுபோல் தோன்றும்; அந்த ஏணியின் கடைசிப் படியை மிதித்துத் திரும்பும்போது அந்த உதடுகளும், கண்களும் அவருடைய காதலைப் புறக்கணித்துவிட்டுச் சென்றுவிடும்.

ஜான் ஒரு நல்ல மனிதர். அவருக்குப் பணஆசைஒன்றும் கிடையாது. எந்த அருமையான பொருளையும் இல்லையென்று சொல்லாமல் தானம் செய்துவிடுவார். அவருடைய தேவைகள் மிகவும் குறைவு. அதுவும் அத்தி

யாவசியமான தேவைகளாகத் தான் இருக்கும். லண்டன் வட்டாரத்திலே, ஓர் இடத்தில் அவருக்குத் தம் சகோதரியுடன், பாகம் செய்துகொண்ட ஒரு நவநாகரிகமான மாளிகையும்,நகரத்திற்குள்ளே இரண்டு சின்ன ஆபீஸ் கட்டிடங்களும் இருந்தன. அந்த ஆபீஸில் ஒரு குமாஸ்தா வேலை செய்துவந்தார்.

இப்போது ஜானுக்கு ஒரு திகைப்பு உண்டாகிவிட்டது. அதாவது அவரிடம் வேலை பார்த்துவந்த அந்தக் குமாஸ்தா, தனக்கு வரும்படி அதிகமாக உயரக்கூடிய வேறொரு உத்தியோகத்தை நாடி தன் வேலையை ராஜிநாமா செய்துவிட்டுப்போய்விட்டார். அதனால் 'டைப்' அடிக்கத் தெரிந்த ஒரு குமாஸ்தாவை நியமிக்க வேண்டி இருந்தது. அதைப் பத்திரிகையில் விளம்பரப் படுத்தினார்.

பழைய காலத்து மனுஷரானதால் பெண் பிள்ளைகளும் 'டைப்' பழகியிருப்பார்கள் என்ற விஷயம் அவருக்குத் தெரியாது. அதனால் குமாஸ்தா வேலைக்கு விண்ணப்பித்துக் கொண்டவர்களில் அநேகர் பெண்களாக இருந்தது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு பெண் குமாஸ்தாவை வேலைக்கு வைத்துக்கொள்ள அவர் நினைத்ததுகூடக் கிடையாது. அதனால் அவர்களுடைய மனுக்களை யெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, மற்றவைகளையும் கவனமாகப் பரிசோதித்து, தம் கையாலேயே கீழ்க்கண்டவாறு பதில் எழுதித் தபாலில் போட்டார்.

''மிஸ்டர் ஸிளாட் எட்ஜ்காமை 10-ம் தேதி வியாழக்கிழமை காலை 11-மணிக்கு 22, கார்ப்ட்ஹால் மாளிகையில் நேரில் காண ஜான் விரும்புகிறார்.''

ஜன நெருக்கமான ஓரிடத்தில் உள்ள ஒரு சிறு வீட்டுக்கு மேற்கண்ட கடிதம் வந்து சேர்ந்தது. அங்கே ஸிளாட் எட்ஜ்காம் என்ற ஆடவர் எவரும் இல்லை. அந்தப் பெயருடையவர் இறந்துபோய் பல வருஷங்களாகி விட்டன. அவருடைய மனைவியும் ஒரு சில மாதங்களுக்கு முன்புதான் இறந்துபோனாள். ஆகவே, ஸிளாட் எட்ஜ்காம் என்ற கல்யாணமாகாத ஒரு பெண்ணின் கையில் தான் அந்தக் கடிதம் கிடைத்தது. அதை விரித்துப் பார்த்த போது ஏதோ ஒரு மோசமான செய்தியைப் பார்த்த மாதிரி அவள் கைகள் படபடவென்று ஆடின. பிறகு அந்தக் கடிதத்தை அவள் தன் மடியில் வைத்துக்கொண்டு அந்தக் கடிதம் சிருஷ்டித்துவிட்ட பிரச்னையைப்பற்றிச் சிந்தனை செய்துகொண்டிருந்தாள்.

எட்ஜ்காமுக்குப் பத்தொன்பது வயது. பத்தொன்பது வயது நிரம்பிய ஓர் ஆங்கிலப் பெண்ணுக்கு இருக்கவேண்டிய அம்சங்களெல்லாம் அவளிடம் இருந்தன. அவள் தன் பிள்ளைப் பிராயத்திலேயே தந்தையை இழந்தவள். தாயும் ஒரு சில மாதங்களுக்கு முன்புதான் இறந்துபோனாள். அவள் இறந்ததும் அவளுக்கு வந்துகொண்டிருந்த வருவாயும் நின்றுவிட்டது. உலகத்தின் நடுவே தன்னந்தனியான தன் நிலையை உணர்ந்து ஜீவனத்துக்கு ஏதாவது வழி தேடவேண்டும் என்று 'டைப்' பையும், சுருக்கெழுத்தையும் கற்றுக்கொண்டாள் எட்ஜ்காம். பத்திரிகைகளில் வெளியாகும் அநேக தேவை விளம்பரங்களைப்

பார்த்து விண்ணப்பித்தும், அவனுக்குக் கிடைத்தது இப்போது வந்த இந்தப் பதில் கடிதம் ஒன்றுதான். அதுவும் விண்ணப்பதார் ஆண் என்று கருதி எழுதப்பட்டதால், அவள் மறுபடியும் ஒரு முறை அந்த விளம்பரத்தையும் ஜானுடைய பதிலையும் வாசித்துப் பார்த்தாள். உடனே விண்ணப்பதாரை ஆண் என்று ஜான் எடுத்துக் கொண்டது பிசகு என்று எழுத நினைத்தாள். கடைசியில் தனக்கு உள்ள கடன்களையும் தான் அவசரமாக வேலை தேடவேண்டிய அவசியத்தையும் நினைத்துப் பார்த்த போது, நேராகவே அவரிடம் சென்று, ஏன் அவர் தம் காரியாலயத்தில் ஒரு பெண் குமஸ்தாவை வேலைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று வாதாடியாவது கேட்கவேண்டு மெனத் தீர்மானித்தாள்.

புதன்கிழமை மாலை. மறுநாள் காலை 11-மணிக்குத் தான் காப்ட்ஹால் தோட்ட மாளிகைக்குப் போகவேண்டியது. ஆனல் முதல் நாள் மாலையிலேயே அது எவ்விடத்தில் இருக்கிறது என்று பார்த்துவரப் புறப்பட்டாள். அன்று மாலையில் சூரியன் ஒளி வீசிக்கொண் டிருந்தான். ஜுன் மாதப் பகலின் உஷ்ணம் ஓய்ந்ததும், ஆகாயம் மனோகரமாகக் குளிர்ச்சி பொருந்தி இருந்தது. அந்த அழகான இளம் பெண் தன் நடையலங்காரத் தோடு ஐந்து மணிக்கு காப்ட்ஹால் தோட்ட மாளிகைக்கு எதிர்ப்புறமாக அமைதியோடு நடந்து கொண்டே பிறருக்குத் தெரியாதவாறு 22-ம் நம்பர் ஆபீஸைத் தேடிப் பார்த்துக்கொண்டு சென்றுள். நீடித்த நாட்களாக மனித நடமாட்டம் அற்றுப் போன இடம் அது. அந்த முற்றத்தில் தன்னுல்தான் அந்த இடத்திற்குத் தோட்டம் என்ற பெயரைத் தேடிக்கொடுத்த, பரந்து கிளைத்திருக்கும் ஒரு பழைய மரத்தில் ஊர்க்குருவிகள் சப்தமிட்டுக்கொண் டிருந்தன. அடர்த்தியான புதர்களிடையே உணவு தேடும் ஒரு மெலிந்த கருநிறப் பூனை ஆரஞ்சுப்பழத் தோல்களை முகந்து பார்த்துக் கொண்டு இருந்தது. அந்தப் பழத் தோல்தான் அந்த இடத்துக்கு வர்ண சௌந்தரியம் அளித்துக்கொண்டு இருந்தது இங்கும் அங்கும் தாமதித்துவிட்ட ஆபீஸ் பையன்கள் கடைசித் தபாலில் சேர்ப்பதற்காகக் கையில் கடிதங்களோடு ஓடிக்கொண் டிருந்தார்கள். சிலர் வாசல் கதவுகளைப் பாதி மூடிவிட்டுத் தரையைப் பெருக்கிப் பாய் விரித்துக்கொண் டிருந்தார்கள்.

ஜான் அன்று 'லண்டன்—பாலம்' ஸ்டேஷனுக்குப் போய் ரயில் கிடைக்காமல் திரும்பி வந்தார். ஒரு தனி ஆளே ஆபீஸ் வேலைகளை யெல்லாம் முடித்து விட்டுக் குறித்த காலத்தில் ரயிலைப் பிடிப்பது என்பது சாமான்யமான காரியமில்லை. அவர் திரும்பி வரும்போது எட்ஜ்காம் அவரை முதல் முதலாகப் பார்த்தாள். அவரும் அவளைப் பார்த்துக்கொண்டார். ஆனல் அவள் தம் ஆபீஸிலிருந்து வெளியே வந்திருந்தால் அவளைச் சற்றுக் கவனமாகப் பார்த்திருப்பார். எட்ஜ்காமுக்கோ, தான் ஒரு தப்பிதம் செய்துவிட்டதாகத் தோன்றியது. தான் குறிப்பிட்ட நாளுக்கு முன்பாகவே அவ்விடத்துக்கு வந்தது ஆபாசமான காரியம் என்றும், மறுநாள் அவரைப் பார்க்கப் போகும் போது அவர் தன்னை அடை

யாளம் கண்டு கொள்ளுவார் என்றும் எண்ணினள்.

ஆனல், அவளைத் தம்மிடம் வரப்போகும் குமாஸ்தா என்று அவர் கருதவே இல்லை. அவர் பார்த்த அந்த அடக்கமும் வேண்டுதலும் நிறைந்த அந்நிய முகம் அவருடைய சிந்தனைகளைப் பல வருஷங்களுக்குப் பின்னல் இழுத்துச் சென்றது. அந்த இடத்தை விட்டு நூறு கஜதூரம் கூடப் போயிருக்க மாட்டார். பழையபடியும் தம் நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்ய, திரும்பவும் அதே வழியாய் நடந்துவந்தார். ஆனல், அந்த அந்நியப் பெண் மறைந்துவிட்டாள். வெறும் தோட்டம்தான் இருந்தது. அவர் நினைவை விட்டுப் பிரியாத அதே முகத் தோற்றம் லண்டன் பாலத்திலிருந்து அவரைத் தொடர்ந்து வந்துகொண்டு இருந்தது. மார்டன் லாட்ஜில் அந்தி நேரச் சிற்றுண்டி அருந்து கையிலும் அந்தத் தோற்றம் அங்கே வந்து அமர்ந்திருந்தது. சுகமான நிலா வெளிச்சத்தில் உலாவும்போதும் அது அவரைத் தொடர்ந்து நடந்து வந்தது. கடிகாரம் 12 மணி அடிக்கும் போது அந்தத் தோற்றம் பழைய ஏணிப் படியின்மேல் ஏறிக் காதலைப் புறக்கணிக்கும் கண்களோடும் உதடுகளோடும் நின்றது.

பத்தாம் தேதி வியாழக்கிழமை காலை சரியாக 11 மணிக்கு எட்ஜ்காம் வந்துவிட்டாள். கிளாட் எட்ஜ்காம் என்ற பெயர் மட்டும் எழுதிய ஒரு காகிதத் துண்டை ஜானுடைய வேலைக்காரன் மூலம் கொடுத்தனுப்பினள். அவன் திரும்பி வந்து, அவளை உள்ளே அழைத்தான்; அவளும் சென்றுள். ஒரு நிமிஷத்தில் ஜான் தம் குமாஸ்தாவை நேருக்கு நேராகவே பார்த்துக் கொண்டார்.

உத்தியோக விஷயமாகப் பேட்டி காண வருவதா யிருந்தால் வருபவருக்குத்தான் படபடப்பும் கஷ்டமுமாக இருக்கும். ஆனல் இப்போது யார் அதிகமாகக் கஷ்டப்பட்டார்கள் என்பதைச் சொல்லவே முடியாது. எட்ஜ்காம், தான் ஒரு பெண்ணயிருப்பதைக் கண்டு அவர் ஆச்சரியப்படலாம் என்று நினைத்து, தான் தேவை விளம்பரத்தைத் தப்பாகப் புரிந்துகொண்டு மனுப்போட்ட விபரத்தை விளக்கி யிராவிட்டால்; அவருடைய உள்ளத்தில் அந்தப் பழைய இரவின் கனவு—ஆயிரத்தொரு இரவுகளுக்கு முன்னல் ஓர் இடத்தில் கண்ட கனவுதான் தோன்றி யிருக்கும்:

ஜானுடைய கண்களுக்கு முன்பாக வந்து நிற்பது ஒரு மாயைத் தோற்றம் அல்ல. எப்படியோ மனதைத் திடப்படுத்திக்கொண்டு, வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை காரணமாக மிகவும் ஆவலோடு வந்திருக்கும் ஒரு அழகான ஆங்கிலப் பெண்தான். எட்ஜ்காம், தனக்கு வேலை கிடைக்காவிட்டால் அது, தான் பெண்ணாய்ப் பிறந்த துரதிர்ஷ்டத்தினல் தான் இருக்கலாமே ஒழிய தன் சாமார்த்தியக் குறைவினல் இராது என்று எண்ணினள். ஆனல் ஜான் அவளைப் பார்ப்பதற்கு முன்னல் ஒரு வேளை பெண் குமாஸ்தா வேண்டாம் என்று நினைத்திருக்கலாம்; அவளைப் பார்த்த பின்பு அவரால் மறுத்துச் சொல்ல முடியுமா?

ஏதோ சில கேள்விகளைக் கேட்டார். அவைகளுக்கு எட்ஜ்

காம் தகுந்த முறையில் பதிலளித்ததைக் கண்டு அன்று முதலே அவள் வேலை செய்யலாம் என்று சொல்லிவிட்டார். அவளுக்கு முன்னால் வேலை பார்த்து வந்த குமாஸ்தாவுக்குக் கொடுத்து வந்த சம்பளமே அவளுக்கும் கொடுக்கப்பட்டது. எட்ஜ்காம், பெண்களுக்கு இவ்வளவு சம்பளம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவே இல்லை. பெண் குமாஸ்தாக்களுக்குச் சம்பளம் குறைவாகத்தான் இருக்கும். ஆனால் அவர் சம்பள விஷயத்தைப் பற்றிச் சிந்திததாரில்லை. எட்ஜ்காமை அவர் வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது என்று வாசகர்கள் சொல்லலாம். ஆனால், அவர் இந்த விஷயத்தில் முற்றிலும் சக்தி யற்றுத்தான் இருந்தார். அவளேதான் வேலைக்கு வந்து அமர்ந்து கொண்டாள்.

2

ஆபீஸில் வேலை, அதாவது வியாபாரம் ஒழுங்காக நடந்து வந்தது. கணக்கு முடிக்கும் நாட்களில் கூட ஒருவிதப் பரபரப்புக் கிடையாது. உலகம் எக்கேடு கெட்டாலும் ஜானுடைய உள்ளத்தின் சாந்தி குலையவே குலையாது. அவருடைய ஆபீஸில் பித்தளையால் செய்யப்பட்ட போர்டு ஒன்று தொங்கிக்கொண்டிருக்கும். அதில் (எழுத்துக்களில்) சூரிய கிரணங்கள் பட்டுப் பிரகாசிக்கும். அவருடைய விலாசத்துக்கு அநேக கடிதங்கள் வரும். அவைகளுக்கு உடனுக்குடன் பதில் கடிதங்கள் எழுதப்படும். இந்தக் குமாஸ்தாவின் நல்வரவால் ஆபீஸில் குறித்த காலத்தில் வேலை பாக்கி விழாமல் செய்து முடிக்கப் படுவதைத் தவிர, அங்கே ஆபீஸ் ஒழுங்கு முறையில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை.

ஆனால் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை என்று சொல்ல முடியாதுதான். மார்டன் லாட்ஜின் புஷ்பங்கள் வெகு அழகானவை. முன்பெல்லாம் ஜான் அந்த மலர்களில் சிலவற்றைத் தம் கோட்டின் பொத்தான் துவாரங்களில் தினந்தோறும் செருகிக்கொள்வது வழக்கம். ஆனால் இப்பொழுது புஷ்பங்களை அதிகமாக செருகி கொள்வதோடு, ஆபீஸில் அலங்காரமாக வைப்பதற்காக பூக்கள் பறிப்பதும் அவருடைய காலைக்கடன்களுள் ஒன்றாய் விட்டது. அவர் இந்த இனிய கடமையை வெகு கவனமாகத் தாமே நிறைவேற்றி வைப்பார். இந்த மலர்களை வைப்பதற்கு அழகான கண்ணாடிக் கூஜாக்கள் வாங்கவேண்டி யிருந்தது. (இந்த வேலைக்கு ஒரு பெண் குமாஸ்தா எவ்வளவு லாயக்கானவள்!) அந்தக் கூஜாக்களை ஒழுங்கான வரிசையில் வைக்கவேண்டியதும் அவசியம். (ஒரு பெண்மணியின் விரல்களுக்குத்தான் எவ்வளவு பொருத்தமான வேலை!) இதனால் சில புதுச்செலவுகள் முளைத்தன. ஏதாவது ஒரு பூஞ்செடி பாழாகி வாடத்தொடங்கினால், அது எட்ஜ்காமின் அன்பான கைகளால் தடவிக் கொடுக்கப்பட்டால் பழையபடியும் வளரத்தொடங்கி விடும். ஆகவே, மார்டன் லாட்ஜின் இரண்டு அறைகளிலுமுள்ள மேஜைகள் எட்ஜ்காமின் புஷ்ப சாஸ்திர ஞானத்திற்கும், அவளுடைய கைவேலையின் திறமைக்கும் சான்றுகளாக இலங்கின.

அவளும் ஜானும் இருக்கும் இரண்டு ஆபீஸ் அறைகளுக்கும்

இடையில் ஒரு கதவு உண்டு. அது எப்பொழுதும் பாதிக்கு மேலேயே திறந்திருக்கும். அதை அடைக்கவேண்டும் என்று ஒருவரும் ஒருபோதும் நினைத்தது கிடையாது. முன்பு தம் ஆபீஸ் அறைக்குள் குமாஸ்தாக்கள் நுழைந்தால் ஜானுக்கு எரிச்சலாக இருக்கும். இப்போது அந்தக் குணம் அவரைவிட்டுப் போய்விட்டது.

இன்னும் ஒரு புது விஷயம் இங்கே வந்து புகுந்தது; வெகு முக்கியமான விஷயம். பகல் நேரத்தில் ஜான் வெளியே சென்றிருக்கும்போது எட்ஜகாம் தனக்கு, ஒரு கோப்பைத் தேநீர் தயார் செய்து கொள்ளுவது வழக்கம். ஒரு சமயத்தில் தாம் மறந்து போய் வைத்து விட்டுப் போன சில கடிதங்களை எடுப்பதற்காக ஜான் திரும்பி வந்தபோது அவள் தேநீர் தயாரிப்பதைப் பார்த்துக் கொண்டார். அது பற்றி அவர் ஒருவித ஆக்ஷேபமும் செய்யவில்லை. ஆனால் ஒன்றே ஒன்று. அதாவது அவள் வழக்கம் போல் தேநீர் தயார் செய்யும் நேரத்திற்கு ஒரு மணி முன்னதாகவே தயாரிக்கச் சொன்னார். ஒரு கோப்பைக்குப் பதிலாக, இரண்டு கோப்பைகள் தயார் செய்யவேண்டும் என்றும் சொன்னார். ஆனால் இப்படிப்பட்ட விஷயங்கள் ஏதாவது ஒரு திடீர் நிகழ்ச்சிக்குக் காரணமாய் இருப்பது வழக்கமில்லை. ஒரு சில நாட்களுக்கு அப்புறம் காப்ட்ஹால் தோட்ட மாளிகையில் முன்பின் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்துவிட்டது. ஒரு நாள் ஜானின் கோப்பை, நிறையத் தேநீரோடு கீழே தவறி விழுந்து உடைந்துவிட்டது. அதற்குப் பதிலாகத் தன் வீட்டிலிருந்து ஒரு பீங்கான் கோப்பையைக் கொண்டுவந்து வைத்துக் கொண்டாள் எட்ஜகாம். ஷரப்பரி ரோட்டிலுள்ள ஒரு வீட்டின் ஒரு புராதனமான பாத்திரம் காப்ட்ஹால் மாளிகையின் உபயோகத்துக்குப் பயன்படுத்தப்பட்டது.

ஆனால் புதிதாக வந்த இந்தப் பழைய கோப்பையைக் கண்டதும் ஜானுக்குப் பிரமித்துப் போய்விட்டது. அவர் முன்னமேயே அதைப் பார்த்திருக்கிறார். அதில் உள்ள ஒரு சிறு தவாரத்தைக்கொண்டு அதை உடனே அடையாளம் கண்டு கொண்டார். பதினாயிரம் கோப்பைகளின் நடுவில் வைத்தாலும் அதை அவர் உடனே கண்டுபிடித்து விடுவார். தம்மைப் பரிகசிக்கும் அக் கோப்பையை இருபது நிமிஷங்கள் வரை கூர்ந்து பார்த்தார். அவருக்கு இருபது வருஷங்களுக்கு முந்திய விஷயங்கள் ஞாபகத்துக்கு வந்தன. முன்பு ஒரு நாள், அதே பீங்கான் கோப்பையில் அவர் தேநீர் அருந்துகையில், எட்ஜ்காமின் தாயார் அவரிடம், 'நாம் ஒருவருக்கு ஒருவர் பொருத்தமாக இல்லை' என்றும், 'நம் நட்பை நீக்கிவிட்டால் நன்றாக இருக்கும்' என்றும் சொன்னாள். அதிலிருந்து அவருக்குப் பீங்கான் கோப்பையின் மீது பரிபூரணமான வெறுப்பு. ஆகவே தற்போது அந்தக் கோப்பையைக் கையில் வாங்கும்போது நழுவ விட்டுவிட்டார். எட்ஜ்காம் தன் வெளி அறைக்குத் திரும்பிப் போனதும் கதவை அடைத்து விட்டார். அப்புறம், தம்முடைய அஜாக்கிரதையின் காரணத்தை விளக்கவோ, அல்லது அதற்காக மன்னிப்புக்

கேட்கவோ வேண்டியதிருக்கும் என்று நினைத்தார்.

ஜான் ஓர் உண்மையான மனிதர். தம்முடைய பழைய காதலியின் மகளாகிய எட்ஜ்காமைப் பொறுத்த மட்டிலும் மிகவும் உண்மையாக இருந்தார். அவளிடம், தாம் மிகவும் பிரியமாக நடந்துகொண்டதைத் தவிர அவளுடைய தாயாருக்கும் தமக்கும் உள்ள சிநேகிதத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. அவளுக்கோ ஜான் தன்னை ஒரு வேலையில் அமர்த்தித் தாராளமான சம்பளம் கொடுத்துத் தன் ஒண்டி வாழ்க்கையின் கஷ்டத்தை நிவர்த்தி செய்த ஒரு நேர்மையான புருஷர் என்பதைத் தவிர, வேறு ஒன்றும் தெரியாது. அவர் அவளுக்கு அநேக புத்தகங்களைப் படிக்கக் கொடுத்து அவள் ஏகாந்தத்திற்கு இன்பம் ஊட்டுவார். புஷ்பங்களைக் கொடுத்து வேலையில் உற்சாகமாய் இருக்கச் செய்வார். சிநேகிதத்தன்மையின் வரையறையைக்கடந்து பின்னும் அதிக பாந்தவ்யத்தோடு அவர் பழகும் சமயத்தில் அவருடைய சுயநலமற்ற அன்பை அவள் போற்றுவதைக் கண்டார். அது போலவே சுயநலமற்ற காதலுக்கும் ஏதாவது தடங்கல் இருந்ததாகத் தோன்றவில்லை. ஆனால் அவளை ஒரு தற்காலிக ஏற்பாடாகத்தான் வேலைக்கு வைத்துக் கொண்டது; அதாவது ஒரு நல்ல ஏற்பாடு புலப்படும் வரை.

அவர் எட்ஜ்காமிடம் தம் ரகசியத்தை மரணபரியந்தமும் வெளியிடக் கூடாது என்ற உறுதியோடு இருந்தார். தம்முடைய பழைய காதலிக்காக எட்ஜ்காமுக்கு இயன்ற அளவு நன்மை செய்யத் தீர்மானித்தார். தம் காதலியின் மகள் எதிர்காலத்தில் எவரிடத்திலும் எவ்வித உதவியையும் நாடாதிருக்கும் பொருட்டு அவளுக்கும் ஒரு வருவாய் தேடிக் கொடுக்கத் தம் மரண சாஸனத்தில் ஒரு குறிப்பு எழுதி வைத்தார். காப்ட்ஹால் தோட்டம் தம்மை இழந்து, தம் சொத்துக்களை எல்லாம் மரண சாஸனத்தைப் பரிசீலனை செய்வோர் கைப்பற்றி, எட்ஜ்காமிடம், 'ஜான் உன் ஜீவனும் சத்துக்கென்று ஒரு சிறு வருஷாந்திர வரவைத் தேடிக் கொடுத்துள்ளார்' என்று சொல்லும் ஒரு காலத்தைத் தம் மனதில் கற்பனை செய்து பார்ப்பார். ஆனால்,...அதெல்லாம் எதற்கு? இப்போதிருந்த மாதிரியே ஏன் வாழ்க்கை நடந்து வரக்கூடாது?

ஆனால், தம்முடைய சக்தியை அவர் சரியாகக் கணக்குப் போட்டுப் பார்க்கவில்லை; இது வரையும் வெற்றிடமாயிருந்த அவர் உள்ளத்தில் பழையபடியும் சிந்தனைகள் குவியத் தொடங்கின. முன்னால் தம் காதலியை அவர் பார்த்த ஓக்—மர ஏணி இப்போது 22-ம் நம்பர் காப்ட்ஹால் மாளிகையாக உரு மாறி விட்டதுபோல் தோன்றியது. அந்த ஏணியில் மிதித்து நடந்து செல்லுபவை முன்போலில்லாமல் சின்னஞ் சிறு நடன பாதங்களாக மாறின. ஏணி யுச்சியிலிருந்து எட்ஜ்காமின் முகம் தோற்றமளிப்பது அவருடைய இருதயத்தில் ஒரு புது நாள் பிறந்து சூரியோதயம் ஆவது போல் இருந்தது. இப்போது அவர், தாம் ஏணியின் அடியிலேயே நின்று கொண்டிருக்க முடியாது என்பதை உணர்ந்தார். ஒன்று, முன்னேறிப் போகவேண்டும்; அல்லது பின்

நோக்கித் திரும்பவேண்டும். காலம் ஓடிக்கொண் டிருக்க அவர் மனக் குழப்பமும் அதிகரித்துக்கொண்டு வந்தது.

எட்ஜ்காம்,ஜானிடம் வேலைக்கு வந்து ஆறு மாதங்கள் ஆகின்றன. அன்றுதான் அவர் முதல் முதலாக அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் வெளியே சென்றது.

மறுநாள், காப்ட் ஹால் மாளிகையில் ஒரே பரபரப்பு. மேஜைமீது இருக்கும் புஷ்ப ஜாடிகள் கூட ஏதோ அவசர வேலை செய்பவை போன்று படபட என்று ஆடின. அந்தப் பெரு நகரில் அநேக ஆபீஸ்களில் தபால் எழுதும் நாள் அதுதான். ஜான் தம் வேலையை முதலில் முடித்து, ஆபீஸைப்பூட்டிவிட்டுக் கடிதங்களைக் கொடுக்கும்போது இதுவரைக்கும் எட்ஜ்காமுக்கு ஏதாவது தாம் செய்த உபசரணைகளில் குறைவு நடந்திருந்தால் அந்தக் குறையை நிவர்த்திப்பவர் போல் இரட்டிப்பு கௌரவத்தோடு உபசரித்து அவளை வீட்டுக்கு அனுப்பினார். எட்ஜ்காம், பெட்டியைப் பத்திரமாக பூட்டிவிட்டு ஜானுடைய அந்த ரங்கக் கடிதங்களையும் எடுத்து யந்திரம் போல அவற்றிற்கு 'ஸ்டாம்ப்' ஒட்டி அவற்றைத் தன் பையில் போட்டுக்கொண்டு தன் வீட்டுக்குச் செல்லும் வழியில் உள்ள லாம்பர்டு தெரு தபால் ஆபீஸுக்குப் புறப்பட்டாள். அங்கே சென்று வெளியிடங்களுக்குப் போகும் கடிதங்களையும் உள்ளூருக்குச் செல்லும் கடிதங்களையும பிரித்தாள். அவற்றில் அந் நகரத்திலேயே ஒரு பாகத்துக்குச் செல்லும் கடிதம் ஒன்றைப் பார்த்தாள். அது ஜானுடைய கையாலேயே "எட்ஜ்காம், ஷ்ரப்பரி சாலை, டால்ஸ்டன்" என்று விலாசமிடப் பட்டிருந்தது. இதைக் கண்டதும் அவளுக்கு ஆச்சரியமும் பரபரப்பும் உண்டாகி விட்டது. ஜான், தன்னை ஏதோ சில காரணங்களை முன்னிட்டு வேலையிலிருந்து நீக்கத் தீர்மானித்ததாகவும், தம் தீர்மானத்தை இந்த மாதிரி கடிதத்தின் மூலம் வெளியிட் டிருக்கலாம் என்றும் அவள் எண்ணினாள்.

குமாஸ்தா உத்தியோகம் எட்ஜ்காமுக்குப் பிடித்தமாக இருந்தது. தன் எஜமானரை மிக அன்போடு கௌரவித்தாள். அவளுடைய சம்பளம் அவளுக்குத் தேவையான செலவுகளுக்கெல்லாம் கட்டி வந்தது. தவிரவும் அவள் தபால் ஆபீஸ் சேமிப்பு நிதியில் போட்டு வரும் தொகையும் அதிகரித்துக் கொண்டு வந்தது. தன் வேலையை இழந்து, வேறு ஏதாவது ஒரு வேலைக்கு முன் போலவே பத்திரிகை விளம்பரங்களை நம்பிக்கை இழந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய கஷ்டத்தை அவள் நினைத்துப் பார்த்தபோது அப்படியே அவளுடைய கன்னங்களில் ரத்த ஓட்டம் நின்று விட்டது; கண்களும் சொருகி விட்டன. அப்போது ஆறு மணி என்பதற்கு அடையாளமாகக் கன்னிமரியா கோவிலில் அடித்த மணியோசை கேட்டிராவிடில் அவள் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்திருப்பாள். மணியடித்ததும் தன் வேலையின் மீது அவள் கவனம் சென்றது. உடனே கடிதங்களை எல்லாம் தபால் பெட்டிக்குள் போட்டாள்; ஆம், தனக்கு வரப்போகும் அந்த கடி

தத்தையும் பெட்டியில் போட்டு விட்டாள்.

அடுத்த ஒரு மூன்று நான்கு மணி நேரம் அவளுக்குப் பரபரப்பாக இருந்தது. தன்னுடைய கஷ்டங்களை எல்லாம் கற்பனை செய்து பார்த்தாள். அந்தக் கடிதத்தைத் தபால் பெட்டியில் போட்டுவிட்டு அதை மறுபடியும் பத்து மணித் தபாலுக்கு ஷ்ரப்பரி ரோட்டிலிருந்து தான் வாங்கப் போகும் அந்த நாலு மணி நேரத்தில், அவள் தன்வாழ்க்கைப் படிகளில் மடந்தைப் பிராயத்திலிருந்து விருத்தைப் பிராயத்திற்கு அகன்றதொரு அடி வைத்துத் தாவிய மாதிரி கிழடு தட்டிப் போனாள். இப்படி பெருங் கவலை அவளை வாட்டியது அவள் தன் தாயாரை இழந்த போதுதான்.

ஆம். இந்தக் கஷ்டத்திலிருந்து தப்ப வழியில்லை. அந்த உயிர் வதைக்கும் கடிதம் பலருடைய கைகளையும் கடந்து தன் கைக்குக் கிடைக்கும் வரை பேசாமல் காத்திருக்க வேண்டியதுதான். அவள் வீட்டை நோக்கி நடந்து செல்லும்போது வீசிய இரவு நேரத்துக் குளிர் காற்று அவளுக்குக் கொஞ்சம் தெம்பு கொடுத்தது. தன்னால் ஆன மட்டும் முயற்சி செய்தாவது வேலையை விட்டுவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தாள். ஷ்ரப்பரி ரோட்டை அடையுமுன்பே, தான் இன்னும் வாசித்துப் பார்க்காத அந்தக் கடிதத்திற்கு இரண்டு மூன்று விதமான பதில் கடிதங்களை மனதுக்குள்ளேயே தயாரித்து வைத்துக் கொண்டாள். அந்திநேரச் சாப்பாட்டு நேரத்துக் கப்புறம் (ஆனால் அவள் அன்று சாப்பிடவில்லை) அவள் தன் கையால் எழுத வொண்ணாத எண்ணங்களையெல்லாம் கடிதத்தில் கொட்டுவதற்காக உட்கார்ந்தாள்.

ஏதோ கொஞ்சம் எழுதினாள். துக்கத்தால் பீடிக்கப்பட்டிருந்தாலும் அவள் தன் மனோதிருப்தியை இழந்துவிடவில்லை. தன்னுடைய வேலையில் எப்போதும் அசட்டையாய் இருந்ததாக அவளுக்கு ஞாபகமில்லை—அவளுக்கு ஏற்றபடி வேறு ஏதாவது வேலைகள் இருக்கின்றனவா?—பின்னும் ஒரு முறை அவர் சந்தர்ப்பம் அளிக்க மாட்டாரா?—உம்—அப்புறம்?—அதை அவள் எழுத விரும்பவில்லை. ஆனாலும் எழுதினாள்—ஒருவேளை குறைந்த சம்பளத்திற்கு அவர் அவளை வேலைக்கு எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?

கடைசியில், அந்தக் கடிதம் வந்து சேர்ந்தது. தபால்காரன் வந்ததும் கதவண்டை ஓடிப் போய்க் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு, அவன் நகருவதற்கு முன்பே வீட்டுக்குள் ஓடி வந்தாள். வந்ததும் கதவைத் தாளிட்டுவிட்டு ஏக்கமும் பெருமூச்சுமாக ஈஸிச்சேரில் போய் விழுந்தாள்.

அந்தக் கடிதத்தின் வாசகம் முற்றிலும் ஆச்சரியகரமாக இருந்தது. உண்மையான விஷயங்களைத் தொகுத்த ஒரு அறிக்கையாகவே இருந்தது:

"அன்பு மிக்க கிளாட் எட்ஜ்காமுக்கு,

"எனக்கு இப்போது ஒரு கஷ்டம் நேர்ந்துள்ளது. அதை உன் உதவியில்லாமல் தவிர்க்க முடியாது. இதை நீ நன்றாகக் கவனிக்க வேண்டும். என் ஆபீஸில்

நீ நிறைந்து காட்சி யளித்த மாதிரி என் உள்ளத்திலும் நிறைந்து விட்டாய். என்னுடைய ரகசியம் ஒன்றை உனக்குத் தெரியப் படுத்தக் கூடாது என்று முயற்சி செய்து பார்த்தேன். ஆனால், என்னால் அது இயலவில்லை. அதை உனக்கு வெளியிடுவதன் மூலம் நம் மிருவரிடையே தடங்கலாக ஒரு பெரிய மதில் கிளம்பும் என்று லும், அதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"எட்ஜ்காம்! உத்தியோகமில்லாமல் சம்பளம் கொடுப்பதையோ, அல்லது சில சந்தர்ப்பங்களில், சம்பளம் கொடுப்பதற் காகவே உத்தியோகத்தில் வைத்துக் கொள்வதையோ சமூகம் சம்மதிக்காது. சம்மதிக்குமோ சம்மதிக்காதோ, நீ பழையபடியும் உலகத்தை எதிர்பார்த்துக் கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தால் அது என் குற்றமல்ல என்று உறுதியாக அபிப்பிராயப் படுகிறேன். ஆனால் நீ உன் வாழ் நாட்களைக் கழிப்பது எப்படி என்று என்னிடம் உதவி நாடி வந்தால், நான் உன்னிடம் மிக்க விசுவாசம் வைத்து உதவி செய்யத் தயாராய் இருக்கிறேன். பழையபடியும் நீ இந்த வேலையில் அமர்ந்திருக்க இஷ்டப்பட்டால் அப்படியே செய்து கொள்ளலாம். ஆனால் நம்மிடையே ஏற்பட்ட இந்தச் சிறு மாறுட்டத்தை வெளிக்குக் காட்ட வேண்டாம். நீ அடக்கத்தோடு ரகசியத்தைக் காப்பாற்றுவாய் என்ற நம்பிக்கையின் பேரில் இதைச் சொல்லுகிறேன். என்னுள்ளே இருக்கும் ஒரு உணர்ச்சியை உனக்குக் காட்டாமல் இனி நாம் ஒருமித்த சிந்தையில் வாழ் நாட்களைக் கழிக்க முடியாது என்ற எண்ணம் எனக்கு விழுந்து விட்டது.

"எட்ஜ்காம்! நான் ஒரு வாலிபனு யிருந்தால் உன்னை யார்டன் லாட்ஜில் வேலைக்கு வைத்துக் கொள்ளுவேன். அங்கே பூஞ்செடிகளைச் சீர்திருத்திக் கவனத்தோடு பரிபாலனம் செய்வதற்கு ஆள் வேண்டி யிருக்கிறது. அந்த வேலைக்கு உன்னைத் தவிர வேறு யாரும் லாயக்கில்லைதான். ஆனால் நானோ நாளுக்கு நாள் முதுமையை அடைந்து கொண்டு வருகிறேன். நீயோ ஒரு இளம் நாயகனின் கை பிடித்து அவனோடே வாழ்க்கையின் இன்பானுபவங்களை யெல்லாம் அனுபவித்து, அவனுடைய பாதுகாப்பிலேயே வாழ்வின் கொந்தளிப்பையும் போராட்டத்தையும் கடக்க வேண்டியவள். அதனால் நீ மனம் வைக்கும் காதலன் யாராவது இருந்தால், இப்பொழுதோ அல்லது பின்போ அவனோடு சந்தோஷகரமாக வாழ்க்கை நடத்த எண்ணி யிருந்தால், என் சக்திக்கு இயன்ற வழிகளில் உன் ஆசைக் கனவுகளை யெல்லாம் பலிதமாக்குவதே என் மா பெரும் இன்பம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

இவரைவிட அவளுக்கு வேறு எந்த உண்மையான மனிதன் கிடைக்கப் போகிறானே!

மறு நாள் ஜான் தாமே ஆபீசைத் திறந்தார். நாலு மணிக்குச் சாப்பிடும் தேநீர் அன்று அவருக்குக் கிடைக்கவில்லை. மாலை ஐந்து மணிக்கு ஆபீஸைப் பூட்டி விட்டுத் தாமே தம் காவற்காரனிடத்தில் சாவியைக் கொடுத்தார். கடிதங்கள் சம்பந்தப்பட்டவைகளில்—நல்ல வேளையாக அன்று தபாலில் போட வேண்டிய கடிதங்கள் அதிகமில்லை—அன்றைய தினம் அவர் என்றும் காணுத மாதிரி மிகவும் சோம்பலாக இருந்தார். பூஞ்செடிகளுக்குக்கூட அன்று சோம்பல் ஏறிவிட்டது போல், அவைகளைப் பார்க்கையில் சாக்கடைத் தண்ணீர் போலவும் சமாதிக் குழிகளைப் போலவும் தோன்றின. அந்த ஆபீஸில் அங்கும் இங்குமாக நகர்ந்துகொண்

டிருந்தது ஜான்தான். பகல் எல்லாம் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்கு முன்னும் பின்னுமாக உலாவிக்கொண்டிருந்தார்.

எட்ஜ்காம் தனக்குச் சொந்தமான அநேக சாமான்களை ஆபீஸின் வெளி அறையில் வைத்து விட்டுப் போய்விட்டாள். அவைகளெல்லாம் இப்போது ஜானுடைய கவனத்தைக் கவரும் வஸ்துக்களாகிவிட்டன. அவற்றில் பழையமணி பர்ஸு ஒன்று. அதனுள்ளே எட்ஜ்காம் ஸ்டாம்புகளை வைத்திருப்பாள். அவர் அதில் ஒரு பவுன் நாணயத்தைப் போட்டு வைத்தார். இதோடு அவர் தம் பிம்பத்தைக் கண்ணாடியில் பார்க்கையில் "எவ்வளவு கிழடுதட்டிப் போனேம்" என்று நினைத்துக் கொண்டார்.

மறுநாள் ஜான் தமக்குத் தாமே குமாஸ்தாவாக இருந்தார். எட்ஜ்காமிடமிருந்து ஒரு பதிலும் வராததால் அவருக்குப் பதற்றம் உண்டாகிவிட்டது. அதனால் ஒரு தீர்மானம் செய்தார். மறுநாள் முதல் தபாலில் அவளிட மிருந்து ஒரு தகவலும் வராவிட்டால் தாம் நேராகவே அவளுடைய இருப்பிடத்திற்குச் சென்று விசாரித்து வர வேண்டும் என்று தீர்மானித்தார்.

அடுத்த நாள் பத்தரை மணி வரையில் ஒரு கடிதமும் காணும். உடனே ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு டால்ஸ்டன் என்ற அவளுடைய வாசஸ்தலத்திற்குச் சென்றார். அவர் எத்தனையோ அதிர்ச்சிகளைச் சமாளித்திருக்கிறார். ஆனால் இதைச் சமாளிக்க முடியவில்லை. அவளுடைய பக்கத்து வீட்டுக்காரி ஒருத்தி ஜானிடம், எட்ஜ்காம் முதல் நாள் தான் யாதொரு விலாசமும் கொடுக்காமல் வீட்டை விட்டுச் சென்றதாகவும், ஒரு சரியான இடத்தில் நிலைப்பான ஒரு வேலையில் அமர்ந்ததும் விலாசத்தைத் தெரிவிப்பதாகச் சொன்னதாகவும் சொன்னாள். மேலும், "ஐயா, அவள் மனோ தைரியம் உடைய பெண் தான் என்றாலும் மிகவும் மனசு நொந்து போயிருந்தாள். என்ன இருந்தாலும் சிறிசுதானே! நல்ல காரியம் ஏதாவது நடந்திருந்தால் சந்தோஷப் பட வேண்டியதுதானே முறை? அழுவார்களா?—ஆனால் அவள் அழுது கொண்டே இருந்தாள். எங்கிருந்தோ அவளுக்கு ஒரு கடிதம் வந்தது. அதுதான் அவளை இப்படி வாட்டிவிட்டது. என்னைக் கூட அந்தக் கடிதம் வாட்டி எடுத்து விட்டது, ஐயா. அவளுக்கு ஒரு நல்ல இடத்தில் கிடைத்திருந்த வேலை போய் விட்டது. அதோடு ஒரு நல்ல முதலாளியினுடைய தொடர்பையும் இழந்துவிட்டாள்" என்று சொன்னாள்.

ஜானுக்கு ஒரே குழப்பமாய் விட்டது. காப்ட்ஹால் மாளிகையை நோக்கி அவர் திரும்பிச் செல்லுகையில், அவருடைய உள்ளத்தில் ஒன்றன்பின் ஒன்றாகப் பயமுறுத்தும் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன. அவர் அவளைத் தேடிக் கண்டு பிடிக்க ஒரு போலீஸ் ஸ்டேஷனில் தகவல் கொடுக்கலாம்; ஒரு துப்பறிவோனை நியமிக்கலாம்; 'டைம்ஸ்' பத்திரிகையில் விளம்பரம் செய்யலாம்—ஆனால் அவருக்கு ஒரு வழியும் தோன்றவில்லை.

ஆபீஸுக்கு வந்ததும், அவர் வெளியே போயிருந்த சமயத்

தில் அவர் விலாசத்துக்கு வந்த கடிதம் ஒன்று அங்கே கிடந்ததைப் பார்த்தார். ஷ்ரப்பரி ரோட்டி விருந்துதான் அது எழுதப்பட் டிருந்தது. அதை எட்ஜ்காம் டால்ஸ்டனை விட்டுக் கிளம்பியபின் தபாலில் போட் டிருக்கிருள். கடிதம் வெகு சுருக்கமாக இருந்தது:

"ஷ்ரப்பரி ரோடு,
"டால்ஸ்டன்

"ஜான் அவர்களுக்கு,

"தாங்கள் என்மீது காட்டிய அன்புக்கு என் வணக்கம். அதிலும் பல கஷ்டமான நிலைமைகளிலும் எனக்கு உதவி புரிந்ததற்கு என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தாங்கள் எனக்கு எவ்வித உதவிகளெல்லாம் செய்திருக்கிறீர்கள்! என் தாயாரை அறிந்தவரும் காதலித்தவருமாகிய தங்கள் மீது யான் கொண்ட மதிப்பு எக்காலத்திலும் அழியாது. ஆனல் என்னைப் பொறுத்த மட்டிலும் தங்களுக்குத் தொந்தரவைக் கொடுக்காதிருப்பதற்கு, நான் தங்கள் பார்வைக்கும் கேள்விக்கு மெட்டாத ஓர் இடத்தில் வாழ்வதே நல்லது. வள்ளல் போன்ற உங்கள் குண விசேஷத்துக்கு என் வணக்கம்.

"நான் திக்கில்லாமல் ஒன்றும் தவிக்கவில்லை. எப்படியும், முன் போல் அவ்வளவு சந்தோஷகரமாக இல்லாவிட்டாலும், ஒரு வேலை தேடிக் கொள்ளுவேன். அதன் மூலமாக, என் மதிப்பிற் குரிய ஒருவருக்குத் தொந்தர வளிக்காமல் இருந்துகொள்ளலாம் அல்லவா? என்னுடைய நீக்கத்தால், முன்னறிக்கையின்றி நான் விலகியதால் காப்ட்ஹால் மாளிகையில் தற்காலிகமாக அசௌகரியங்கள் உண்டானல், அதற்காக என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன், ஆனல் என்னைத் தியாகம் செய்வதினலாவது, தாங்கள் நிரந்தரமான சௌகரியங்களை அடைவீர்கள்என்று நம்புகிறேன்."

அன்றையத் தினம் கிறிஸ்து மஸுக்கு முதல் நாள் மாலை. எட்ஜ்காம் கடிதம் கிடைத்து. அன்றோடு ஒரு வாரம் ஆகிறது. காப்ட்ஹால் தோட்ட மாளிகையில் ஜான் தனியாகத் தம் ஆபீஸ் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். ஒரு புதிய குமாஸ்தாவை நியமிக்கவோ அல்லது பழைய குமாஸ்தாவைத் தேடவோ அவர் யாதொரு முயற்சியும் செய்யவில்லை. அதாவது தம் சுகத்துக்காகவோ அல்லது அவள் சுகத்துக்காகவோ ஒன்றும் செய்ய முற்படவில்லை. அந்தி மயங்கி இரவு வந்து கொண்டிருந்தது. அவர் விளக் கேற்றவில்லை. ஆனல் மேஜைமீது முழங்கைகளை ஊன்றி அவற்றில் தம் நாடியைத் தாங்கிய வண்ணம் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருக்கும் மிகவும் துயரமாக இருந்தது. காப்ட்ஹால் மாளிகையி லிருந்து கொண்டே இப்படிக் கவலைப்பட்டுக்கொண் டிருப்பதைவிட, மார்டன் லாட்ஜுக்குப் போவோமே என்று தோன்றியது அவருக்கு.

அப்போது, காப்ட்ஹால் மாளிகையின் மறு பக்கமாக ஒரு அழகிய இளம் பெண் 22-ம் நம்பர் ஆபீஸ் ஜன்னலைப் பார்த்துக் கொண்டே வந்தாள். இதை ஜான் பார்க்கவில்லை. அந்தப் பெண் அந்த ஆபீஸில் பல சிறு சாமான்களை வைத்துவிட்டுப் போய்விட்டாள். சாயங்காலத்துக் கப்புறம் ஜான் வெளியே போனதும், காவற்காரன் அனுமதியைப் பெற்று அவற்றை எடுத்துக்கொண்டு போகலாம் என்று நினைத்து வந்தாள் அவள்.

பாதை சரியாகத் தெரிகிறதா என்று ஜன்னலை எறிட்டுப் பார்த்தாள்.

நீண்டதொரு பெருமூச்சு விட்டுக்கொண்டு மேலே பார்த்த வண்ணம் தன் காரியத்தின் நிமித்தம் ஏணி வழியாக ஏறிச் சென்றாள். ஜான் அங்கே இருக்கச் சகிக்காமல் மார்டன் லாட்ஜுக்குப்போகலாம் என்று ஆபீஸைப் பூட்டிவிட்டுக் கீழே இறங்கி வந்தார்.

பொதுவாக ஏணிப் படிகளிலே ஏதோ ஒரு உயிர் வதைக்கும் சக்தி இருப்பதாக அவருக்குத் தோன்றியது; முன்னும் அப்படித்தான், ஒரு பழைய ஓக் —மர ஏணிப் படியில் வைத்துத் தான், தம் பழைய காதலிக்குக் கடைசி விடை கொடுத்தனுப்பினார். அப்புறம் தம் புதுப் பிரியையின் பாதங்களோடு நெருங்கிப் பழகியதும் அதே ஏணிப் படிகள் தான். கீழே இறங்கி வந்தார்.

இருவரும் சந்தித்து விட்டார்கள். ஒரு பிசாசுகூட இந்தச் சந்திப்பு மாதிரி அவர்களைப் பிரமிக்க வைத்திருக்க முடியாது. எட்ஜ்காம் தள்ளாடிக் கீழே விழுந்திருப்பாள். ஆனால், ஜான் அவளைப் பலமாக அணைத்துப் பிடித்துக்கொண்டார்.

அவர் தம்மைச் சமாளித்துக் கொண்டு, "மறுபடியும் நாம் சந்தித்துக் கொண்டோம். நான் வாழ்க்கைப் படிகளில் கீழ் நோக்கிச் செல்லுபவன்; நீயோ மேலேறுபவள். உன்னோடு நான் மேலேறி வர முடியாது. அதேபோல் என்னோடு உன்னைக் கீழ்நோக்கி இழுக்கவும் கூடாது. என்றாலும்—உம்—நாம்—நாம் பாதி வழியில் சந்தித்துக்கொண்டோம்—நான் உன்னை விட மாட்டேன்—"

"அப்படியானால் இதே ஸ்தானத்தில் நாம் இன்னும் சிறிது காலம் இருப்போம்." என்று இலேசாகச் சொன்னாள் எட்ஜ்காம். மேலும், "ஒருவருடைய வாழ்க்கையை அளப்பது காதலே தவிர காலம் அல்ல" என்றாள்.

அப்படியே வாழ்க்கை நடத்தினர்.

என்ன ஆச்சரியமாயிருக்கிறது! ஐம்பத்தொரு வயதும் பத்தொன்பது வயதும் கலந்து கொண்டன! அவர் அவளைக் கல்யாணம் செய்திருக்கக் கூடாது என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், அவர் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை! அவள்தான் அவரைக் கல்யாணம் செய்துகொண்டாள். அவளைக் கடவுள் ஆசீர்வதிக்கட்டும்!

காலம் செல்லச் செல்ல எட்ஜ்காம் இன்பமயமான யௌவனப் பருவத்தின் பூரண வளர்ச்சியும் பெற்றுப் பிரகாசித்தாள். ஜானும் காதலின் மாயா சக்தியால் வாலிபத்தை அடைந்து கொண்டு வந்தார். அவர்களைப் பிரிக்க முடியாது என்று உணர்ந்த மரணமும், அவர்கள் இருவரையும் சேர்த்தே, அவர்கள் சம பிராயத்திலிருக்கும் போதே அவர்களைக் கவர்ந்து சென்றது!

*

மனித குணம்

மனிதன் எப்படிப்பட்ட இழிதொழில் உள்ளவனாயினும் அவனுக்கு நன்றியறிவு இல்லாமல் போகாது.

—சம்ராட் அசோகன்

தேனிலுள்ள சத்துப் பொருள்களை விளக்கிக் கூறும் இக்கட்டுரை நல்வழியி லிருந்து எடுக்கப்பெற்றது.

தேன்

●

எச். எம். வால்டன்

தேனை ஒரு சிறந்த ஆகாரமெனக் கொண்டாடாத தேச மில்லை. பண்டைக் காலத்திலே அதற்கு விசேஷ மதிப்பு இருந்தது. மக்கள் கரும்புச் சர்க்கரை செய்யப் படித்ததெல்லாம் நேற்றுத் தானே! அதற்கு முன்னெல்லாம் தேனுக்குத்தான் கிராக்கி. இப்பொழுது காலம் கெட்டுவிட்டது. நாகரிக மேலீட்டினாலும் விவசாய அபிவிருத்தியினாலும் கைத்தொழில் அபிவிருத்தியினாலும் போக்கு வரவு சாதனங்களின் அபிவிருத்தியினாலும் சர்க்கரை இப்பொழுது எங்கும் மலிவாகக் கிடைக்கிறது. ஆகையால் தேனை நாடுவாரில்லை. அதனுடைய அருமை பெருமைகளையும் குணங்களையும் நாம் மறந்து விட்டோம். மறதிக்குத்தக்க தண்டனையும் நமக்குக் கைமேலே கிடைத்திருக்கிறது. நமது பிள்ளைகளுடைய பற்களைப் பாருங்கள். அவை சொத்தை விழுந்துபோயிருப்பதற்கு ஒரு காரணம், நாம் தேனைச் சாப்பிடுவதற்குப் பதிலாக வெள்ளை வெளேரென்று சுத்தி செய்யப்பட்ட சர்க்கரையைச் சாப்பிடுவதேயாகும்.

முன்னெல்லாம் தேன் வேண்டுமென்றால் காட்டுக்குத்தான் போகவேண்டும். செயற்கைத் தேன் கூடுகள் அக்காலத்தில் கிடையாது. எங்காவது ஒருதேன் கூடு அகப்படாதா என்று சொல்லி மரப் பொந்துகளையும் பாறைச் சந்துகளையும் பார்த்துக் கொண்டு திரிய வேண்டியதாக இருந்தது. மேலும், அவை சாதாரணமாக கைக்கெட்டாத இடங்களில் இருந்தபடியால், தேனை எடுக்கையில், அதிலே பெரும் பகுதி சிந்தி நஷ்டமாய் விடும். ஆனால் இப்பொழுதோ அந்தச் சிரம மெல்லாம் இல்லை. ஆகையால் தேன் இப்பொழுது எங்கும் மலிவாகக் கிடைக்கிறது.

சில வருஷங்களுக்கு முன்வரையில் தேனைப் பிழிந்துதான் எடுத்துக்கொண்டு வந்தார்கள். அதனால் அதிலே திப்பி நிரம்ப இருக்கும். சுகாதார அடிப்படையில் பார்த்தால், அதைத் திருப்திகரமான தேன் என்று சொல்லுவதற்கில்லை. இப்பொழுது இயந்திரங்களைக் கொண்டு வடிகட்டி எடுக்கப் படுகிறது. ஆகையினால் தேன் சுத்தமாக இருக்கிறது.

தேனில் அநேக வகைப்பட்ட இயற்கைச் சர்க்கரைகள் கலந்து இருக்கின்ற போதிலும், அவை கெடுதலற்றவையாயிருப்பதுடன், மக்களுக்கேற்ற உணவாகவும் இருக்கின்றன. ஈக்கள் தேனை உண்டாக்கும் விதத்தை இன்னும் ஒருவரும் சரியாகக் கண்டு பிடிக்கவில்லை. ஆனால் அதில் இருக்கிற சர்க்கரை எற்கெனவே ஜீரணிக்கப்பட்ட சர்க்கரையென்றும் அது சீக்கிரத்தில் வலுவைக் கொடுக்கக் கூடியதென்றும் கண்டறியப் பட்டிருக்கிறது.

சாதாரணமாக, தேனில் 18 பங்கு ஜலமும் 78 பங்கு கரிநீரகைகளும் (Carbohydrates) 0.2 பங்கு தாதுப் பொருள்களும் 4 பங்கு, இன்னின்ன அளவினவென்று சரியாக நிர்ணயிக்க முடியாத பல பொருள்களும் இருக்கின்றன; பூவிலுள்ள மகரந்தம், பிசின், வச்சிரம் (Glue),

எளிதில் ஆவியாகக் கூடிய எண்ணெய்கள் முதலியன அவற்றுள் சில.

தேனில் இரண்டு விதங்கள் உண்டு. புஷ்பத்தி லிருந்து உற்பத்தி செய்வது ஒன்று; இது சாதாரனமானது. மற்றொன்று ஹனிடியூ (Honeydew) என்பது; இது அசாதாரணமானது. முதல் வகைத் தேன் புஷ்பங்களிலுள்ள ஓர் இனிப்பான திரவ பதார்த்தத்திலிருந்து உண்டாவது; ஹனிடியூ என்பது செடிகளில் மற்றப் பூச்சிகளால் இறக்கப்பட்ட ஓர் இனிப்பான பதார்த்தம்.

தேன் எவ்வாறு செய்யப்படுகிறதென்று வைத்திய சாஸ்திரிகளுக்கு இன்னும் தெரியாது. ஆனால் அது செய்யும் பொருட்டு ஈக்கள் முக்கியமாய்க் கொண்டு வரும் வஸ்துக்கள் அமிர்தம், மகரந்தம், ப்ரொபொலிஸ் ஆகிய இம் மூன்றுமே. தேனீயானது தனது நீண்ட நாவினால் புஷ்பத்திலுள்ள அப்பொருள்களை உறிஞ்சுகிறது. அப்பொருள்கள் தேன் பைக்குள் சென்றவுடனே, அங்கே இரசாயன மாறுதல்களை அடைகின்றன. மகரந்தம் என்பது ஒரு நேர்த்தியான பவுடர். அதில் பிசிதம் நிரம்ப உண்டு. அது சிறுவர்களுக்கும் வளரும் ஈக்களுக்கும் தலை சிறந்த ஆகாரமாகும். ப்ரோபொலிஸ் என்பது பிசின் போன்ற ஒரு வஸ்து. இது கூடுகளில் தண்ணீர் விழவொட்டாமல் தடை செய்கிறது. கூட்டில் சந்துக்கள் இருந்தால் அவற்றை அடைத்து, கூட்டின் ஓரங்களை வலுப்படுத்துகிறது. தேன் மெழுகானது தேனீயின் வயிற்றிலுள்ள சில பிரத்யேகமான கோளங்களினால் சுரக்கப் படுகிறது.

தேனில் அநேக வித சர்க்கரைகள் இருக்கின்றன. சில இன்னும் நமக்குத் தெரியவில்லை. தெரிந்தவற்றுள் முக்கியமானவை சுக்ரோஸ், டெக்ஸ்ட்ரோஸ், லெவூலோஸ், டெக்ஸ்டிரின் என்பன. சுகரோஸ் என்பது வெளுப்பான கலப்படவஸ்து; கரும்பு, பீட், மேபிள் முதலியவற்றிலுள்ள சர்க்கரையைப் போன்றது. டெக்ஸ்ட்ரோஸ் என்பது மரக்கரிப்பதார்த்தங்களிலும் பிராணிகளிலும் காணப்படும். இது கரும்புச் சர்க்கரையை விட ருசி கம்மி. லெவூலோஸ் என்பது பழச் சர்க்கரை. டெக்ட்ஸ்டிரின் என்பது செடிகளில் இருக்கக் கூடியது. இதற்கு ஆதாரம் மாக்கூர் (Starch). இந்தச் சர்க்கரைகள் யாவும் ஏற்கெனவே ஜீரணிக்கப்பட்ட சர்க்கரைகள்.

தேனில் அதிகமாகக் காணப்படும் உலோக வஸ்துக்களாவன: மாக்னீஷியா, சுண்ணும்பு, பாஸ்பரிக் திராவகம், இரும்பு இவைகளே.

தேன் இரண்டு வகைப்பட்டதென்ருல், அதனுடையமணமோ பல விதம். ஈக்கள் எந்த ஜாதிப் புஷ்பங்களி லிருந்து அமிர்தம் எடுக்கின்றனவோ, அதைப் பொருந்தினதாக இருக்கும் தேனுடைய மணம். இடங்களுக்குத் தக்கபடியும் மணம் உண்டு. நிறமும் ருசியும் வேருக இருப்பினும், அவற்றிலுள்ள இரசாயன வஸ்துக்களெல்லாம் அநேகமாக ஒரே மாதிரிதான் இருக்கும்.

தேனிலுள்ள சர்க்கரைகளெல்லாம் ஏற்கனவே ஜீரணிக்கப் பட்ட சர்க்கரைகளாம். தேன் எந்தப் புஷ்பத்தி லிருந்து எடுக்கப் பட்டிருந்தாலும் பரவாயில்லை, அது ஓர் ஆரோக்கியமான ஆகாரம்.



படம் : கே. எஸ். நாகராஜன, சென்னை

நெய்தல் மலர்

படம்: எஸ். கந்தசாமி, சேலம்

—ஒரு
நாடகமே உலகம்



படம்: ஜி. வி. எஸ. ராவ், சென்னை

—நானா

நடப்பதை யாரறிவார்



படம் : பிரிட்டிஷ் விளம்பர இலாகா

சோல்ஜரின் சாந்தம்

படம்: பி. ரங்கநாதன், சென்னை

சிவிலியனின் வீரம்

ஸிந்தியா கப்பல் கம்பெனியின் டைரக்டர் வால்சந்த் ஹிராசந்த்

ஸிந்தியா கப்பல் கம்பெனியார் கட்டிய 'ஜல உஷா'





சமீபத்தில் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த ஜெயப்பிரகாஷ்

ராணுவ அணிவகுப்பைப் பார்வையிடுகிறார் பிரதமர் நேரு





புதுக்கோட்டை மன்னர்

புதுக்கோட்டை

●

தி. நா. சுப்பிரமணியன்

இன்றைக்கு இந்தியாவிலே சின்னதும் பெரிதுமாக நூற்றுக்கணக்கான சுதேச சமஸ்தானங்கள் இருக்கின்றன. பெரும்பாலும் அவை வட நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டிலே மருந்துபோல ஒரே ஒரு சமஸ்தானம் மட்டுமே இருந்தது. அது தான் புதுக்கோட்டை. அதுவும் இப்போது இந்திய யூனியனுடன் ஐக்கியமாகிவிட்டது.

புதுக்கோட்டை சமஸ்தானத்தை அந்த நாட்டு மக்கள் 'தொண்டைமான் சீமை' என்று பெருமிதத்தோடு குறிப்பிடுவார்கள். இன்றைக்கு அது நல்ல ஜலம் கிடைக்காத பொட்டல் பிரதேசம். அங்கே ஓடும் காட்டாறுகள் பாசனத்துக்கு அதிகம் பிரயோசனப்படா. என்றாலும் அப்படிப்பட்ட வறட்டுப் பிரதேசத்திலும் அவர்களுக்கு ஒரு தனிப்பற்று உண்டு.

அந்தச் சீமை என்றைக்கும் இப்படிப் பொட்டல் பிரதேசமாக இருந்ததில்லை. ஒரு காலத்தில் அது சுபிட்சமாகத்தான் இருந்தது.

'தேங்காய் உருளத் தினை உருள—இந்தத்
தேங்காய்த் தண்ணீர் அலைமோத
மாங்காய் காய்த்து உருளுதடி—மகா
ராஜன் தொண்டைமான் சீமையிலே'

என்னும் நாடோடிப் பாட்டின் பகுதி இதை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

இந்தப் பகுதிக்குத் தொண்டைமான் சீமை என்று பெயர் வந்தது சமீபகாலத்திலே தான். ஏனெனில் அங்கே தொண்டைமான் அரசபரம்பரை ராஜ்யபாரம் புரிய ஆரம்பித்து இன்னும் முந்நூறு வருஷங்களுக்கு மேல் ஆகவில்லை. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் இந்தச் சமஸ்தானமே தனியாக ஏற்பட்டது.

இந்தச் சமஸ்தானத்தில் இப்போது அடங்கியுள்ள பிரதேசம் ஆதி நாட்களில் பன்றி நாட்டின் பகுதியாக இருந்தது. பழனி மலையைப் பன்றிமலை யென்றும் சொல்லுவார்கள். இந்தச் சமஸ்தானத்தின் நடுவே ஓடும் வெள்ளாறுதான் சோழ பாண்டிய நாடுகளுக்கு மத்தியில் எல்லையாக அமைந்திருந்தது. வெள்ளாற்றுக்கு வடக்கேயுள்ள பகுதிக்குக் கோனாடு என்று பெயர்; தெற்கேயுள்ள பகுதியைக் கானாடு அல்லது கானனாடு என்று குறிப்பர். பண்டை நாட்களில் சோழ நாட்டின் தலை நகரங்களுள் ஒன்றாகிய உறையூரினின்றும், மதுரைக்குச் சென்ற பெருவழி இந்தச் சமஸ்தானத்தின் வழியாகத்தான் அமைந் திருந்தது. இப்போது கொடும்பாளூர் என்று வழங்கப்படும் ஊர் அந்தப் பெருவழியிலே இருந்த தென்பது சிலப்பதிகாரத்திலிருந்து நன்கு விளங்குகிறது. தன் மனைவி கண்ணகியுடன் சோழ நாட்டிலிருந்து மதுரைக்குச் சென்ற கோவலன் கொடும்பை வழியாகத்தான் போனான் என்று அந்நூல் தெரிவிக்கிறது.

புத்தமதத்தை உலக மெங்கும் பரப்புவதற்காக, கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோக மன்னன் அனுப்பி வைத்த மத போதகர்களில் தமிழ் நாட்டுக்கு வந்த சிலர் இந்த சமஸ்தானப் பகுதியில் தங்கியிருந்தனர் என்று நினைக்க இடம் உண்டு. சித்தன்ன வாச

வில் மலையிலே வெட்டப்பட்ட குகைகளில் அசோகர் காலத்துப் பிராமி எழுத்தில் பொறிக்கப் பட்ட தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அந்தக் குகைகளிலே பௌத்த முனிவர் கள் தங்கி வந்தார்கள் என்பதை அக் கல்வெட்டுக்கள் உணர்த்து கின்றன.

சரித்திரத்துக்கும் முற்பட்ட காலத்துப் புதைபொருள்கள் இந் நாட்டுப் பகுதியிலிருந்து கிடைத் துள்ளன. இறந்தவர்களைப் பூமியில் ஆழக் குழிதோண்டி தாழியிற் கவித்து அடக்கம் செய் துள்ள இடம், முதுமக்கட்டாழி என்று குறிக்கப்படுவனபோன்ற வற்றை ஆராய்ச்சியாளர்கள் இங்கே நிறையக் கண்டுபிடித் திருக்கிறார்கள்.

இந்தச் சமஸ்தானத்தின் தெற் குப் பகுதியிலும், அதையடுத்த ராமநாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த பகுதியிலுமே நகர வைசியர் என்றும், நாட்டுக்கோட்டைச் செட்டியார் என்றும் குறிக்கப் பெறும் வணிகர்கள் மிகுதியாக இருக்கிறார்கள். நீண்ட கால மாகவே இந்தப் பகுதியில் வணி கர்கள் இருந்து வந்திருக்கிறார்கள் என்றே எண்ணவேண்டி யிருக் கிறது.

ஐம்பது வருஷங்களுக்கு முன் னால் (1898-ல்) கருக்காக்குறிச்சி என்னும் இடத்தில் பூமிக்கு அடி யிலிருந்து ஐந்நூறு தங்க நாண யங்கள் * அகப்பட்டன. அவை கள் எல்லாம் கி. மு. முதல் நூற் றாண்டிலும் கி. பி. முதல் நூற்றாண் டிலும் ஆண்ட ரோம சக்கர வர்த்திகளின் நாணயங்கள். அந் தக்காலத்திலே தமிழ் நாட்டவர் யவனத்துடன் வாணிகம் செய்து வந்திருக்கிறார்கள் என்பதை நாம் கவனிக்கும்போது இவற் றின் முக்கியத்துவம் விளங்கும்.

இதை வலியுறுத்த மற்றோர் ஆதாரமும் இருக்கிறது. நார்த்தா மலையிலே கல்லிலே குடையப் பட்ட விஷ்ணு ஆலயம் ஒன்று இருக்கிறது. அது ஒரு கர்ப்பக் கிரஹத்தையும் அதற்கு முன்ன தாக ஒரு தாழ்வாரத்தையுமே கொண்டது. அந்தத் தாழ்வாரத் தில் விஷ்ணுவின் பன்னிரண்டு உருவங்களும், ஒவ்வொரு பெய ருக்கு ஒன்றாக, நிறுவப்பட் டுள்ளன. இந்தத் திருவுருவங் களை 'நானாதேசி விஷ்ணுக்கள்' என்று குறிப்பிடுவர். கோயிலும் உருவங்களும் பதினொரு நூற் றாண்டுகள் முன் நம் நாட்டைப் ஆண்டு வந்த பல்லவர் ஆட்சியின் கடைசிக் காலத்தில் உண் டானவை. அந்தக் காலத்திலே 'நானா தேசிகள்' என்றும் 'திசையாயிரத்து ஐநூற்றுவர்' என்றும் 'ஐஞ்ஞூற்றுவர்' என் னும் குறிக்கப் பெற்ற வணிகக் கூட்டத்தார் தமிழ் நாட்டி லிருந்து பல இடங்களுக்கும் சென்று, கடல் கடந்த தேசங் களையும் அடைந்து வியாபாரம் செய்து வந்தார்கள் என்பதை நாம் அறிவோம். அவ் வணிகர் கள் நார்த்தாமலைப் பக்கத்தில் இருந்து வந்தனர் என்பதை இந்தப் பெயர் நன்கு எடுத்துக் காட்டுகிறது.†

* காலஞ்சென்ற புதுக்கோட்டை அரசர் இந்த நாணயங்களை லண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூசியத்துக்கு அளித்து விட்டாராம். அவற்றை நாம் திரும்பப் பெற்று நம்நாட்டுப் பொருட்காட்சிசாலையில் வைப்பதற்கு ஏற்பாடுசெய்யவேண்டி யது அவசியம்.

† இன்றைக்கும் நகரத்தார்களிலே 'ஐந்நூற்றுவர்' என்ற பிரிவு இருக்கிறது. அவர்கள் 'ஐந்நூற்றீசுவர'ரை வழிபடுபவர்கள். 'ஐந்நூற்றீசுவரர்' ஆலயம் ஒன்றும் செட்டிமார் நாட்டிலே மாத்தூர் என்ற ஊரில் இருக்கிறது.

காஞ்சிபுரத்தி லிருந்து அரசு செலுத்திய பல்லவ மன்னர்கள் கி. பி. 600-லிருந்து ஒரு மூந்நூறு ஆண்டுகளுக்கு வலிமை பெற்று விளங்கினார்கள். அந் நாட்களில் புதுக்கோட்டைப் பிரதேசம் அவர்கள் ஆளுகையின் கீழ் இருந்தது. அதுமட்டு மன்று; அவர்களுக்கு அது ஒருமுக்கியமான பிரதேசமாகவும் இருந்தது. தெற்கே மதுரையி லிருந்து ஆண்டுவந்த பாண்டிய மன்னர்களும் அந்நாட்களில் சிறப்புற்று இருந்தனர். இவ்விருவர் நாடுகளுக்கும் எல்லைப் புறமாக இருந்த பிரதேசத்தின் தென் பகுதியில் அடிக்கடி போர் நிகழ்ந்தும் வந்திருக்கிறது. பல்லவ ஆட்சியின் அறிகுறியாக, பிற இடங்களில் கிடைக்காத ஞாபகச் சின்னங்கள் இந்தச் சமஸ்தானத்தில் கிடைக்கின்றன. அவற்றுள் சித்தன்ன வாசலில் குடைவரைக் கோயிலில் காணப்படும் வர்ண சித்திரங்களும், குடுமியாமலையில் பொறிக்கப்பட்டுள்ள சங்கீதக் கல்வெட்டும் முக்கியமானவை. கவிஞனான பல்லவ அரசன் மகேந்திரவர்மன் இசைக் கலையிலே 'சங்கீர்ண ஜாதி' என்ற புதிய தாளவகையை உண்டாக்கியிருக்கிறான். இன்னும் அவன் சுருதி பேதங்களைக் கொண்டு ஸ்வர ஸ்தானங்களை இருபத்து மூன்றாக அமைத்தான் என்ற செய்தியும் இந்தச் சங்கீதக் கல்வெட்டால் விளங்குகின்றது. அவனுக்கு ஆசிரியராக இருந்தவரும் இசையுலகில் புகழ் பெற்றவருமான ருத்திராசாரியாரும், இந்நாட்டில் வாழ்ந்தவரே.

ஒன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலே தமிழ் நாட்டு அரசியலில் இந்தச் சீமை ஒரு கேந்திரஸ்தானமாக விளங்கியது. வட பகுதியில் ஆண்ட பல்லவர், தென்பகுதியில் இருந்த பாண்டியர் ஆகிய இருவரும் வலி குன்றி ஒடுங்க ஆரம்பித்து விட்டனர். இவ்விரு நாடுகளுக்கும் இடைப்பட்ட இந்தப் பிரதேசத்திலே தனியரசு ஸ்தாபிக்கப் பலரும் முயன்றனர். கொடும்பாளூர் வேளிர், முத்தரையர், சோழர்கள் ஆகிய மூவரும் போட்டியிட்டனர். சோழர்கள் கும்பகோணத்துக்குப் பக்கத்தில் உள்ள பழையாறையில் இருந்தார்கள். முத்தரையர் திருக்காட்டுப்பள்ளிக்குப் பக்கத்தில் உள்ள (செந்தலை) சந்திரலேகா சதுர்வேதி மங்கலத்தையோ நியமத்தையோ தலைநகராகக் கொண்டிருந்தார்கள். வேளிர் புதுக்கோட்டையில் கொடும்பாளூரிலிருந்து ஆண்டுவந்தனர். ஒரு சமயம் கொடும்பாளூர் வேளிர் கை ஓங்கி யிருந்தது. அவர்கள் சோழர்களுடன் நெருங்கிய உறவு பூண்டிருந்தனர். கடைசியிலே சோழர்களே வெற்றி கொண்டனர்.

சோழ ஸாம்ராஜ்யம் மகோந்நத ஸ்திதியில் இருந்தபோதும், அதையடுத்துப் பாண்டிய மன்னர்கள் மீண்டும் பேரரசு செலுத்திய காலத்திலும், புதுக்கோட்டைச் சீமையில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ஏதும் நடக்கவில்லை. சோழ பாண்டிய வலிகுன்றி விஜயநகர ஸாம்ராஜ்யம் தலையெடுத்த பிறகுதான் புதுக்கோட்டைச் சீமையைப் பற்றிய செய்திகளைக் கொஞ்சம் அறிகிறோம். அந்தக் காலத்திலே இதற்குப் பல்லவராயன் சீமை என்று பெயர். பல்லவராயர்கள் இங்கே நாட்டின் அரசியலைச் சிற்றரசர்களைப் போல நடத்தி வந்தார்கள்.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் புதுக்கோட்டை தனி சமஸ்தானமாக ஏற்பட்டது. அந்தக் காலத்தில் இந்தச் சீமை ராமநாதபுரத்திலிருந்து ஆண்டு வந்த சேதுபதிகளுக்கு அடங்கியிருந்தது. சிவகங்கையும் தனியாகப் பிரிந்து போகவில்லை. இந்தப் பிரதேசங்களை எல்லாம் உள்ளிட்ட நாட்டை ஆண்டுவந்த சேதுபதிகள், மதுரை நாயக்க மன்னர்களுக்குக் கீழ்ப்பட்டு இருந்தவர்கள். ஆனால் அவர்களுக்கிடையே என்றைக்குமே நேசபாவம் இல்லை.

கி. பி. 1673-ல் ராமநாதபுரம் சேதுபதியாக விஜய ரகுநாதத் தேவர் என்பவர் முடி சூட்டப் பெற்றார். உண்மையில் அவர் நேர் பரம்பரையைச் சேர்ந்தவர் அல்லராம். அவருக்கு முன்னர் இருந்தவருடைய காமக்கிழத்தி (வெள்ளாட்டி) யின் பிள்ளையாம். இவரைக் கிழவன் சேதுபதி என்று சொல்வர்.

கிழவன் சேதுபதி ஆட்சியை இன்றைக்கும் அந்நாட்டு மக்கள் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். அவர் நாட்டை வெகு திறமையுடன் ஆண்டுவந்தார். சாமர்த்தியம் உள்ளவர்களை அவர் வெகு சுலபமாகக் கண்டறிந்து அவர்களைப் பெரிதும் ஆதரித்து வந்திருக்கிறார். மதுரை நாயக்க மன்னருடன் நெருங்கிப் பழகி அவருக்குப் பல உதவிகளைப் புரிந்திருக்கிறார். அதற்காகச் சொக்கநாத நாயக்கரும் கிழவன் சேதுபதிக்குப் 'பர ராஜ கேசரி' என்னும் விருதை யளித்துக் கௌரவித்திருக்கிறார்.

அக்காலத்திலே புதுக்கோட்டைச் சீமையைச் செவந்தெழுந்த பல்லவராயர் என்பவர் ஆண்டுவந்தார். அவர் தெய்வ பக்தி மிகுந்தவர். சதா பூஜை புரஸ்காரங்களிலேயே மூழ்கியிருப்பார். அதனால் அவரைப் 'பூஜைப் பல்லவராயர்' என்று சொல்வர்

அவர் நாளிலே அந்தச் சீமையில், வடக்கே தொண்டை நாட்டிலிருந்து வந்த பலர் வாழ்ந்து வந்தார்கள். ரகுநாதராயதொண்டைமான் என்பவரும் அவர் தம்பியான நாமனத்தொண்டைமான் என்பவரும் அப்படிப்பட்டவர்கள். அவர்கள் இருவரும் போரில் பராக்கிரமம் வாய்ந்தவர்கள். விஜயநகர ஸாம்ராஜ்யத்துக் கடைசி மன்னனான ஸ்ரீரங்கராயரின் அன்பையும் ஆதரவையும் பெற்றவர்கள். அவர்கள் தஞ்சாவூர், மதுரை நாயக்க மன்னர்களுக்குப் பல சமயங்களில் படை உதவி புரிந்திருக்கிறார்கள்.

இவர்களுடைய சௌரியத்தை அறிந்த கிழவன் சேதுபதி இவர்களை அழைத்துத் தம்மிடம் வேலைக்கு வைத்துக் கொண்டார். இவர்களுக்குக் காதலி என்ற சகோதரி ஒருத்தி யிருந்தாள். கிழவன் சேதுபதி அவள் மீது மையல் கொண்டு அவளை மணந்து தம் இரண்டாம் மகிஷியாகக் கொண்டார்.

இந்நாளில் செவந்தெழுந்த பல்லவராயர், சேதுபதியின் ஆதிக்கியத்திலிருந்து விலகிச் சுயேச்சையடைய விரும்பினார். அதற்குத் தஞ்சையிலிருந்து அரசாண்ட மகாராஷ்டிர மன்னனான எக்கோஜி துணை புரிவதாக இருந்தான். ஆனால் கிழவன் சேதுபதி அதற்கு இடம் கொடுக்கவில்லை. அவர்கள் செய்து வரும் முயற்சியை முளையிலே கிள்ளிவிட நினைத்து, பல்லவ

ராயனை வேலையை விட்டு நீக்கி அவன் பாளையத்தைத் தம் மைத்துனனை, (காதலியின் சகோதரனை) ரகுநாத ராய தொண்டைமானுக்கு அளித்து விட்டார். பல்லவராயரும் சும்மா விட்டுவிடவில்லை; எதிர்த்தார். நடந்த போரில் உயிரை இழந்தார். கடைசியாகத் தொண்டைமான் அரசியலை அடைந்தார். இவ்விதம் ஏற்பட்டதுதான் இப்போதுள்ள புதுக்கோட்டை சமஸ்தானம்.

புதுக்கோட்டை அரசர்கள் பொதுவாக மதுரை நாயக்க மன்னர்களை விரோதித்துக் கொள்ளவில்லை. அந்தக் காலத்திலே நாயக்க மன்னர்களுக்கும் வலிகுன்றிப் போயிருந்தது. அதனால் அவர்களுக்குப் பாளையக்காரர் பலருடைய உதவி தேவையாய் இருந்தது. புதுக்கோட்டைத்தொண்டைமான்கள் அவர்களுக்கு அவ்வப்போது உதவி செய்திருக்கிறார்கள். நாயக்க அரசு மங்கி, ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் ஆதிக்கியத்துக்குப் போட்டி யிட்ட காலத்தில் இவர்கள் ஆங்கிலேயர்களுக்கு உதவியாக இருந்தார்கள். அதற்குப் பிறகு தொண்டைமான் அரசர் என்றைக்குமே ஆங்கிலேயர் சொல்லைத் தட்டியதில்லை.

தொண்டைமான்களுக்குள்ளே, இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஆண்ட விஜய ரகுநாத ராய தொண்டைமானை மக்கள் இன்றைக்கும் மறக்கவில்லை. புதுக்கோட்டையின் தற்போதைப் பெருமைக்கு அவரே காரணம் என்றும் சொல்வர். அவரைச் 'சிவஞானபுரம் துரை' என்று மக்கள் அன்போடு அழைப்பர். அவர் பெரிய வேதாந்தி. சதாசிவப் பிரம்மம் என்ற பெரியாரைத் தம் ஞான குருவாகக் கொண்டவர். அவருடைய ஆசீர்வாதமே சமஸ்தானத்துக்குப் பக்கபலமாக இருந்து வருகிறது என்று மக்கள் கருதுவர்.

எந்த நாட்டுச் சரித்திரத்திலும் புகழோடு களங்கத்தையும் சேர்த்தேதான் காணமுடியும். களங்கம் இல்லாமல் புகழை மட்டுமே காணமுடியாது. அதே போலத்தான் புதுக்கோட்டை சமஸ்தானத்துக்கும் ஒரு களங்கம் உண்டு என்று சொல்வர்.

நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு, ஆங்கிலக் கும்பினியாரை எதிர்த்துப் போராடிய தென்னாட்டு வீரர் திலகமாகிய பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர் கட்டபொம்முவை அந்தக் காலத்துப் புதுக்கோட்டை மன்னரே வஞ்சகமாகப் பிடித்துக் கும்பினியாருக்குக் கொடுத்தார் என்ற பழியை மக்கள் அவர்மீது சுமத்துகிறார்கள்.

இப்போதுள்ள மன்னர் அந்தப் பழிக்கும் பிராயச் சித்தம் செய்து விட்டார். நாட்டின் நன்மையக் குறித்து அதன் நிர்வாகத்தை இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டார்.

வித்தியாசம்

காலியான மண்டைக்கும் காலியான வாளிக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான்.

காலியான மண்டையில் எதையுமே உட்செலுத்த முடியாது!

—ஒளிப்பேன் ரெனல்டீன்

பாரதியும் பட்டாடையும்

●

ந. சகுந்தலா பாரதி

பாரதியாரின் இளைய புதல்வி தம் தந்தையாரின் வாழ்க்கையில் நடந்த ஒரு ருசிகரமான சம்பவத்தை இக்கட்டுரையில் கூறுகிறார்.

தற்காலம் எட்டையபுரம் ஜமீன்தாராக இருப்பவருக்குள்ள விசால மனப்பான்மை அந்த நாளில் அரசாண்ட ஜமீன்தாருக்கு இல்லை போலும்! எல்லாம் விதியின் விளையாட்டு. ஜமீன்தாரின் சகோதரி ஸ்ரீ பெத்தப்பன் அவர்களும் தமிழில் நல்ல ஆர்வமுள்ளவர். முறையாகத் தமிழ்ப் படித்தவர். அந்தப்புர ஸ்திரீகள் ஆண் மக்கள் முன் வரக்கூடாது என்ற கட்டுப்பாடு எட்டையபுரம் அரண்மனையில் உண்டு. அதனால் வெளி முற்றத்தில் என் தந்தை பாடுவதை, அதற்கென அமைந்துள்ள பலகணி மறைவிலிருந்து கேட்டு மகிழ்வர். அவரது குமாரர் ஸ்ரீ அமிர்தசாமிக்கு அப்பொழுது பன்னிரண்டு பிராயம்தானிருக்கும். ஆனால் சங்கீதத்தில் அவருக்குச் சின்ன வயது முதலே அதிகத் தேட்டமூண்டு. ஓயாமல் சலிக்காமல் எப்பொழுதும் ஏதாவது பாட்டு கேட்டுக்கொண்டேயிருப்பார். என் தந்தையை அடிக்கடி ஆள் அனுப்பி அழைத்துவரச் சொல்லி அவர் பாடலைக் கேட்டு அனுபவிப்பார். முதல் தடவை ஸ்ரீ அமிர்தசாமி என் தந்தை பாடியதைக் கேட்டதும் அவருக்குச் சன்மானமாக ரோஜாப்பூ நிறப் பட்டு அங்கவஸ்திரம் ஒன்று அளித்தாராம். அரண்மனை வாயில் வந்தவுடன், என் தந்தை தான் பட்டு உபயோகிப்பதில்லை என்று அதைத் தன் பக்கத்திலுள்ள தன் மாமனிடம் கொடுத்துவிட்டாராம்! என் தாயார் அதை வீட்டுக்குக் கொண்டு வந்திருந்தால், குழந்தைக்குச் சட்டையாவது தைத்திருக்கலாமே! என்று மிக்க வருத்தத்துடன் கேட்டார்.

“எனக்கு உபயோகிக்கக்கூடாத வஸ்து என் குழந்தைக்கு மட்டும் கூடுமா? நானும் இனிமேல் பட்டு போட்டுக்கொள்ள மாட்டேன். பாப்பாவுக்கும் அப்படியே” என்று சொல்லிவிட்டார். அதுநாள்வரை கையில் பணமில்லாத தரித்திர காலத்திலும் கூட என் தாயார் எனக்குப் பட்டுப் பாவாடைகளும் சட்டைகளும்வராளமாகத் தைத்து வைத்திருந்தார். பின்பு என் தந்தையார் உள்ளவரை அவருக்கும் எனக்கும் பட்டுத் துணி வாங்கவில்லை. பட்டுத் துணியைப்பற்றி எழுதும்போது பழைய சம்பவம் ஒன்று ஞாபகம் வரத்தான் செய்கிறது.

வாசலில் மூட்டை தூக்கிக் கொண்டுவந்து வியாபாரம் செய்யும் சீனக்காரனிடம், என் தந்தை, ஒரு சமயம், நிறைய பட்டுத் துணிகள் வாங்கினர். என் தாயும் தமக்கையும் தங்கள் ரவிக்கைகளைத்தாமே தைத்துக்கொள்ளுவதாகச் சொல்லிவிட்டார்கள். எனக்கும் தந்தைக்கும் மட்டும் சட்டைகள் தைக்க என் தந்தையின் நண்பர் ஸ்ரீ சங்கா செட்டியாருக்கு வழக்கமாக சட்டைகள் தைக்கும் தையற்காரரிடம் கொடுத்தார். உயர்ந்த வெள்ளை ஸாடின் துணியில் ராஜாக்கள் அணிவதுபோல கோட் ஒன்று தைக்கும்படி சொன்னர். தலைப்பாகை அடிக்கடி கட்டிக்கொள்ளுவது சிரமமாக இருப்பதால் புதிய விதமான, குல்லாய் ஒன்றும் தயாரிக்கும்படி சொன்னர். “அது சாதாரணக் குல்லாய் மாதிரி இருக்கக் கூடாது. குமாஸ்தாக்கள் அணியும் தலைப்பாகை கட்டியது போலவும் தோன்றக் கூடாது. அழகான கிரீடம் போல இருக்க வேண்டும்” என்று மாதிரி சொன்னர். தையற்காரரும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு போய்விட்டார். சில நாள் கழித்து சட்டைகள் தைத்துக் கொணர்ந்தார். மகா ராஜாக்கள் அணியும் சட்டை கிரீடம் என்றெல்லாம் என் தந்தை வர்ணித்ததைக் கேட்டுப் பயந்துபோய் சரியாக அளவெடுக்காமல் என் தந்தையின் கோட்டை மிக பெரியதாகத் தைத்துவிட்டார். கிரீடம் என்று வர்ணிக்கப்பட்ட குல்லாயோ சொல்லுந் தரமன்று. நாடகமாடுவோரில் கோமாளி வேஷம் தரிப்பவருடைய குல்லாயை ஒத்திருந்தது. என் தந்தை தையற்காரரைக் குற்றம் சொல்லிக் கோபிக்கவில்லை. தமக்கு உரித்தான நகைச் சுவையுடன் அதையேற்றுக்கொண்டு அவருக்குள்ள கூலியைக்கொடுத்தனுப்பிவிட்டு, “தையற்காரன், பாவம். மகா ராஜாவைக் கண்டானு, கிரீடத்தைக்கண்டானு? செட்டியார்களுக்குச் சட்டை தைத்து வழக்கம். நமக்கும் பெரிய தொந்தி இருக்குமென்று நினைத்துவிட்டான். நமக்கு இந்த ஜன்மத்தில் தொந்தி போடப் போவதில்லை. அதனுல் இந்தக் கோட்டு நமக்குத் தேவையில்லை” என்று வாசலில் வந்த பிச்சைக்காரனிடம் கொடுத்துவிட்டார். கிரீடம் மட்டும் சில நாட்கள் எங்கள் வீட்டில் கிடந்தது.

*

முன் ஜாக்கிரதை!

பள்ளிக்கூடம் போய் வருவதன் மூலம் என் படிப்பு கெட்டுவிடாதவாறு நான் பார்த்துக்கொண்டேன்.

—மார்க் ட்வெயின்

அரச குடும்பத்தில் பிறந்த கிரேபோட்டகின் என்ற ருஷ்ய அறிஞரின் பெயர் எங்கும் பரவியுள்ளது. ஏழைகளுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அந்த அறிஞரையும், ஒரு கைதியையும் பிரதான கதாபாத்திரங்களாகக் கொண்டு எழுதப்பட்ட வங்கக் கதை இது. இந்தக் கதையை ஸ்ரீ. கண. முத்தையா ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

இப்படியும் நடக்கிறது!

●

வித்தியாவதி வர்மா

சைபீரியாவின் பயங்கரமான சிறைச்சாலை; தன்னுள் அடங்கியிருக்கும் "பயங்கர" வாதிகளை முற்றிலும் மறைத்து வைப்பதற்கோ, என்னவோ பெரிய பெரிய பனிப்படலங்களைப் போர்த்துக்கொண்டு நிற்கிறது அந்தச் சிறைச்சாலை. சிறைச்சாலையின் நான்கு பக்கங்களிலும் பனிப்புயல் கர்ஜித்துக் கொண் டிருக்கிறது. பயங்கரமான அந்தகாரம். பனிப்புயலின் கோர அலறல். சிறைச்சாலையின் அறைகளிலே தங்களுக்குக் கிடைத்த கிழிந்த கம்பளித் துண்டுகளில் தங்கள் உடல் முழுவதையும் மறைத்துக் கொள்ளப் பயனற்ற முயற்சி செய்யும் கைதிகள். சிறையின் வாயிலில் பிரகாசித்துக்கொண் டிருக்கும் அந்த ஒரு விளக்கைத்தவிர மற்றெங்கும் இருட்டின் ஏகச்சக்ராதிபத்தியம். அந்தச்சிறைச்சாலையின் நிர்வாகத் தலைவர் இளவரசர் கிரேபோட்டகின் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை கனத்த கம்பளி உடையால் மூடிக்கொண்டு நின்றுகொண் டிருக்கிறார். அவருக்குப் பக்கத்தில் மற்றொரு ராணுவ ஆபீஸர்.

"இளவரசே! தாங்கள் ஏதோ கனவு கண்டிருக்கிறீர்கள். இந்தப் பயங்கரமான பனிப்புயலிலே எந்த முட்டாள் கைதி தன் உயிரை இழப்பதற்காக முயற்சிப்பான்" என்றார் ராணுவ உத்தியோகஸ்தர்.

"உமக்குத் தெரியாது. இந்தச் சிறையிலே பெரிய அரசியல் கைதிகளும் இருக்கிறார்கள்."

"இருந்தால்?"

"இருந்தாலா! அவர்களுக்கு உயிரின்மீது ஆசை இல்லை யென்பது நமக்குத்தெரியும்."

"வீரத்தோடு போராடி யுத்த களத்திலே மடிவதோ அன்றி மலர்ந்த முகத்தோடு தூக்கு மேடையேறி தூக்குக்கயிற்றைத் தழுவிக்கொள்ளுவதோ வேறு விஷயம். ஆனால் இந்தப் பனிப்பாறைகளுக்கு அடியிலே நசுக்குண்டு சிறிது சிறிதாக நலிந்து சாவது அத்தனை சுலபமல்ல, இளவரசே."

இளவரசன் கிரேபோட்டகின் மனம் எங்கெங்கோ ஓடத் தொடங்கிவிட்டது. 'ருஷ்யாவின் புதுமலர்களான இந்த வாலிபர்கள், அழகே வடிவெடுத்த யுவதிகள், உலகப் பிரசித்தி பெற்ற கிழவர்கள் இவர்களெல்லோரும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து எதற்

காகத்தான் போராடுகிருர்கள்? இவர்கள் உத்தேசமென்ன? மலர்ந்த முகத்தோடு தூக்கு மேடை ஏறும் சக்தியை இவர்களுக்குக் கொடுப்பது எது? ஆம். அந்த வீரர்கள்கூட இந்தப் பயங்கரப் புயலிலே பனியில் அகப்பட்டு மடிவதை விரும்பமாட்டார்கள். ஆனால், எனக்கு ஏதோ ஒரு கதவு திறந்த சப்தம் தெளிவாகக் கேட்டது. காலடிச் சப்தம்கூடக் கேட்டது. ஆனல் இந்த இரண்டொரு நிமிஷத்திற்குள் மறுபடியும் நிசப்தம். எங்கும் அமைதி. இவ்வளவு விரைவில் யாரும் மறைந்திருக்க முடியாது.'

கிரேபோட்டகின் தன் உதவி ஆபீஸரைத் திரும்பிப் பார்த்தார். பனியால் அவர் உடை முழுவதும் நனைந்திருந்தது. அவருடைய முகம் உறைந்த பனிபோல் வெளிறிப் போயிருந்தது. தமது சந்தேகத்திற்காக அந்த உத்தியோகஸ்தரைக் குளிரில் சிரமப்படச் செய்வது சரியல்ல என்று தோன்றிற்று கிரேபோட்டகினுக்கு. அவரை உள்ளே போகும்படி சைகை செய்துவிட்டுத் தாம் மட்டும் சிறைச்சாலைக்குள் புகுந்தார். வருடக் கணக்காகச் சிறைச்சாலை நிர்வாகத்தை நடத்தி வரும் கிரேபோட்டகின் கண்கள் இருட்டிலே சுலபமாகப் பார்க்கும் சக்தியைப் பெற்றிருந்தன. சரியான இடத்திலே வந்து நின்ருர் கிரேபோட்டகின். அவருடைய கைவிரல்கள் சிறிது அசைந்தன. மறு வினடி நாலைந்து கஜ தூரத்திற்குப் பரவிய பிரகாசம் தோன்றியது. ஆம், அந்த அறையின் கதவு திறந்துதானிருந்தது. ஆனல் அதில் வசிக்கும் கைதியோ ஓடுவதற்கு முயற்சி செய்பவனுகத் தோன்றவில்லை. அவன் ஏகாக்கிரக சித்தத்துடன் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தான். அந்தச் சிறைச்சாலையிலுள்ள ஒவ்வொரு கைதியையும் கிரேபோட்டகினுக்குத் தெரியும். அவன்— அந்தக் கைதி நாளைக் காலை தூக்கு மேடை ஏற வேண்டியவன்; இந்த உலகத்தின் சில மணி நேர விருந்தாளி. அவனுடைய மனம் லயித்த பிரார்த்தனையில் தலையிட கிரேபோட்டகின் விரும்பவில்லை. அவருடைய எண்ணங்களின் தாரை மறுபடியும் ஓடத் தொடங்கிற்று. இந்தப் பலவீனமான எலும்புக் கூட்டில், அந்த ருஷ்ய மகா சக்கரவர்த்தியை நடுங்கச் செய்யக் கூடிய மகத்தான சக்தி என்ன தானிருக்கிறது?

சில நிமிஷங்கள் கழித்து 'கைதி' என்று கூப்பிட்டார். அவன் திடுக்குற்றுத் திரும்பினன்.

"உனக்குத் தூக்கம் வரவில்லையா?"

அவனுடைய உதடுகளில் மெல்லிய புன்னகையின் ரேகை ஓடிற்று.

"தூக்கமா? இப்பொழுது நீண்ட தூக்கம் தூங்க வேண்டும் இளவரசே. அதற்கு முன்னல் அமைதியாக ஒரு முறை ருஷ்யாவின் விடுதலைக்காகப் பிரார்த்தனை செய்துகொள்ள விரும்புகிறேன்."

"ஒரு விஷயம் சொல்வாயா?"

மறுபடியும் அதே புன்முறுவல்; "அந்தப் பழைய கேள்விதானே?"

"இல்லை. சகோதரனே! நானும் மனிதன்தான். நாங்கள் எப்பொழுதும் கீழ்ப் படியிலே

தான் இருப்போமென்றும், எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் உபயோகித்துப் பிறருக்குத் தீங்கு செய்துகொண்டே இருப்போமென்றும் என் நிச்சயித்துக் கொள்ளுகிறாய்?"

கைதியின் முகத்திலே ஆச்சரியம் கலந்த கேள்விக்குறி.

"எந்தச் சக்தி உனது ஒப்பற்ற உயிரை இப்படி பணயம் வைத்து விளையாடும்படி தூண்டுகிறது? மரணத்தை ஏற்றுக் கொள்ளப் போகும் சமயத்திலும் புன்முறுவலோடு இருக்கும் தைரியத்தை உனக்குக் கொடுப்பது எது? இதை நீ சொல்ல முடியுமா?"

அந்தக் கைதி, வாலிப ஆபீஸர் கிரேபோட்டகினை இரக்கத்தோடு பார்த்தான்.

"நான் பசியால் வாடும் லட்சக்கணக்கான மக்களின் அபயக் குரல்களைக் கேட்டேன். ஒரு மனிதனின் சுகத்திற்காகப் பலருடைய வாழ்க்கை பாழாக்கப்படுவதைப் பார்த்தேன். எங்கள் தாய் நாட்டின் துயரங்கள் நாங்கள் உயிர் வாழ்வதையே ஒரு பாரமாகச் செய்துவிட்டன. அந்தக் கஷ்டத்தைப் போக்கும் முயற்சியிலே இந்தப் பாரமான உயிரை இழப்பது எங்களுக்குச் சிரமமல்ல. எங்களின் சக்தி எது என்று கேட்டீர்களா? எங்களுக்குப் பலனளிப்பது சத்தியமும் நியாயமும்தான். நான் இப்பொழுது மகிழ்ச்சியுடன் மாண்டு கொண்டிருக்கிறேன். ஏன்? நாங்கள் பற்ற வைத்த நெருப்பு அணைந்துவிடாது. அதன் ஜுவாலையிலே அகப்பட்டு 'ஜார்' ஆட்சி பஸ்பமாகிவிடும் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். சத்தியத்தின் ஒளியை அசத்தியம் என்கிற மேகம் எப்பொழுதும் மறைத்து விடமுடியாது."

"கைதி, நீ யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாய் என்பது தெரியுமா?"

கிரேபோட்டகினின் இதயத்தைத் துளைத்துக் கொண்டு பார்க்க விரும்புவது போல் அந்தக் கைதி அவரைப் பார்த்தான். அந்தக் கூரிய பார்வையிலே அவருடைய இதயத்துள் நடந்த போராட்டம் பட்டு விட்டதோ என்னவோ? கைதி உறுதியோடுபேசத் தொடங்கினான்:

"ஆம். அந்த மகத்தான சக்தியின் ஓர் அம்சத்துடன் பேசுகிறேன். அந்தச் சக்தியே உண்மையின் ஒளியை உணர்ந்து கொண்டு விடுமானால் இந்த உலகிலே — உலக சந்திதானத்திலே ருஷ்யா தலை நிமிர்ந்து நிற்க முடியும். இன்று லட்சக்கணக்கான குரல்களிலிருந்து எழும் பசிப் பிணியின் அலறல் இன்பம் நிறைந்த சங்கீத கோலாகலமாக மாறிவிடும்."

"கைதி, தயவு செய்து பேசாமல் இரு. நீ என்ன பேசுகிறாய் என்று உனக்கே புரியவில்லை."

"ஆம். சரியாகத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன் இளவரசே. என்னைப் போன்ற எத்தனையோ துர்ப்பாக்கிய சாலிகள் இந்தப் பனிப் பிரதேசத்திலே கிடந்து உழலுவதெல்லாம் உங்களைப் போன்ற பாக்கியசாலிகளின் காதுகளுக்கு ருஷ்யாவின் பசிக் குரல் எட்டச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான். உங்கள் கால்களிருக்கும் பூட்சுகளுக்குக் கொடுக்கும் மதிப்பாவது மக்களின் உயிர்களுக்குக் கொடுக்கத் தொடங்கி விட்டால்!"

"இவை போகட்டும், உன் சொந்த விஷயத்தைபற்றி ஏதாவது சொல். உன் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்."

சைபீரியாச் சிறையிலே கைதிகளிடம் இரக்கம் கொண்டு அவர்களுடைய சொந்த விஷயங்களை விசாரிக்கும் ஒரு ஆபீஸரை—அதிலும் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வாலிபரைக் கண்டு கைதி திடுக்கிட்டான். அவனால் நம்ப முடியவில்லை. தண்டனை கொடுப்பது திட்டுவதைத் தவிர இந்த ஆபீஸர்களிடமிருந்து அன்பான ஒரு வார்த்தையையாவது அந்தச் சிறைச்சாலையில் யாரும் கேட்டதில்லை.

"சொல் கைதி, நான் உனக்கு ஏதாவது செய்யமுடியுமா?" என்று கிரேபோட்டகின் மறுபடியும் கேட்டார்.

"விருத்தாப்பிய தசையடைந்த என் தாயாரும், தாயற்ற இரண்டு குழந்தைகளும் வீட்டிலிருந்தார்கள். ஆனால்......அவர்கள் இப்போது உயிரோடிருக்கிறார்களோ என்னவோ?"

"ஏன்?"

"ருஷ்யாவின் சக்கரவர்த்தி ராஜத்துரோகிகளான எங்கள் வம்சமே இல்லாமல் அழித்துவிட விரும்புகிறார். அவர் விருப்பம் யாவும் நிறைவேறுவதாயிருந்தால் இந்த ராஜத் துரோகிகளின் ஞாபகச் சின்னமேயில்லாமல் செய்துவிடுவார். ஆனால் தியாகிகளின் இரத்தச் சின்னம் எப்பொழுதும் மறைவதில்லையே!"

"அப்படியானால் நான் உனக்கு ஒன்றும் செய்ய முடியாதா?"

"செய்யலாம், நீங்கள் விரும்பினால்."

"சொல் கைதி. உன்னுடைய கடைசி ஆசையை பூர்த்தி செய்ய வேண்டுமென்று என் மனம் விரும்புகிறது."

"அது மிகக் கடினமான வேலை, இளவரசே!"

"என்னால் கடினமான காரியங்கள் செய்ய முடியாதா? அது என்னதான் சொல்லேன்."

"இந்த உலகத்தில் மக்கள் எல்லோரும் சமமான உரிமையோடு பிறக்கிறார்கள். ருஷ்ய வாசி ஒவ்வொருவனுக்கும் ருஷ்ய நாட்டின் மீது சமமான அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டால் அதுவே நீங்கள் எனக்குச் செய்யும் பெரிய உபகாரம்."

* * *

ஏழு நாட்கள் கடந்துவிட்டன. தூக்கு மேடையில் நின்ற அந்தக் கைதியின் மலர்ந்த முகத்தை கிரேபோட்டகினால் மறக்க முடியவில்லை. அவருடைய கண்களிலே தூக்கமில்லை. மனத்திலே அமைதி இல்லை. உயர்ந்த உணவின் ருசியை அனுபவிக்கும் சக்தியை நாக்கு இழந்துவிட்டது. இன்று வரை அவர் பார்த்த—அவரைச் சுற்றி நிகழ்ந்த கொண்டாட்டங்கள், அழகிய காட்சிகள், இன்ப வாழ்வு, எல்லாம் உண்மையல்ல; வெறும் நாடகத் திரைக் காட்சி என்று அவருக்குத்தோன்றிற்று. அந்தத் திரையை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் பட்டினியால் மெலிந்து வாடும் ருஷ்யாவின் பயங்கரக் காட்சிகள் தோன்றின. அவருடைய மனதை மகிழ்விப்பதற்காக நாட்டியமாடும் அழகிகளைவிட ஒப்பற்ற அழகு படைத்த சுந்தரிகள் பசிப் பிணியால் கிராமங்களில்

துடிக்கும் காட்சி அவருக்குத் தோன்றியது. கிரேபோட்டகின் கண்ணை மூடிக்கொள்ளுகிறார். ஆனால் "ருஷ்யவாசி ஒவ்வொரு வனுக்கும் ருஷ்ய நாட்டின்மீது சமமான அதிகாரமுண்டு" என்ற அதே வாக்கியம் அவருடைய காதுகளிலேஎதிரொலித்துவட்ட மிட்டுக் கொண்டிருக்கிறது.

'இல்லை...இல்லை. இனி கிரேபோட்டகின், ஜாரின் வலது கையாயிருக்க முடியாது. இந்தக் கைதிகள் அனுபவிக்கும் நரக வேதனையைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவர்கள் மலர்ந்த முகத்தோடு தான் இந்த வேதனையை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஆயினும் அவர்களுக்குச் கொடுக்கப்படும் தண்டனை என்ன, சாமானியமானதா? அந்த அழகிய வாலிபன் இவானோவிச் ருஷ்யாவின் வசந்த காலங்களில் இருபதைக்கூடப் பார்த்திருக்க மாட்டான். அந்த யுவதி யோசிபா இன்னும் பத்தொன்பது வயதைக் கூடக் கடக்காத ஒப்பற்ற அழகி. சூரியனையே காணாத இந்தப் பனி மண்டலத்திற்கு அழகு கொடுக்கும் காந்திபடைத்தவள். தனது பெண்மையையே பணயம் வைத்து, கொடுமை நிறைந்த ஆட்சியை எதிர்க்கத் தயங்காதவள். அந்தத் துணிவின் அவதாரங்கள் இந்தச் சைபீரிய இருட்டறைகளிலே அடைபட்டுக்கிடக்கின்றன. இந்த இளம் மலர்கள் மொட்டிலேயே கருகி விடுவதா? முழுதும் மலராத இம் மலர்கள் தாய்நாட்டின் பலிபீடத்தில் நசுக்கப்படுவதை நான் பார்த்துக் கொண்டிருப்பதா?'

நள்ளிரவு. எங்கும் பனி மழையின் கோர அட்டகாசம். ஆனால் கிரேபோட்டகின் உடம்பை இந்தப்பனியின் குளிர் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. சிறைச்சாலையில் இருளும் நிசப்தமும் ஆட்சிசெய்து கொண்டிருந்தன. கிரேபோட்டகின் படுக்கையை விட்டு எழுந்தார். பூனையைப் போல மெதுவாக சிறைச்சாலைக்குள் நடந்தார். ஓர் இருட்டறையின் முன்னால் வந்ததும் அவருடைய கால்கள் நின்றன. அறையினுள்ளே இருட்டையும் கிழித்துக்கொண்டு அவருடைய கூரிய பார்வை சென்றது. எவ்விதச் சிந்தனையுமின்றி நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான் வாலிபன்.

இவானோவிச்சினுடைய களங்கமற்ற முகத்தைப் பார்த்து கிரேபோட்டகினுக்குப் பொறாமை ஏற்பட்டது. மரண தண்டனை பெற்றிருக்கும் அந்த வாலிபன் முகத்தில்தான் எவ்வளவு களை நிறைந்த அமைதி! தாயின் மடியிலே தூங்கும் குழந்தையைப் போல எவ்வித மனச்சஞ்சலமுமின்றி நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருக்கிறான். அவன் மரணத்தை எதிர்பார்த்திருக்கும் கைதி! அவனுடைய நண்பர்கள் அவனை இங்கிருந்து வெளியேற்றிச் செல்ல முயன்றுகொண்டிருக்கிறார்களென்று கேள்விப்படுகிறான். அதைப்பற்றிய கவலைகூட இல்லாமல் அவன் தூங்கிக் கொண்டிருக்கிறான்.

கிரேபோட்டகின் மெதுவாக அவனை எழுப்பினார். திடுக்கிட்டு விழித்த அவனுடைய கண்களின் ஒளி அவரை நோக்கிப் பாய்ந்தது. அகில ருஷ்யாவையும் ஜொலிக்கச் செய்யும் சக்தி வாய்ந்தது போன்ற தீவிர சக்தி கொண்டு விளங்கிற்று அவனது

பார்வை. "இவானேவிச், மெதுவாக என்னுடன் வா" என்றுகிரேபோட்டகின் அழைத்தார். இவானேவிச் ஆச்சரியமடைந்தார். அவரது அழைப்புக்காக அல்ல, ருஷ்ய அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஜெயில் அதிகாரி இவ்வளவு இனிமையாகப் பேசியதைக் கண்டு. கடுமையான தண்டனைகளை அவன் பார்த்திருக்கிறான். ரத்தம் பீறிடும் கசையடிகளோ கொடுமையான கொலைத் தண்டனைகளோ, அவனுடைய தோழர்களைக் காட்டிக் கொடுக்கும்படி அவனைத் தூண்டும் சக்தியைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் இந்த இனிய பேச்சு அவனை திகைப்படையச் செய்தது.

"பயப்படாதே, சகோதரனே என்னுடன் 'வா' என்று மறுபடியும் அழைத்தார்" கிரேபோட்டகின். இருவரும் அவருடைய அறையை நோக்கிப் புறப்பட்டார்கள். அரச குடும்பத்திலே பிறந்து சுகபோகம் என்ற திரையால் பார்வை மறைக்கப்பட்டு உலகத்தின் உண்மை உருவத்தைக் காணமலே வளர்ந்த இந்த வாலிப ஆபீஸரிடமிருந்து அனுதாபத்தையோ, அன்பையோ எதிர்பார்க்கவில்லை இவானேவிச். நிமிஷங்கள் மணிகளிலே மூழ்கின. இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளப் பிரயத்தனப் பட்டனர்.

"நான் உனக்கு உறுதியாகச் சொல்லுகிறேன் இவானேவிச். உன்னுடைய தோழர்கள் நிச்சயம் வெற்றி பெறுவார்கள்."

"எப்படி?"

"நீ ஒரு விஷயத்தை ஒப்புக் கொண்டால்."

"என்ன?"

"நீ இந்தக் கொலை வேலைகளிலிருந்து ஒதுங்கிவிடுவதாக எனக்கு வாக்களிக்க வேண்டும்."

"நீங்கள் தவறு செய்கிறீர்கள் இளவரசே! நாங்கள் கொலை செய்வதில்லை. அரசியல் விவகாரத்திலே கொலை என்ற சொல்லே கிடையாது. நாங்கள் சரியான பாதையிலே நடக்கிறோம். வழியிலே தடைகள் ஏற்பட்டால் அதை ஒதுக்கிவிடப் பார்க்கிறோம். ஒரு பெரிய பாறை பாதையின் குறுக்கே நின்றுகொண்டு ஒவ்வொரு முறையும் நாங்கள் அதில் முட்டிக் கொள்ளும்படி செய்தால், நாங்கள் அதை அப்புறப்படுத்தாமல் அதிலேயே மோதி அழிந்துவிடச் சம்மதிப்போமா?"

"ஏன்? அந்தப் பாறையை விட்டு ஒதுங்கிப்போக முடியாதா?"

"பாதை அவ்வளவு பெரிதாயும் பாறை சிறிதாயுமிருந்தாலன்றோ ஒதுங்கிப்போக முடியும்?"

ஒரு நிமிஷம் மௌனம்.

"இல்லை, இளவரசே! நான் பொய் சொல்லமுடியாது. உங்களுடைய நிபந்தனையின்மீது நான் விடுதலையடைய விரும்பவில்லை."

"நன்றாக யோசனை செய். நான் உன்னை வேறொன்றும் கேட்கவில்லை. இந்தக் கொலைத் தொழிலை மட்டும் விட்டுவிடு. உன்னுடைய இந்த இளமை, அறிவு—யாவற்றையும் இந்தச் சைபீரியாவிலே பாழாக்காதே."

"நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வில்லை. இளமையும் அறிவும் தேசத்தின் சேவைக்காகத்தான் தேவை. அது எங்

கிருந்தாலென்ன? அது எங்கிருந்தாலும் தேசத்தின் சேவைக்காகவேதான் உபயோகிக்கப்பட வேண்டும்.''

மறுபடியும் மௌன அமைதி.

"நல்லது. இப்பொழுது நீ போ. இன்று இரவின் பிற்பகுதி நினைவிருக்கட்டும்."

"அதன் விளைவு தங்களுக்கு மிகவும் தீங்கு விளைவிப்பதாக இருக்கும்.''

"எனக்குத் தெரியும். இப்பொழுது எந்த நெருப்பு ருஷ்யக் குடிசைகளிலே ஜுவாலை விடுகிறதோ, அந்த நெருப்பு ராஜ மாளிகையின் முகட்டையும் எட்டட்டும்."

"ஆம். இளவரசே! இன்று வரை, துக்கப்பட்டவர்கள் தங்களுடைய துயரத்தைப் போக்குவதற்காக நடத்தும் சுயநலப் போராட்டம் என்று சொல்லப்பட்டு வந்தது. இனி உங்களின் செய்கையால் நியாயத்தின் போராட்டமென்று உலகம் சொல்லும்."

* * *

முற்பகல் தமது அறையில் ஒரு சோபாவிலே படுத்துக்கொண்டு இளைப்பாறிக் கொண்டிருந்தார் இளவரசர் கிரேபோட்டகின். வெளியே குதிரைகளின் காலடியோசை கேட்டது. யார் வருகிறார்கள்? மறுபடியும் புதிய கைதிகளா? அல்லது தலைநகரத்திலிருந்து ஏதும் செய்தி வந்திருக்கிறதா? குதிரையின் காலடியோசைகள் இவரை நோக்கி வராமல் வேறெங்கோ செல்வதுபோல் கேட்டது. உதவி ஆபீஸர்கள் யாரும் வேட்டைக்குச் செல்லுகிறார்களோ? ஆனால் தளபதியின் உத்திரவில்லாமலா?......இருக்காது எனக்குத் தெரியாமல் இங்கு என்ன நடக்கிறது? கோபத்தோடு எழுந்திருந்து பார்க்க விரும்பினார். அப்பொழுது அவர் மாளிகையின் வாசலிலே கனத்த ராணுவ பூட்சுகளின் சப்தம் கேட்டது. யாரோ உள்ளேவர விரும்புகிறார்கள் என்று தெரிந்து கொண்டு "உள்ளே வரலாம்" என்று சொன்னார். சிலராணுவ ஆபீஸர்கள் உள்ளே வந்தார்கள். முதலில் வந்தவர் அவருடைய பால்ய நண்பர் கர்னல் ஜோசப்.

"அடே ஜோசப்! உன்னை இவ்வளவு நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திப்பது எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது."

"எனக்கு அப்படியில்லையே கிரேபோட்டகின், நீ என்ன செய்து தொலைத்துவிட்டாய்?"

"நானா?" கிரேபோட்டகினுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. விடுதலையடைந்த இவானோவிச் சும்மா யிருக்கவில்லை. அவனுடைய கட்சியின் செல்வாக்கு ருஷ்யா முழுவதும் பரவி விட்டது. இவானோவிச்சும், நிக்கோலசும் சேர்ந்து புரட்சி நெருப்பை ருஷ்யாவெங்கும் கொழுந்துவிட்டெரியச் செய்திருக்கிறார்கள். ஆகவே இந்த ஆபத்தை, கிரேபோட்டகின் ஒவ்வொரு நாளும் எதிர் பார்த்துக் கொண்டே இருந்தார். ஆயினும் இது நண்பன் ஜோசப்பின் உருவத்திலா?

"கிரேபோட்டகின் நீ ஏன் இப்படி நடந்து கொண்டாய்? உன் மீது ஏராளமான குற்றம் சுமத்தியிருக்கிறார்களே. கடமையைக்கூட மறந்து பயங்கரக் கைதிகள் ஓடிப் போகத் துணை செய்தாயாமே?"

ஜோசப்பின் கண்கள் நீரால் பொங்கி வழிந்தன. அவன் மனம் கடந்த காலத்தையும் இளமையில் இருவரும் சேர்ந்து கழித்த நாட்களையும் நினைவுக்குக் கொண்டு வந்தது. ஐயோ! இந்த வாலிப நண்பனின் இளமை முழுவதும் இந்தப் பனிப் புயலிலே புதைக்கப்பட்டு விடுமோ? அப்படியானல் அதற்கு நான் கருவியா?

கிரேபோட்டகின் தன்னைச் சமாளித்துக் கொண்டார். மெதுவாகச் சிரித்துக் கொண்டே "நான் தயாராகி விட்டேன். இனி நீ உன் கடமையைச் செய்யலாம்" என்ருர்.

"நண்ப, நான் அரசியல்வாதியல்ல. ஒருகால் நீ முயன்ருல் குற்றமற்றவனென்று நிரூபிக்கக் கூடும்."

"அதை நான் குற்றமென்று கருதினுல்தானே?"

இரண்டு தோழர்களும் அப்படியே தழுவிக் கொண்டார்கள். இருவருக்கும் நிலைமையின் பயங்கரம் தெளிவாகத் தெரிந்தது.

சிறையின் பிரதான அதிகாரி இளவரசன் கிரேபோட்டகின் இன்று அதே சிறையில் ஒரு கைதி. ஆனுல் அவருடைய முகத்திலே உண்மையின் அமைதி நிலவி யிருந்தது.

✲

ராஜனின் கீர்த்தி

பிரியதரிசி ராஜன் கீர்த்தியின் பொருட்டுப் பெரிய காரியங்களைச் செய்வதில்லை. தன்னுடைய பிரஜைகளை நல்லொழுக்க முள்ளவர்களாக ஆக்கினன் என்னும் கீர்த்தியே அவனுக்கு வேண்டியது. தவிரவும், இதர காரணங்களினுல் உண்டாகும் கீர்த்தியை அவன் கிளிஞ்சல் ஓட்டுக்குச் சமானமாக நினைப்பான். தன்னலம் கருதுகிறவர்கள் இந்த இரண்டாம் பதவியைச் சம்பாதித்துக் கொள்ளுவார்களாக!

—அசோகனின் கல்வெட்டு

யார்மேல் தப்பு?

விபசாரக் குழந்தைகள் என்பவர்கள் கிடையாது; விபசாரப் பெற்ருேர்கள்தான் உண்டு.

—ஜர்னை

யாருக்கு வயது குறைச்சல்?

மார்லீன் டீட்ரிச் என்னும் மாது தன்னைப்போட்டோ எடுக்கிறவனைப் பார்த்து, "நீ முன்னுல் எடுத்த என் போட்டோக்களைவிட இப்போது எடுப்பவை அழகாக இல்லையே, ஏன்?" என்று கேட்டாள். அதற்குப் போட்டோ எடுப்பவன் சாதுரியமாகச் சொன்ன பதில்:

"இப்போது இருப்பதைவிட அப்போது எனக்கு எட்டு வயது குறைச்சல் அல்லவா?

—ஈவ்னிங் ஸ்டாண்டர்டு

இடிக்குத் தப்புவது எப்படி?

நெட் ஜான்ஸ்டன்

இடியினாலும், மின்னலினாலும் மனிதர்கள் சாவது தொன்று தொட்டு நடந்து வரும் காரியம். இந்த இடியிலிருந்தும் மின்னலி லிருந்தும் தப்புவதற்கு ஒரு சில வழிகளாவது இல்லாமல் போகவில்லை. அவற்றையே கட்டுரையாளர் விவரிக்கிறார். ஜூடெஸ்ஸி விருந்து.

* * * * * * * * * * * * * * * * * * *

அணு குண்டு சமீபத்தில் வந்தது. அணு குண்டைக் கண்டு பிடித்ததை நினைத்து நீங்கள் திகிலடைந்திருக்கலாம்; திகிலடையாமலும் இருக்கலாம். ஆனால், அநேக காலமாக மிகப் பெரும் அபாயமாக இருந்து வரும் இடியைக் கண்டு நீங்கள் திகிலடையாமல் இருக்க முடியாது.

இடி, உலகத்தில் இன்ன இடத்தில்தான் விழும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. உலகத்தில் ஏதோ ஒரு சில இடங்களைத் தவிர, மற்ற எல்லா இடங்களிலுமே இடி விழுகிறது. ஆகவே இடியிலிருந்து தப்புவதற்கு முயற்சி செய்வது வீண் என்பதில் சந்தேகமில்லைதான். உங்களில் சிலர் ஆபத்துக்குப் பயப்படாத துணிச்சலான ஆசாமிகளாக இருக்கலாம். அவர்கள், 'என் மீது இடி விழுந்தால் விழட்டும்; சிரமம் இல்லாமல் என் உயிர் பிரியும் அல்லவா?' என்பார்கள். மற்றவர்களோ இடிக்குப் பயந்து, படுக்கைக்குக் கீழே நுழைந்து போர்வையால் இழுத்துப் போர்த்திக்கொள்ளுவார்கள். ஆனால் இந்த இரண்டு கோஷ்டியினரும் செய்யக்கூடிய காரியங்கள் முற்றிலும் சரி, அல்லது முற்றிலும் தவறு என்று சொல்லிவிடமுடியாது.

இடியைக் கண்டு ஓரேயடியாகப் பயப்படுகிறவர்கள், பழைய மூட நம்பிக்கையை உண்மை என்று நம்புகிறார்கள். பழைய காலத்தில் எகிப்து, கிரீஸ், ஸ்காண்டிநேவியா முதலிய நாடுகளில் மின்னலும், இடியும் கடவுளரின் கோபத்தைக் காட்டும் அடையாளங்கள் என்று நம்பினார்கள். இதனால், பாதிரிமார்கள் ஜனங்களிடம் போய், "பாவம் செய்யாதீர்கள்! பாவம் செய்ததனால் அல்லவா இப்படி இடியும் மின்னலுமாக இருக்கிறது" என்று உபதேசம் செய்வதற்கு வசதியாக இருந்தது.

கிரேக்கர்கள் ஸீயஸ் என்ற கடவுளை வணங்கி வந்தனர். அந்தக் கடவுள் மற்றக் கடவுளரை யெல்லாம்விட அதிக பலம் உடையவராம். அவருடைய ஆயுதம் என்ன தெரியுமா? இடிதான். அவர் தெய்வலோகத்தில் இருந்து கொண்டே கீழே பூலோகத்தில் என்னென்ன நடக்கிறது என்று பார்த்துக்கொண்டிருப்பாராம். பூலோகத்திலுள்ள எவனாவது ஒரு போக்கிரியைத் தண்டிக்க நினைத்தால் உடனே தம்முடைய ஆயுதத்தை அதாவது இடியை ஏவிவிட்டு விடுவாராம். இது கிரேக்கர்கள் நம்பி வந்த விஷயம்.

டிமிர் பாரன்
பட்டாச்சார்யா
1910-ம் வருஷம் கல்கத்தாவில் பிறந்தவர். அவர் தனது 18-வது வயதில் "சாரட்" என்ற வாத்தியம் கற்றார். அதுதான் அவருக்கு முதல் கீர்த்தியை அளித்தது. அவர் உஸ்தாத் அமீர்கான், உஸ்தாத் அல்லாவுதீன்கான் இவர்களின் சிஷ்யர். 1930-ம் வருஷம் உதய ஷங்கர் கோஷ்டியில் சேர்ந்து அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பா முதலிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அந்நாடுகளிலெல்லாம் அவரின் திறமை நன்கு தெரிந்துகொள்ளப்பட்டது. அவரின் இந்திய சங்கீதத்தை வாத்தியங்களில் நன்கு அமைத்து வாசிப்பதின் திறமை அவருக்கு அளவில்லா கீர்த்தியையும் பெற்றிருக்கிறது.
டிமிர் பாரன்
ஸ்வரப் பாடகர்
கியாதி பெற்ற பாடகரும் இந்திய சங்கீதத்துக்கு புது ஸ்வரங்கள் ஏற்படுத்தி இந்திய வாத்தியங்களின் வாசிப்பையே புதுப்பித்தவருமான டிமிர் பாரன் சொல்லுவதாவது:
"சங்கீத சிருஷ்டிக்கு டீயின் உதவியை நான் மிகவும் மதிக்கிறேன். எனது பிரஞையில்-அது அடிக்கடி ஒரு ஸ்வரத்தையும்-லயத்தையும் தூண்டுகிறது. அதை வாத்தியத்தில் வாசிக்க அது ஒரு உன்னத வாத்திய இசைப் பொருத்தத்தின் உச்ச நிலையை அடைகிறது."
டீ
ஊக்கத்திற்கு
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

லிப்டன்ஸ்
என்றால்
முதல்தரமான
டீ
JAKOOJA BRAND FINEST DUST TEA
LIPTON'S
JAKOOJA
FINEST DUST TEA
PACKED BY LIPTONS

LTK. 132 J. TM.

சமீபகாலம் வரையில்கூட, மின்னலை, தண்டனை கொடுக்கும் ஆயுதமாகவே கருதி வந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள், இடியைத் தடுப்பதற்காக இடி தாங்கியை வீட்டில் வைப்பது தப்பு என்று ஆட்சேபித்தார்களாம். கடவுள் இடியின் மூலமாக நியாயத் தீர்ப்பு செய்வதை, மனிதர்கள் தடுப்பது தவறு என்பது அவர்களுடைய வாதம்!

பொதுவாக, ஆகாயத்தில் இரண்டு வகைப்பட்ட மின்சார சக்திகள் அதிகமாகி ஒன்றுக்கொன்று உரசிக்கொள்ளுவதால் தான் மின்னல் ஏற்படுகிறது. வானவெளியில் ஏராளமாக மேகங்கள் திரளுகின்றன. அப்போது இரண்டுவகை மின்சார சக்திகளில் ஒன்றாகிய *உத்தம சக்தியானது மேகங்களின்மேல் பரப்புக்குப் போய்விடுகிறது. அதம சக்தி கீழ்ப்பகுதியில் இருக்கிறது. பூமியின் மேல் பரப்பானது மேகங்களின் மேலே இருக்கும் உத்தம சக்தியைக் கீழ்நோக்கி இழுக்கிறது; அப்படி இழுக்கும் போதுதான் மின்னல் உண்டாகிறது.

ஸ்காண்டிநேவியாவில், அதாவது நார்வே, ஸ்வீடன் முதலிய நாடுகளில் இடி முழக்கத்தை, தோர் என்ற தெய்வம் ஏறிச்செல்லும் ரதத்தினுடைய சக்கரங்கள் உருளும் சப்தம் என்று கருதினர்கள்.† உண்மையில் இடி எப்படி உண்டாகிறது?

ஆகாயத்தில் மின்னல் பாய்கிற பொழுது, அந்த மின்னல் செல்லும் பாதையானது சூடேறிப் போய்விடுவதுடன், விரிவடைந்து கொண்டும் செல்லுகிறது. அந்தப் பாதை குளிரும் சந்தர்ப்பத்தில், அதன் விஸ்தீரணமும் குறுகத் தொடங்குகிறது. அப்படிக் குறுகும்போது, மின்னல் முன்பு வியாபித்திருந்த இடங்களை நோக்கி, மிகவும் வேகமாக வாயு பாய்ந்து முழக்கத்தை உண்டாக்குகிறது. அதுதான் நாம் கேட்கும் சப்தம்.

புயலும் மழையுமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் ஆகாயத்தில் ஓயாமல் மின்னல் வெட்டிக் கொண்டே இருக்கிறது. ஆனாலும் மின்னல் பூமியை நோக்கிப் பாய்வது ஏதோ அபூர்வமாகத் தான். இயற்கையின் பயஙகை உண்டாகும் இந்த மின்னலின் பாய்ச்சலைத் தடுப்பது நடக்காத காரியந்தான். மின்னல் எந்த வழியில் பாய்ந்தால் இலகுவாகப் பூமியைத் தொடமுடியுமோ அந்த வழியிலேயே பாய்கிறது. அப்படிப் பாயும்போது அதன் வழியில் நீங்கள் நின்றால், நீங்கள் மின்னலுக்கு இரையாக வேண்டியதுதான்.

ஆபத்து இந்தமாதிரி மகா பயங்கரமாக இருக்கிறது. இந்த ஆபத்தைத் தடுப்பது எப்படி? கூடியமட்டிலும், மின்னல் உங்களை நோக்கிப் பாய்வதற்கு ஏதுவில்லாதபடி செய்துகொள்ளவேண்டும். அதனால், மின்னல் வெட்டக்கூடிய சமயத்தில் உலோகத்தால் செய்யப்பட்ட பெரிய சாமான்களை நீங்கள் கையில் வைத்திருக்கக்

* Positive - உத்தம ; Negative - அதம.

† தமிழ் நாட்டிலும் இடி முழக்கத்தை அர்ஜுனனுடைய ரதத்தின் சக்கரங்கள் உருளும் ஓசையென்றும், மின்னலை அர்ஜுனனுடைய சாட்டையென்றும், இடியை அர்ஜுனனுடைய சாட்டையடியென்றும் நம்புகிறார்கள். —ஆசிரியர், சக்தி

கூடாது. கம்பிகள், உலோகத் தூண்கள், மின்சாரம் சம்பந்தப் பட்ட கருவிகள் ஆகியவற்றையும் நீங்கள் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

நீங்கள் தண்ணீரில் நீந்திக் கொண்டிருந்தால், உடனே தண்ணீரைவிட்டு வெளியே வந்துவிட வேண்டும். ஏனென்றால் தண்ணீர் மின்சாரம் பாய்வதற்கு வசதியான உபகரணமாக இருக்கிறது.

நீங்கள் திறந்த வெளியில் நிற்கும் போது மின்னல் வெட்டினால், நீங்கள் மரத்தடியில் போய் நிற்காதீர்கள். மின்னல் மரத்தின் வழியாகவே பூமியை நோக்கிப் பாயக்கூடும். ஆகவே மரத்தைப் பிடித்த சனியன் உங்களையும் சேர்த்துப் பிடித்துவிடும்! திறந்த வெளியில் நிற்கும் போது மின்னலுக்கு ஏற்ற பாதுகாப்பு என்ன தெரியுமா? திடீரென்று சாஷ்டாங்கமாகத் தரையில் படுத்துவிட வேண்டியதுதான். அந்தத் திறந்த வெளியில் உங்களுடைய சரீரத்தைத் தவிர வேறு ஏற்றமான இடம் இல்லை என்றால் தான் உங்களுக்கு ஆபத்து; அப்படி இடம் இருக்கும் பக்ஷத்தில் நீங்கள் ஆபத்திலிருந்து தப்பிவிடலாம்.

மின்னலின் காரணமாக அதிர்ச்சியடைந்து மூர்ச்சையானவனுக்கு, நீரில் மூழ்கியவனுக்கு முதல் சிகிச்சையளிப்பதைப் போல அளிக்க வேண்டும். அவனுக்கு இருதயத் துடிப்பு நின்றுபோயிருந்தாலும், செயற்கை வழியில் அவனை மூச்சுவிடச் செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

மேலும், நமக்கு ஆபத்து ஏற்படாதவாறு மின்னலைப் பூமிக்குக் கொண்டுவர முடியும். அதற்குச் சில சாதாரணமான முன்னெச்சரிக்கைகள் தேவை.

விவசாயிகள் தங்கள் தானியக் களஞ்சியங்களின் மேல் இடிதாங்கிக் கம்பியை வைத்தால், மின்னல், களஞ்சியத்துக்கு அபாயம் விளைவிக்காமல், கம்பி வழியாக வந்து தரைக்குள் புகுந்துவிடும்.*

வீடுகளின் மேல் பரப்பின் வேறு ஏதாவது கம்பிகள் இருந்தால், அந்தக் கம்பிகளுக்கும் பூமிக்கும் தொடர்பு இருக்கும் படியாகச் செய்ய வேண்டும். அவ்விதம் தொடர்பு இல்லை என்றால் மின்னல் கீழ் நோக்கிப் பிரவேசிக்க மார்க்கம் கிடையாமல் வீட்டின் மேற்பரப்பில் கிடக்கும் ஏதாவது ஒரு கம்பியை எரித்துவிடும். வீட்டுக்குள்ளே இருப்பவர்கள் வெளிச் சுவர்களை விட்டு உள்ளே தள்ளி, வீட்டின் மத்திய பாகததில் கூடி இருந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றையும்விட, நீங்கள் உங்கள் வீடுகளில் கார்கள் இருந்தால், அவற்றில் போய் இருந்து கொள்வது மிகவும் பாதுகாப்பாகும். ஏனென்றால், கார்களில் உள்ள ரப்பர் மின்னலின் மின்சாரத்தைத் தடுத்துவிடுகிறது.

மின்னலைப்பற்றி மற்றொரு மூட நம்பிக்கையும் இருக்கிறது. அதாவது, மின்னல் ஓரிடத்தில்

---

* செப்புக் கம்பியின் ஒரு நுனியை வீட்டின் உயரமான பாகத்தில் மேல் நோக்கியிருக்கும்படி வைக்க வேண்டும். அதன் மற்றொரு நுனியைக் கொண்டு வந்து, கீழே ஒரு கிணற்றுக்குள்ளாகவாவது அல்லது பூமிக்குள்ளாகவாவது விட்டுவிட வேண்டும்.

வெட்டி, சேதப்படுத்திவிட்டால், மறுபடியும் அதே இடத்தில் வெட்டுவது கிடையாது என்று சிலர் நம்புகிறார்கள். இது தப்பு. மின்னல், தான் பாய்வதற்கு ஏற்ற வசதியான ஓரிடத்தைக் கண்டு கொண்டால், அதே இடத்தில் மாறி மாறிப் பாய எத்தனிக்கும். உதாரணமாக, அமெரிக்காவில் நியூயார்க் நகரத்தில் உள்ள 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்' என்ற கட்டிடத்தில், ஒரு சமயத்தில் பதினைந்து நிமிஷங்களில் பதினைந்து தடவைகள் மின்னல் பாய்ந்தது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். மின்னல் கீற்று பாம்புபோல் வளைந்து நெளிந்திருக்கிறது அல்லவா? அந்த வளைவான மின்னல் கீற்றில், ஏறக்குறைய நாற்பது தடவைகள் வெட்டக்கூடிய நாற்பது மின் சக்திகளும் அடங்கியிருக்கின்றன. ஆகவே, ஒரு மின்னல் கீற்றை ஒரு மின் சக்தியாகக் கருதிவிடக் கூடாது.

புயல் காற்று எந்தத் திசையை நோக்கி அடிக்கிறதோ அந்தத் திசையை நோக்கி மின்னலும் செல்லுகிறது என்று ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது. இதனால்தான் இடி முழக்கத்துடன் புயல் காற்று அடிக்கும் போது வீட்டிலேயுள்ள ஜன்னல்களை எல்லாம் மூடிவிடுகிறார்கள். ஜன்னல் கண்ணாடி ஜன்னலாக இருந்தால் கொஞ்சம் பாதுகாப்பு உண்டு. கண்ணாடியில் மின்சாரம் பிரவேசிக்க முடியாது. அதுவும், மின்னல் வீட்டுக்கு வெளிப் பக்கமாகப் பாய்ந்தால்தான் ஆபத்தில்லை; வாயு சக்திகளில் வரக்கூடிய மின்னலை ஜன்னலைச் சாத்தித் தடுக்க முடியாது.

மின்னலிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமானால் புத்திசாலித்தனம் வேண்டும்; நிதானமும் வேண்டும். யாதொரு விதமான பதற்றமும் படபடப்பும் இல்லாமலே தப்புவதற்குரிய மார்க்கங்களைக் கைக்கொள்ள வேண்டும்.

மின்னல் மூலமாக ஒரு தடவை மின்சக்தி பாய்ந்தால் அது குறிப்பிட்ட இடத்தில்தான் பாயுமே ஒழிய, பாய்ந்து விஸ்தரிப்பதில்லை. அதனால், அது பாயக்கூடிய இடத்தைத் தவிர அதற்குப் பக்கத்தில் நின்றாலும் ஆபத்தில்லை. மின்னலினால் ஒருவன் சாகிறான் என்றால் அவனுக்கு மின்னலினால் சாகிறோம் என்றே தெரியாது. மின்னொளியையும் அவனால் பார்க்க முடியாது. மின்னல் பாயக் கூடிய ஒளி ஒருவன் கண்ணுக்குத் தென்படுகிறதென்றால், அவனுக்கு ஆபத்தில்லை என்று அர்த்தம்.

மின்னலைப்பற்றி விஞ்ஞானிகள் எவ்வளவோ ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கிறார்களே ஒழிய, மின்னலினால் வரும் ஆபத்தைத் தடுப்பதற்குரிய வழியை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. மின்னல் எந்த இடத்தில் பாயப்போகிறது என்பதை முன் கூட்டித் தெரிந்துகொள்ளுவதற்குரிய மார்க்கத்தையும் அவர்கள் கண்டு பிடிக்கவில்லை. ஆகவே மின்னல் ஆபத்தை நினைக்கும் போது ஒரே ஒரு ஆறுதல்தான் நமக்கு உண்டாகிறது. அதை நினைத்து நாம் கவலைப்படாமல் இருக்கலாம். அந்த ஆறுதல் எது? மின்னல் நம்மைக் கொன்றால், இன்னது தான் நம்மைக் கொல்லுகிறது என்று நமக்குத் தெரியாத வண்ணமே நம்மைக் கொன்றுவிடுகிறது. இது தான் நமக்கு ஆறுதல்!

✲

கண்ணாடித் தொழில்

உ. வெ. ராமசாமி

நமது தினசரி வாழ்க்கையில் மிக முக்கியமாகப் பயன்படும் பல பொருள்களில் கண்ணாடியும் ஒன்றாகும். மணலோடும் சாம்பலோடும் சாதாரணமாக ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது கண்ணாடி மிக விநோதமான வஸ்துவாகத் தெரிகிறது. அது பாத்திர உருவிலே மாறும்போதும், அதன் மீது ஒளிக் கிரணங்கள் பட்டுத் தெறிப்பதில் ஏற்படும் மாறுதல்களையும் விநோதங்களையும் பார்க்கும் போதும் அது எவ்வளவு விசித்திரமான பொருள் என்பது தெரியும்.

கண்ணாடி செய்வது ஒரு தனிக் கலையாகும். கண்ணாடியைப் பாத்திரங்களாக மாற்றும் வழக்கம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே இருந்து வந்திருக்கிறது. எகிப்து, ரோம், பாக்தாத், வெனிஸ், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் எல்லாம் பல அருமையான கண்ணாடி வேலைப்பாடுகளை செய்து உலகத்திற்குக் காட்டியிருக்கின்றன. கண்ணாடி வேலை செய்வது, கையால் செய்யும் மற்ற தொழில்கள் எல்லாவற்றையும்விட மிகவும் அழகான வேலையாகும். உருகிய கண்ணாடி சூடாகவும், 'பிளாஸ்டிக்'காகவும் இருக்கும்பொழுது, வேண்டிய உருவில் அமைப்பதற்கு அபாரத் திறமையும் சக்தியும் வேண்டும். வாத்தியத்திற் கேற்பவும் பாடலின் பாவத்திற்கேற்பவும் நடனமாடுவதைப் போல, உருகி வரும் கண்ணாடியை, கையையும் பிற உபகரணங்களையும் கொண்டு மிகக் கவனமாக வேலை செய்ய வேண்டும். ஆனால் தற்காலத்தில் ஒரு நாளைக்குப் பதினையாயிரம் பாட்டில்கள் உற்பத்தி செய்யும் அளவுக்கு அந்தத் தொழில் விஞ்ஞான ரீதியில் வளர்ந்துவிட்டது.

கண்ணாடி பல பொருள்களின் கூட்டுச் சேர்க்கைதான். மணல், கற்பொடி முதலிய உருவிலே உள்ள 'சிலிகா,' திராவகக் குழம்போடு கலக்கப்படுகிறது. இந்தத் திராவகக் குழம்பு மரச் சாம்பலால் தயாரிக்கப்பட்ட பொட்டாஷ் சோடாவால் தயாரிக்கப்படுகிறது. இத்தக் கலவை சூடாக இருக்கும்போது, திரவமாக பிளாஸ்டிக்கைப் போல் இருக்கிறது. அதாவது கம்பிகளைப்போல நெடுக இழுக்கலாம். இந்த நிலையில் நமக்கு வேண்டிய வர்ணங்களைச் சேர்த்துக் கொள்ளலாம். மணலில், இரும்புத் தூள்கள் கலந்திருப்பதால், அந்த மணலால் ஆன கண்ணாடி கொஞ்சம் பச்சை நிறமாக இருக்கும். இந்த வர்ணம் தான் கண்ணாடியின் இயற்கை வர்ணம் என்று கூறலாம்.

கண்ணாடியை மூன்று வழிகளில் பாத்திரங்களாக மாற்றலாம். எகிப்தில் பழைய காலத்தில் ஒரு முறை இருந்தது. மணல் கலந்த களி மண் உருண்டை ஒன்றை எடுத்துக்கொண்டு,

கண்ணாடி கீழேவிழுந்தால் உடைந்துவிடும் என்று பயப்பட்டுவந்தோம். ஆனால், இன்று கண்ணாடியை நூலாக இழைத்து, அந்த நூலைக்கொண்டு தைக்கவும் செய்கிறார்கள். இப்படி அதிவேகமாகமுன்னேறிவரும் கண்ணாடித் தொழிலை விவரிக்கும் இந்தக் கட்டுரை, விஸ்னர் கட்டுரை, பிரிட்டிஷ் சர்க்கார் பிரசுரம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்றது.

அதைச் சுற்றிலும் சூடான கண்ணாடிக் குழம்பைப் பூசிவிடுவது. இது குளிர்ந்த பிறகு, களிமண்ணை நீக்கிவிட்டால் பூசிய கண்ணாடி உறைந்திருக்கும். இந்த மாதிரியாக சிறு சிறு பாத்திரங்களை மட்டும்தான் அப்போது செய்து வந்தார்கள். ஆனல் "ஊதல்" முறைவந்த பிறகு அந்த வழக்கம் மறைநதுவிட்டது. ஊதி ஊதி பாத்திரங்கள் தயாரிக்கும் முறை கிறிஸ்தவ சகாப்தத் தொடக்கத்தில் வழக்கத்திற்கு வந்த, வெகு சீக்கிரத்தில் ரோம ராஜ்யம் முழுவதும் பரவிவிட்டது. ஓர் இரும்புக் குழாயின் நுனியில், உருகிய கண்ணாடித் துண்டை வைதது, குழாயின மற்ருெரு நுனியில் காற்றை ஊத வேண்டும். குழாயை ஊசலாட்டிக் கொண்டே இருந்தால் குமிழியும் விரியும். வேண்டிய உருவத்தில் அதை மாற்றிக் கொள்ளலாம். கத்தியால் வேண்டிய அளவு வெட்டிக்கொள்ளலாம். இந்த முறை இன்றைக்கும் கூட லண்டனில் சில இடங்களில் வழக்கத்தில் இருக்கிறது. ரோமானியர்கள் இம் முறையை அனுஷ்டித்தார்கள். ஆனல் மேலிருந்து குத்துகிற, அதாவது ஸ்டாம்ப் குத்துவதுபோலக் குத்துகிற முறை கண்டு பிடிக்கப்பட்ட பிறகு, ஊதும் வழக்கம்கைவிடப் பட்டது.

கண்ணாடியை வித விதமாக அழகு படுத்தும் வேலையிலும், வர்ணக் கண்ணாடிகள் செய்வதிலும் எகிப்தியர்கள் சிறந்தவர்களாக விளங்கினர். அலெக்ஸாண்டிரியாவிலிருந்து உலகம் பூராவும் கண்ணாடி நகைகள் அந்தக் காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டனவாம். பலதிறப்பட்ட உருவங்களில் கண்ணாடியை ஊதுவதிலே, அன்றைக்கும் இன்றைக்கும் ரோமானியர்கள்தான் சிறந்து விளங்குகிருர்கள். அளவான, அழகான வட்டமான பாட்டில்கள், வட்டமான பாத்திரங்கள், நாற்பக்க வட்டில்கள்—ஆகியவற்றை யெல்லாம் ரோமானியர் செய்தனர். இந்தப் பாத்திரங்க ளெல்லாம் வாசனைத் திரவியங்கள் வைத்துக்கொள்ள உதவி புரிந்தன.

இப்படிக் கண்ணாடித் தொழிலில் பெயர் பெற்றிருந்த ரோமானியர்கள்தான் ஐரோப்பா முழுவதும் நாகரிகத்தைப் பரப்பினர்கள். அப்போது ஐரோப்பா அநாகரிகத்தில் ஆழ்ந்திருந்த காலம். இந்தக் காலத்தில்தான் கண்ணாடிக்கு வெள்ளியைவிட அதிக மதிப்பு இருந்தது. அருமையான ரகங்களில் நாமும்கண்ணாடியைத் தயாரிக்க முடியும். அதைச் செய்யும்முறைகளில் நல்ல கவனம் செலுத்தி அவற்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். கண்ணாடி செய்வதில் ரகங்கள் மாறுபட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. மனிதத் திறமையில் நம்பிக்கையிருந்தால், கண்ணாடித் தொழில் இன்னும் விருத்தி அடைய வழி உண்டு. இந்தக் காலத்தில்கூடக் கண்ணாடி செய்யும் கலை பிரமாதமாக, விஞ்ஞானத்தின் துணைகொண்டு வளர்ந்திருக்கிறது. அமெரிக்காவில், இருபது வருஷத்திற்கு முன்னல் கனவுகூட கண்டிருக்க முடியாத விஷயங்களை எல்லாம் இப்பொழுது கண்டு பிடித்திருக்கிருர்கள். கண்ணாடியின் ஐம்பது புதிய உபயோகங்களையும் கண்டு பிடித்திருக்கிருர்கள். கட்டிடங்களிலும், மோட்டார் தொழிலிலும், நூல் நெய்தலிலும், கண்ணாடி மிகவும் உபயோகப்படு

கிறது. அமெரிக்காவில் மொத்தம் நூற்றெண்பது கண்ணாடித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. 'இல்லினாய்ஸ்' என்ற இடத்திலுள்ள ஒரு தொழிற்சாலை அந்த நாட்டுக்கு வேண்டிய பாட்டில்களில் நாற்பது சதவிகிதத்தை உற்பத்தி செய்கிறது. பிட்ஸ்பர்க்கிலுள்ள ஒரு வியாபாரி, அந்த நாட்டுக்குத் தேவையான ஜன்னல் கண்ணாடிகளில் அறுபது சதவிகிதமும், பிளேட் கண்ணாடிகளில் தொண்ணூறு சதவிகிதமும் உற்பத்தி செய்கிறார். நியூயார்க்கிலுள்ள ஒரு கம்பெனி எலெக்ட்ரிக் பல்புகள், ரேடியோ டியூப்கள், ரசாயன சாமான்கள், சமையல் பாத்திரங்கள் முதலியவற்றை யெல்லாம் செய்து குவிக்கிறது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தான், கண்ணாடித் தொழில் இவ்வளவு விருத்தி அடைந்தது. இன்றைக்கு நியூயார்க்கில் ஒரு நாளைக்கு சுமார் ஏழு லட்சத்துக்கு மேலான எலெக்ட்ரிக் கண்ணாடிப் பல்புகள் செய்கிறார்கள்.

அமெரிக்க விஞ்ஞானிகளின் தீவிரமான உழைப்பின் பயனாக, இன்று ஆயிரம் ரகமான கண்ணாடிகள் செய்ய முடிகிறது. விஞ்ஞான ஆராய்ச்சியால், கண்ணாடி தன் பழைய ஜொலிப்பு மறையும்படியாக எப்படி எப்படியோ, ரப்பரைப் போலக்கூட ஆக்கப்பட்டு விட்டது. ஏரோப்ளேன்களிலும் மோட்டார்த் தொழிலிலும் கண்ணாடி மிகவும் நுணுக்கமான பாகங்களுக்குப் பயன்படுகிறது. தொண்ணூற்றாறு சதவிகித 'ஸிலிகா'வால்செய்யப்படும் கண்ணாடி மிக உறுதியாக இருக்கிறது எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நார் போல மாற்றி மின்சாரக் கம்பிகள்மேல் சுற்றவும், நூல்போல நுண்ணியதாகவும் கூட செய்து விடுகிறார்கள். கரிப்பொடியோடு கண்ணாடித்தூளைக் கலந்து, நுரையைப் போன்ற கண்ணாடியையுங்கூடச் செய்து, அதை வேண்டிய உருவத்தில் அமைத்துக் கொள்கிறார்கள். கண்ணாடிக் கற்களும் ஓடுகளும், வீடு கட்டுவதற்கு அமெரிக்காவில் பெருவாரியாக உபயோகிக்கிறார்கள். பல கண்ணாடிப் பலகைகளை எல்லாம் ஒன்று சேர்த்து, கெட்டிப்படுத்தி உலோகமாகக் கூட மாற்றி விடுகின்றனர். இது மிகவும் கெட்டியாக, உலோகம மாதிரியே இருக்கிறது. இது ஒளியைப் பிரதிபலிப்பதில்லை. கெட்டியான பொருள்களில் கண்ணாடியும் ஒன்று என்பதை இப்போதும் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

இன்னும் கொஞ்ச காலத்தில், விமானம செய்யத் தேவையான சகல சாமான்களையும்,சிறு படகுகளைக்கூட கண்ணாடியாலேயே செய்ய முடியும் என்று நம்புகிறார்கள். இந்தமாதிரியான கண்ணாடிக் கருவிகளெல்லாம் துருப் பிடிக்காது. கண்ணாடியின் உபயோகம் இத்துடன் நிற்கவில்லை. கண்ணாடியாலான நூலை, டாக்டர்கள் ரண சிகிச்சைகளுக்குப் பிறகு, காயங்களைத் தைப்பதற்குப் பயன்படுத்துகிறார்கள்.

ஒரு நிமிஷத்திற்குள் அமெரிக்கக் கண்ணாடிக் கம்பெனிகள் இன்றைக்கு ஐயாயிரம் பாட்டில்களும், அறுநூறு எலெக்ட்ரிக் பல்புகளும், தயாரிக்கின்றன; ஒரு நாளைக்கு ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் சதுர அடிக் கண்ணாடியும் செய்து குவிக்கின்றன.

ட்ரெவர் ஆலன் எழுதிய ரயில் வண்டியின் ஆதிபர்வத்தை ஆதாரமாகக்கொண்ட கட்டுரை.

ஆரம்பகாலத்தில் ரயில்கள்

பிரயாணி

1825-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் ஸ்டாக்டன்—டார்லிங்டன் ரயில்பாதை போடப்பட்டது. அதுதான் மனிதர்கள் ஏறிச்செல்லும் வண்டிகள் போவதற்காக இங்கிலாந்தில் போட்ட முதல் ரயில்பாதை. அப்போது ரயில் என்றால் எல்லோருக்கும் ஒரே வெறுப்பு; ரயில் போட்டவர்கள்மீது கடுங்கோபம். ரயில்பாதை போடும் நிதிக்காக, 20 பங்குகளை வாங்கக்கூட ஆளில்லை. க்வேக்கர்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த சிலரே நிதிகொடுத்து உதவினார்கள்.

முதலில் நிலக்கரியைச் சுமந்து செல்லும் மார்க்கமாகவே ரயில் தண்டவாளம் பயன்படுத்தப்பட்டது. இந்த வேலைமுடிகிறபோது, தண்டவாளத்தில் குதிரை வண்டிகள் போகத் தொடங்கும்.

ஜேம்ஸ்வாட் நீராவி யந்திரத்தைக் கண்டுபிடித்தார். ரிச்சர்டு ட்ரெவிதிக் என்பவர் அதில் சில அபிவிருத்திகள் செய்தார். ரயில் எஞ்சின் உண்டாயிற்று. இந்த எஞ்சினை முதல் முதலில் இயூஸ்டன் என்னுமிடத்தில் ஓட்டிப் பரீக்ஷை செய்தார். அந்த எஞ்சின் மணிக்கு ஐந்து அல்லது ஆறு மைல் வேகம்தான் ஓடும். இந்த வேகத்தைக்கண்டு பயந்துவிட்டார் ஒருவர்; வண்டியில் ஏறிச் செல்லுபவர்களைப் பைத்தியங்கள் என்று கருதினார். ஆகவே அவர் வண்டியைப் பார்த்து, "என்ன முட்டாள்தனம் பண்ணுகிறீர்கள்! என்ன இது, இந்தப் பூதம்?" என்று கத்தினார். பூதம் என்பது ரயில் வண்டி!

இதன்பிறகு லிவர்பூல்—மான்செஸ்டர் ரயில்பாதையில் 'ராக்கெட்' எஞ்சின் ஓடியது. அந்த எஞ்சினைச் செய்த ஸ்டீபன்ஸன் என்பவரைப் பார்த்து அவரைச் சேர்ந்த ஒருவர், "இந்த ராக்கெட் எஞ்சின் இவ்வளவு வேகம் ஓடும், அவ்வளவு வேகம் ஓடும் என்று பார்லிமெண்டரி கமிட்டியில் பேசாதீர்கள். பேசினால் உங்கள் காரியம் தொலைந்தது. உங்களைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட வேண்டிய கிறுக்கன் என்று சொல்லி விடுவார்கள்" என்று எச்சரித்தார்!

1830-ல் ஆட்கள் ஏறும் ரயில் ஓடத்தொடங்கியது. அப்போது முக்கிஸ்தர்களான சுமார் 700 பேர் ஒன்றன்பின் ஒன்றாக மொத்தம் ஆறு ரயில் வண்டிகளில் ஏறிச் சென்றார்கள். செல்லும்போது "வெற்றி வீரன் வருகிறான் பார்!" என்று பாடிக்கொண்டே போனார்கள். இதைக் கண்டு பத்திரிகைகள் என்ன எழுதின தெரியுமா?

'ஒரு பள்ளிக்கூடப் பையன் தண்டவாளத்தில் ஒரு கோலிக் குண்டை வைத்தாலும், ஒரு போக்கிரி ஒரு கல்லைத் தூக்கி வைத்தாலும் ரயில்வண்டி கவிழ

வேண்டியதைத் தவிர்த்து வேறு வழி இல்லை. இப்படிப்பட்ட வண்டியில் யோக்கியமானவர்கள் ஏறிச் செல்லுவார்களா?' என்று பத்திரிகைகள் எழுதின. கேவலம் ஒரு தகரக்குழாய், ஒரு செப்பு அண்டா—இவற்றை நம்பி மணிக்கு 20 மைல் வேகத்தில் பெண்கள் ரயிலேறிப் பிரயாணம் செய்வதா? எவ்வளவு ஆபத்தான காரியம் அது! தவிரவும் ரயில் வந்ததால் பண்ணைக் காடுகளைத் துண்டாட வேண்டியிருக்கிறது; இப்போது மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு பாழாக வேண்டியிருக்கிறது; வியாபார முறைகள் நாசமடைய வேண்டியிருக்கிறது—இப்படியெல்லாம் கூச்சல் போட்டார்கள்! ஒரு ஜெர்மன் டாக்டர், 'ரயில்வண்டி போகும் வேகத்தைப்பார்த்த எவனும் பைத்தியமகாமல் இருக்க முடியாது' என்ருர். ஒரு பாதிரியார், ரயிலில் போகிறவர்கள் தம் வீட்டு ஜன்னல் வழியாகத் தம் மகளை உற்று உற்றுப் பார்ப்பதாகக்கூறி, அந்த அவமானத்துக்கு கஷ்டஈடும் கேட்டார்; தம் குடியிருப்பை வேறிடத்துக்கு மாற்றவும் திட்டமிட்டார்!

தண்டவாளம் போடுவதற்குச் சாதாரணமாக நிலத்தை வாங்க முடியாது. ஒரு மைலுக்கு 5000 பவுன்கூடக் கொடுத்து தண்டவாளம் போடப்பட்டது. பெரிய பெரிய நிலச்சுவான்தார்களெல்லாம், தங்கள் நிலங்களில் ரயில் பாதை போடவிடாமல் தடுத்தார்கள். ஒரு நாள்விட்டு ஒரு நாள், இரவு நேரங்களில் துப்பாக்கிகொண்டு சுட்டு தண்டவாளம் போடவிடாமல் செய்தார்கள்.

1842-ல் விக்டோரியா மகாராணி முதல் முதலில் ஸ்லப் என்னுமிடத்திலிருந்து பாடிங்டன் என்னும் இடத்திற்கு ரயில் மூலம் சென்ருர்; அதற்கு அரை மணி நேரம் பிடித்தது. அப்போது ஒரு பத்திரிகை, 'ரயில் பாதையில் ஆபத்திருக்கிறது. மகாராணியார் ஏகதேசமாகத் தான் ரயில் பிரயாணம் செய்ய வேண்டும்' என்று எச்சரித்தது!

✲

அப்பாவின் வேலை

நியூ யார்க் நகரில் உள்ள மைராகெல்வி என்ற வாத்தியாரம்மாள், ஒரு நாள் தன் வகுப்புக் குழந்தைகளைப் பார்த்து ஒவ்வொருவராக அவர்களுடைய பெற்ருேர்களின் தொழில் இன்னது என்பதைச் சொல்லும்படியாகக் கூறினள். கடைசியில் ஒரு சின்னஞ்சிறு குழந்தையின் முறை வந்தது. அந்தக் குழந்தை மிகவும் சங்கோஜி.

"ரோஸீ, உங்கள் தகப்பனரின் வேலை என்ன?" என்று கேட்டாள் வாத்தியாரம்மாள்.

"எங்கள் அப்பா ஒரு வேலையும் செய்வதில்லை."

"ஒரு வேலையும் கூடச் செய்வதில்லையா?

"ஆமாம். ஆனல் ஒன்று மட்டும் செய்கிருர்"

"அது என்ன? அதைச் சொல்லேன்."

"ஸ்ட்ரைக் பண்ணுகிருர்" என்றது குழந்தை.

கட்டிடங்களுக்கு எஃகு



டாடா எஃகு

டாடா அயர்ண் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

தலைமை சேல்ஸ் ஆபீஸ்:

102 A நேதாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா

ஸாரிடோன்
எல்லா வலிகளையும் நிறுத்துகிறது
10 Saridon
BRAND ANALGESIC TABLETS
Saridon

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.
உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.
மைசூர் சில்க்
மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு.
கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

ஆரம்பகாலத்தில் டிக்கட்டுகள்

டி. டி. ஆர்.

ரயில் வண்டிகளுக்கு டிக்கட் கொடுக்கும் காரியம் மிகவும் சிரமமான காரியமாக இருந்தது. டிக்கட் கொடுக்கும் ஆசாமி, டிக்கட்டில் பிரயாணியைப் பற்றிய அநேக விவரங்களைப் பதிவு செய்வார்; பிரயாணத்தைப் பற்றிய அநேக விவரங்களையும் பதிவு செய்வார். பிறகு அதற்கு ஒரு நகலும் எடுத்துக் கொள்ளுவார். ஆகவே ஒரு டிக்கட் கொடுத்து முடிப்பதற்குள் ஒரு யுகம் போய் மற்ெருரு யுகம் வந்துவிடும்!

தாமஸ் எட்மண்ட்ஸன் என்று ஒரு ஸ்டேஷன் மாஸ்டர் இருந்தார். அவர் டிக்கட்டில் தேதியைப் பதிவு செய்யவேண்டும்; டிக்கட்டுகளுக்கு நம்பரும் கொடுக்க வேண்டும் என்று நினைத்தார். உடனே அச்சடிக்கக்கூடிய ஒரு கை மிஷினில் டிக்கட்டுகளை அச்சடிக்கத் தொடங்கினர். 1838-ம் வருஷவாக்கில் ஏறக்குறைய தற்போதைய டிக்கட்டைப் போன்ற அமைப்புள்ள சீட்டைச் சிருஷ்டித்துக்கொண்டிருந்தார். ஆனாலும், அவர் காட்டிய வழியை ரயில்வேக் கம்பெனிகள் கடைப்பிடிப்பதற்கு பல வருஷங்கள் பிடித்தன. அந்த ஸ்டேஷன் மாஸ்டர் எந்த ரயில்வே மார்க்கத்தில் வேலை செய்து வந்தாரோ, அதே ரயில்வே மார்க்கத்தில் (நியூகாஸில்—கார்லைல் மார்க்கம்) உள்ள ஒரு சில ஸ்டேஷன்களில் மாத்திரம் அவர் உண்டாக்கிய டிக்கட்டுகளை உபயோகிப்பதை அனுமதித்தனர். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகஇந்த டிக்கட்முறை மற்ற இடங்களிலும் பரவத் தொடங்கியது. அதுநன்கு பரவிய பின்னரே, கள்ள டிக்கட்டுகள் கிளம்பத் தொடங்கின. இந்தப் பிரச்னை அமெரிக்காவில் அதிகமாக இருந்தது. பிறகு அதையும் சமாளிக்கத் தொடங்கினர்.

பெல்ஜியத்தின் தலைநகராகிய பிரஸ்ஸல்ஸைச் சேர்ந்த எம். வைனர் என்னும் பேராசிரியர் ஒருவர் டிக்கட்டுகளைப்பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதில், உலோகங்களினாலும், எலும்பினாலும், தந்தத்தினாலும், மைக்காத் தகட்டினாலும், தோலினாலும் நாணயங்கள் மாதிரிச் செய்து அவற்றை டிக்கட்டுகளாகப் பயன்படுத்தினார்கள் என்ற விபரம் காணக்கிடக்கிறது. பிறகுதான் காகிதத்தினாலும், அட்டையினாலும் டிக்கட்டுகள் செய்யப்பட்டன. 1901 வரையிலும் கிளாஸ்கோவிலும் மான்செஸ்டரிலும் மைக்கா டிக்கட்டுகள் உபயோகத்தி லிருந்து வந்தன. பழைய டிக்கட்டுகள் சிலவற்றில், "முதல் வகுப்பு வண்டியில் கண்டிப்பாகப் புகை பிடிக்கக்கூடாது" என்று அச்சிடப்பட்டிருக்கும்.

1870, 1880 முதலிய வருஷங்களில், ஐரோப்பாவில், ரயில்வே டிக்கட்டுகளில் சித்திரங்களும் அச்சிடப்பட்டிருந்தன. ஸ்பெய்ன் தேசத்து நாட்டியக் காட்சிகள், நாடகக் காட்சிகள், ரோம் நகரின் அழகியகாட்சிகள், தேசப் படங்கள் ஆகியவை டிக்கட்டுகளில் காணப்படும். சில வருஷங்களுக்குமுன்னால் அமெரிக்காவிலும், டிக்கட்டுகளில் சித்திரங்களை அச்சிடத்தொடங்கினர்.

இந்தச் சுவாரஸ்யமான கட்டுரை டிட்—பிட்ஸில் வெளிவந்ததின் சாரம்.

'ஒரு மனிதன் சிறிதுகூடத் தூங்காமல் பதினொன்கு நாட்கள் கண் விழித்திருந்தால் இறந்துவிடுவான்' என்பது போன்ற தூக்கத்தைப் பற்றிய உண்மைகளைக் கூறுகிறது இக் கட்டுரை.

நித்திரை

"லக்ஷ்மி"

நாள் முழுவதும் வேலை செய்வதினால் களைத்துப் போகும் உடல் உறுப்புகளுக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுக்க வேண்டியே தூக்கம் என்னும் ஒருவித மயக்க நிலை நமக்கு ஏற்படுகிறது. அவயவங்களுக்கு ஓய்வு என்றதும் மனிதன் நித்திரை செய்கையில் உடல் உறுப்புகளும் கூடத் தூங்கச் சென்றுவிடுகின்றன என்று அர்த்தமல்ல. மனிதன் கடினமான வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது மிகவும் சிரமப்பட்டு கூடவே வேலை செய்வதைப் போன்று அவ்வளவு அளவில் மனிதன் தூங்கும்போது உடல் உறுப்புகள் வேலை செய்ய வேண்டியது இல்லாததினால், அவைகளுக்குச் சிறிது ஓய்வு ஏற்படுகின்றது. இந்தச் சிறு ஓய்வு கூட இல்லாவிடில் மறுபடியும் மனிதன் கஷ்டமான வேலைகளைச் செய்யும்போது உடல் உறுப்புகள் கூட ஒத்துழைக்கச் சக்தியின்றிச் சோர்ந்துவிடும். ஆகவே தூக்கம் மனிதனுக்கு மிகவும் அவசியம்.

தூக்கம் என்பது எப்படி ஏற்படுகிறது என்பதைப் பற்றிப் பலவிதமாக ஆராய்ந்த உடல் ஆராய்ச்சி அறிஞர்களுக்கிடையே பலவிதமான அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இத் துறையைப் பற்றி ஆராய்ந்த பலரும் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்கள்.

மனிதன் வேலை செய்து சோர்ந்து போகும்போது உடலில் உள்ள இரத்தத்தில் பெரும் பாகம் சர்மத்தை நோக்கிப் பாய்வதினால், மூளைக்கு இரத்தம் செல்லுதல் குறைந்துவிடுகின்றது. அதனால் ஒருவித மயக்க நிலை மூளையில் ஏற்பட ஆரம்பிக்கின்றது. அதுதான் தூக்கம் என்று ஒரு சிலர் கருதுகின்றனர்.

நாள் முழுவதும் சிரமப்பட்டு வேலை செய்வதினால் மனிதனுக்கு மூளையில் ஒருவித விஷப் பொருள் உற்பத்தியாகிக் கொண்டே போகின்றது. அது ஓர் அளவை யடைந்ததும் மூளையின் சுறுசுறுப்பைப் பாதிக்க ஆரம்பிப்பதனால் ஒரு வித மயக்கம் உண்டாகின்றது. அந்த மயக்கந்தான் தூக்கம் என்று வேறு சிலர் கருதுகிறார்கள்.

மூளையில் 'ஹைபோதலேமஸ்' என்னும் ஒரு பாகம் உள்ளது. இப் பாகம் வேலை செய்ய முடியாது களைத்துவிடுவதினால் தூக்கம் ஏற்படுகின்றது என்பது, இன்னும் சிலரின் கொள்கை.

'பாவ்லோவ்' என்னும் அறிஞர் தூக்கம் என்னும் நிலை, மூளையில் உள்ள கார்ட்டெக்ஸ் என்னும் முக்கிய பாகம் களைத்துப் போவதினால் ஏற்படுகின்றது என்று அபிப்பிராயப்பட்டார்.

நித்திரை என்பது எப்படி ஏற்படுகின்றது என்பது நிச்சயமாகத் தெரியாவிட்டாலும் அது சோர்ந்துள்ள உடலுறுப்பு

களுக்கு ஓய்வு கொடுக்கும் நிமித்தம் ஏற்படுகின்றது என்பது மட்டும் மிகவும் நிச்சயம்.

மனிதன் தூங்கும் போது தூக்கத்தின் நிலை ஒரே விதமாக இருப்பதில்லை. முதல் சில மணி நேரம் தூக்கம் மிகவும் ஆழ்ந்த நிலையில் இருக்கிற தென்றும் நேரம் ஆக ஆக, தூக்கத்தின் ஆழம் குறைந்துவிடுகின்றது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். இரவு நேரத்தில் தூங்கும்போது ஏற்படும் நிம்மதியான ஆழ்ந்த தூக்கம் பகல் நேரத்தில் ஏற்படுவதில்லை.

கனவு முதலிய தொந்திரவுகள் இன்றி மெய் மறந்து தூங்கும் தூக்கத்தைத்தான் ஆழ்ந்த நித்திரை என்று சொல்லுவார்கள். லேசாகத் தூங்கும் தூக்கத்தின் போதுதான் கனவுகள் ஏற்பட்டு நித்திரையை மிகவும் பாதிக்கின்றது. அநேகமாக நாம் தூக்கத்தினின்றும் எழுந்திருக்கும் சமயத்தில், தான் கனவுகள் ஏற்படுகின்றன. கனவு கண்டு நாம் விழித்துக் கொள்ளுவதாக நினைக்கிறோம் அல்லவா, அது தவறு. தூக்கத்தின் ஆழம் குறைந்து நமக்கு விழிப்பு ஏற்படும் சமயத்தில் கனவு தோன்றுகிறது.

நாம் தூங்கும் போது பிரக்ஞை முழுவதும் மறைந்துவிடுவதில்லை. பயம், வியாதி முதலியவைகளின் போது ஏற்படும் மூர்ச்சையில் நினைவு தவறிவிடுகின்றதல்லவா? அதுபோன்று பிரக்ஞை, தூங்கும் போது ஒரேயடியாக மங்கிவிடுவதில்லை. அதனால்தான் தூங்கிக் கொண்டிருந்த போதிலும் நெருப்பு, வாசனை முதலியவற்றைச் சட்டென உணர்ந்து விழித்துக்கொள்ளும் சக்தி இருக்கிறது. ஆனால், சப்த உணர்ச்சி ஸ்பரிச உணர்ச்சி முதலியன தூங்குகையில் சிலருக்கு மிகவும் மங்கிவிடுகின்றன.

ஒவ்வொருவரும் குறைந்தது எத்தனை மணி நேரம் தூங்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். அவர்கள் கணக்கின்படி புதிதாகப் பிறந்த குழந்தை நாள் ஒன்றுக்கு இருபது மணி நேரமாவது தூங்க வேண்டும். வளரும் குழந்தை பன்னிரண்டு மணி நேரமும், வாலிப வயதடைந்தவர்கள் எழிலிருந்து ஒன்பது மணி நேரமும், கிழவர்கள் ஏழு மணி நேரமும் தூங்க வேண்டும்.

ஆனால் சில ஆராய்ச்சியாளர்கள், 'ஒருவர் இத்தனை மணி நேரம் தூங்கவேண்டும் என்று கணக்கிடுவது தவறு. ஒவ்வொருவரும் சில மணி நேரம் தூங்கினாலும் போதும். ஆனால் அது ஆழ்ந்த நித்திரையாக இருக்கவேண்டும். இப்படியும் அப்படியும் படுக்கையில் புரண்டு நிம்மதியின்றி, தினம் எட்டு மணி நேரம் தூங்குவதைவிட ஒரே மணி நேரம் தன்னை மறந்து ஆழ்ந்த நித்திரை செய்தாலும் போதும். அந்த ஒரு மணி நேரம் சோர்ந்துள்ள அவயவயங்களுக்கு வேண்டிய ஓய்வைக் கொடுத்துவிடும்' என்கிறார்கள்.

நாம் தூங்கும்போது இருதயம் மெதுவாக வேலை செய்கின்றது. அதனால் இரத்த அழுத்தம் சாதாரண காலத்தைவிடக் குறைந்துவிடுகிறது. நாடித் துடிப்பும் நிமிஷத்திற்கு 72 அடித்துக் கொள்வதினின்று அறுபதாகக் குறைந்துவிடுகிறது. சுவாசம் விடுதலும் நிமிஷத்திற்குப் பதினெட்டு முறையிலிருந்து பதினைந்தாகக் குறைந்து விடுகிறது. உடல் உஷ்ணநிலை சாதாரண

காலத்தைவிடத் தூங்கும்போது ஒரு டிகிரி குறைந்துவிடுகிறது. கண்ணின் கருவிழியில் உள்ள பாப்பா தூங்கும்போது மிகவும் சுருங்கிவிடுகின்றது. ஆனால் தூங்கும்போது உடலில் உள்ள வியர்வைக் கோளங்கள் மட்டும் மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்கின்றன. அதனால் சம்மட்டி முதலிய ஆயுதங்களை எடுத்து வேலை செய்கையில் ஏற்படும் அளவு வியர்வை, சாதாரணமாக தூங்கும்போது உடலில் ஏற்படுகின்றது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். தூங்கும்பொழுது இரைப்பை எப்பொழுதும்போல வேலை செய்வதினால் ஜீரண ரசங்கள் நன்றாக உற்பத்தியாகின்றன. அதனால்தான் சாப்பிட்டவுடன் தூங்க ஆரம்பித்தாலும், அது ஜீரணத்தைப் பாதிப்பதில்லை.

தூங்காமலே ஜீவித்திருப்பது என்பது சாத்தியமான காரியமல்ல. ஒரு மனிதன் சிறிதுகூடக் கண்களை மூடாமல் விழித்துக் கொண்டிருந்தால் பதினான்காம் நாள் இறந்துவிடுவான் என்று கண்டுபிடித்துள்ளார்கள்.

தூக்கத்தைப் பற்றிய சில உண்மைகள் பின் வருவன:

1. ஒருவன் தினம் எத்தனை மணி தூங்கவேண்டும் என்பது கணக்கல்ல. எப்படிப்பட்ட தூக்கம் ஏற்படுகின்றது என்பதுதான் முக்கியம்.

2. தூங்கும்போது இப்படியும் அப்படியும் திரும்பிப் படுத்துக்கொண்டால் தூக்கம் கெட்டுவிடும் என்ற நம்பிக்கைக்கு அர்த்தமேயில்லை. ஏனெனில் தூங்குகையில் நம்மையறியாது நாம் இப்படியும் அப்படியும் திரும்பிப்படுத்துக் கொண்டால் தூக்கம் ஒன்றும் கெடுவதில்லை. உடம்பை அலட்டாது ஒரே பக்கமாகப் படுத்துக்கொண்டால் காலையில் எழுந்திருக்கும்போது உடம்பு மிகவும் வலிப்பதை உணரலாம்.

3. பரீட்சை காலங்களில், தினப்படி பாடத்தைப் படிக்காமல் அப்படியே போட்டுவைத்துவிட்டுத் தூக்கத்தைத் தியாகம் செய்து படிக்க எண்ணுகிறார்கள் சில மாணவ மாணவிகள். புஸ்தகத்தைக் கையில் எடுத்ததும் கண்களைத் தூக்கம் அழுக்குகிறது. இரவு ஒரு மணி வரையில் தூங்கிவிட்டுப் பிறகு எழுந்திருந்து மூன்று மணி வரை படித்துவிட்டு மறுபடியும் ஆறு மணி வரை தூங்கினால் சரியாகிவிடும் என்று சிலர் முயலுவது உண்டு. அதனால் பிரயோஜனம் ஒன்றும் இல்லை என்பதை அனுபவத்தில் காண்பார்கள். தூக்கத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் பல செய்ததின் மூலம் இரவு முழுவதும் தூங்கும் வழக்கமுடைய ஒரு மனிதனின் மூளை நடு இரவிலும், விடியற் காலையிலும் சாதாரண காலத்தில் செய்யும் வேலையைவிடக் குறைந்த வேலையேதான் செய்ய முடியும் என்று கண்டுள்ளனர். ஆகவே தூக்கம் கெட்டு நடு இரவில் எழுந்து படிப்பதினால் லாபம் ஒன்றும் இல்லை. அப்படிப் படிப்பதைவிட நன்றாகத் தூங்கிவிட்டு காலையில் சீக்கிரம் எழுந்து படிப்பது மூளைக்கும் பரீட்சைக்கும் நல்லது.

4 இடது பக்கமாகத்தான் படுத்து உறங்க வேண்டும். வலது பக்கமாகத் தூங்கக் கூடாது என்பதெல்லாம் அர்த்தமற்ற நம்பிக்கைகள். எந்தப் பக்கம் படுத்துறங்கினாலும் உடலுக்கு ஒரு கெடுதலுமில்லை. படுக்கப் போகுமுன் இடது பக்

கமே படுத்திருந்தாலும் தூக்கத்தின் நடுவில் நம்மை அறியாது வலது பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டு விடுகிறோம். அப்படிச் செய்ததினால் ஒருவருக்கும் தூக்கமும் கெட்டதில்லை, உடம்பிற்கு சிக்கும் வந்ததில்லை.

5. காப்பி சாப்பிட்டால் தூக்கம் வராது என்று சிலர் நினைக்கிருர்கள். காப்பி என்னும் பானம் தூக்கத்தைக் கெடுக்கும் பானம் அல்ல. காப்பி சாப்பிட்டு, பரீட்சைக்குப்படிக்க கண் விழித்திருக்க உத்தேசிக்கும் மாணவர்கள் காப்பியைக் குடித்துவிட்டு நன்ருகத் தூங்குவதிலிருந்து காப்பிக்குத் தூக்கத்தைப் போக்கும் சக்தி இல்லை என்று உணர்ந்து கொள்ள வேண்டும். காப்பி, டீ இவைகள் சாப்பிட்டால் தூக்கமே வராது என்று நினைப்பவர்களுக்கு மனப் பிராந்தி காரணமாகத் தூக்கம் வருவதில்லை அவ்வளவுதான்.

6. தூக்கம் என்னும் மோன நிலையை அனுசரித்து நாம் நமது வழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளுகிறோம். காலையில் நாம் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கையில் நமது தேக உஷ்ண நிலை மிகவும் குறைந்தே இருக்கிறது. அது மெதுவாக ஏறிக்கொண்டே போய் நமது தேகத்திலுள்ள தசைகள் சோர்வடைய ஆரம்பித்ததும் உஷ்ண நிலையும் குறைய ஆரம்பித்து சாயங்காலத்திற்கு மறுபடியும் பழைய நிலைக்குவந்து விடுகின்றது. தேக உஷ்ண நிலை ஏறிக்கொண்டு போய், இரவு சமயத்தில் இறங்கிப் பழைய நிலைக்கு வந்ததுந்தான் நமக்கு தூக்கம் ஏற்படுகின்றது. தூக்கத்திற்கும் தேக உஷ்ண நிலைக்கும் ஒரு சம்பந்தம் இருப்பதை நாம் அனுபவத்தில் உணரலாம். பயங்கரமான காட்சிகள் கொண்ட சினிமாக்களைப் பார்த்துவிட்டு மிகவும் பரபரப்பாக வீடுபோய்ச் சேர்ந்தவுடன் தூக்கம் வருகிறதில்லை யல்லவா. ஏன்? மனம் உணர்ச்சிகள் வசப்பட்டுப் போன சமயம் உடலின் உஷ்ண நிலை மிகவும் ஏறிவிடுகிறது. தேக உஷ்ண நிலை ஏறிவிட்டால் தூக்கம் வருவது சிரமம்.

7. தூக்கத்திற்கு மருந்து என்று தனியாக மருந்து ஒன்றும் கிடையாது. சிலருக்குத் தேகாப்பியாசம் செய்தால் தூக்கம் வருகிறது. சிலருக்குப் படுக்குமுன் வெந்நீரில் குளித்தால் தூக்கம் நன்ருக வருகிறது. படுக்கப் போகுமுன் சுடச்சுட ஒரு டம்ளர் பால் சாப்பிட்டால் ஒழிய சிலருக்குத் தூக்கம்வருகிறதில்லை. சிலருக்குக் கதைப் புத்தகம் ஒன்றைக் கையில் எடுத்தால் உடனே கண் இமைகள் சட்டென மூடிக்கொண்டுவிடும். ஆகவே தூக்கத்திற்கு மருந்து என்ருல் யார் யாருக்கு எதைச் செய்தால் தூக்கம் ஏற்படுகிறதோ அதுதான் மருந்தாகும். வேறு தனியாக மருந்து ஒன்றுமில்லை.

8. தூங்கும் போது எட்டு மணிக்குப் படுக்கைக்குப் போவது என்ருல் அப்படியே தினம் எட்டு மணிக்குத்தான் தூங்க வேண்டும். தூங்கும் போது கோப தாப எண்ணங்கள் இன்றித் தூங்க வேண்டும். அதற்காகத்தான் கடவுளை நினைத்துக் கொண்டு சாந்த மனத்துடன் தூங்கச் செல்ல வேண்டும் என்று அறிந்தவர்கள் கூறுவார்கள்.

*

தொடர் கதை

சாக்கடையிலிருந்து

பி. கேசவதேவ்

"என்னிடம்..." அவளால் வாசகத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

ஆசையின் ஒளியால் மாதவன் கண்கள் பிரகாசித்தன. அவன் கேட்டான்: "எவ்வளவு இருக்கிறது? சொல் — வாசகத்தைப் பூர்த்தி செய்."

"என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது."

"பணமா?" அவன் ஆனந்தத்துடன் எழுந்திருந்தான். "எதற்காக அதை வைத்திருக்கிறாய்?"

"மருந்து வாங்க."

"யாருக்கு மருந்து? எனக்கா?"

"என்றும் இப்படி இருமிக்கொண்டு இருக்க முடியுமா? வைத்தியரிடம் சொல்லி மருந்து வாங்க வேண்டும்."

அவன் சிரித்தான். இதைப்பற்றிக் கவலைப்படாதே. இது குணமாகும். பணத்தை என்னிடம் கொடு. அவளுக்குப் புடவை வாங்கிக் கொடுக்கிறேன்."

அன்று இரவு மாதவன் புதிய பச்சைப் புடவை வாங்கிக் கொண்டு வந்தான்.

அன்று ஆண்டு விழா. பள்ளிக்கூடமும்; சுற்றுப் புறமும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. உபாத்தியாயர்களும், மாணவர்களும், விருந்தினர்களும் வந்துவிட்டார்கள். எதிலும் கமலம் இருந்தாள். மாணவர்களுக்கு அவள் தலைமை தாங்கினாள்; உபாத்தியாயர்களுடன் அவள் கலந்தாலோசித்தாள். பச்சைப் புடவை அணிந்து கூந்தலில் பூமாலை அணிந்து, அவள் புன்னகை புரிந்தது சபையை ஆகர்ஷித்தது.

முதலில் பாட்டு. மூன்று சிறுமிகள் வரவேற்புக் கீதம் பாடினார்கள். பிறகு, கமலத்தின் பாட்டு. கமலம் மேடை மீது ஏறினாள். சபையில் குதூகலம் குடிகொண்டது. தலைவருக்கு முன் விரித்திருந்த பாயில் அவள் உட்கார்ந்தாள். சபையில் அமைதி குடிகொண்டது.

தடுத்தும் தடுக்க முடியாத இருமல்! கமலத்தின் கண்கள் சபையின் மூலையைப் பார்த்தன. இரண்டு கைகளாலும் வாயைப் பொத்திக்கொண்டு மாதவன் இருமலைத் தடுக்க முயன்றான். கண நேரம் அவள் வதனம் இருண்டது. மீண்டும் அவள் புன்னகை புரிந்தாள். இன்பம் அவள் வதனத்தில் நடனமாடிற்று.

கமலம் பாட ஆரம்பித்தாள். அவள் கனைக்கவில்லை; வாத்தியக்காரனிடம் கோபித்துக்கொள்ள

வில்லை. அவள் பாடினாள். அவள் சங்கீதம் முறையாகப் படிக்க வில்லை. அவள் எந்தச் சபையிலும் அதற்குமுன் பாடினதில்லை. கேள்வி ஞானமும், இயற்கை ஞானமும்தான் அவள் செல்வங்கள். இரண்டு நிமிடங்களில் அவள் சங்கீத உலகைத் தாவிப் பிடித்தாள். குன்றின் சரிவில் இருக்கும் புல்வெளியில் வசந்த கால அருவி மெதுவாக ஒழுகுவதைப் போல், அவள் கானம் சபையோரின் இருதயத்தில் ஒழுகிற்று.

மாதவன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். க்ஷவரம் செய்து கொள்ளாததால் அவன் முகத்தில் நீண்டு நின்ற ரோமங்களில் ஆனந்தக் கண்ணீர் தேங்கி நின்றது. அவன் இடத்தையும், தன்னையும் மறந்து "கமலம்......என் கமலம்!......" என்று கூவினான். அவன் முன்னே நடந்தான். முன்னே இருந்த பெஞ்சு அவனைத் தடுத்தது. "என் கமலம்... அவள் என் கமலம்........." அவன் மீண்டும் முன்னே பாய்ந்தான். முழங் கால்கள் பெஞ்சியில் மோதின. பெஞ்சு முறிந்தது......என் கமலம்..." அவன் உணர்வு இழந்தான்.

* * *

கமலத்தின் விரலை உற்றுப் பார்த்துக்கொண்டு கல்யாணி கேட்டாள்: "மகளே! உனக்கு மோதிரம் ஏது?"

"பாட்டுக்குக் கிடைத்த பரிசு!"

"பரிசு கொடுத்தது யார்?"

"கோபி."

"கோபியா? யார் அது?"

"கோபிநாதன் அவன் பெயர். கோபி என்று எல்லோரும் அழைப்பார்கள்."

"அவன் வீடு எங்கே?"

"சமீபத்தில் தான் அவன் வசிக்கிறான். ரொம்பப் படித்தவன். என் சாரீரத்தை அவன் போற்றுகிறான். விரலில் அணிந்திருந்த மோதிரத்தை எனக்குக் கொடுத்தான்."

"வயதானவனா?"

"அல்ல. வாலிபன்." அவள் அதரங்களில் புன்னகை பூத்தது.

கல்யாணி சிந்தித்தாள்.

அன்றிரவு கல்யாணி மாதவனிடம் கேட்டாள்: "கோபியை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்."

"யார் அவன்?"

"அந்த நகரில் அவனை அறியாதவர் இல்லை. வாலிபன் என்ருலும் எல்லோரும் அவனை மதிக்கிருர்கள். நன்கு படித்தவன். பணக்காரன். எல்லோரையும் சமமாகப் பாவிப்பான். பணக்காரர்களில் ஏழைகளை நேசிப்பவன் அவன் ஒருவன்தான். எதற்காகக் கேட்கிருய்?"

"அவன் கமலத்திற்கு ஒரு மோதிரம் கொடுத்தான்!"

"எதற்காக?"

"அவள் பாட்டைக் கேட்டு மகிழ்ந்து அவளுக்குப் பரிசு கொடுத்தானும்."

"ஆம். அவன் அப்படிப்பட்டவன்தான். அவன் பலருக்குப் பரிசு கொடுத்திருக்கிருன்"

"அவன் குணம் எப்படி?"

"நல்ல குணம் படைத்தவன்தான். இதையெல்லாம் ஏன் கேட்கிருய்?"

"அவனைப் பற்றிப் பேசின பொழுது அவள் முகம் மலர்ந்தது."

மாதவன் சிந்தித்தான்.

நாட்கள் ஓடி மறைந்தன. வழக்கம் போல் கமலம் பள்ளிக்கூடத்திலிருந்து குறித்த நேரத்தில் வீடு திரும்பவில்லை. ஏன் தாமதித்து வருகிருய் என்று கல்யாணி கேட்டால் ஏதாவது சொல்லுவாள். ஒரு நாள் அவள் சொன்னுள்: "அம்மா! மாமா சிறை சென்றவர்"

"என்ன? சிறை சென்றவரா? எதற்காக?"

"மாமா பஞ்சாலையில் வேலை செய்துகொண்டிருந்த பொழுது அங்கே கலகம் நடந்ததாம் அவர்கள் மாமாவை அடித்தார்கள். அதன் பிறகு அவரைத் தண்டித்தார்கள்."

"இதை உன்னிடம் யார் சொன்னுர்கள்?"

"அவர்."

"யார்?"

"கோபி"

"அப்படியானுல் நீங்கள் சந்தித்துப் பேசுகிறீர்கள், அல்லவா?"

கமலம் பதில் சொல்லவில்லை. அவள் அங்கிருந்து ஓடினுள்.

8

இருமலும் ஜுரமும் அதிகரித்தன

"நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், மாதவன்!" என்ருன் அவன் நண்பர்களில் ஒருவன்.

"ஜாக்கிரதையாக இருந்தால் வாழ்க்கைக்கு வழி?"

"ஜாக்கிரதையாக இருக்கவில்லை என்ருல் நீ அழிவாய். நீ க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டிருக்கிருய்"

"க்ஷயம்!..."

அது பயங்கரமான வியாதி என்பது மாதவனுக்குத் தெரியும். அதன் பயங்கரத் தன்மையை அவன் கண்டிருக்கிருன். வேதனை அவனுக்குப் புதிதல்ல. மரணம் அவனைப் பயமுறுத்த முடியாது. ஆனுல் வாழ்க்கையில் அவன் ஒரு கடமையை நிறைவேற்ற வேண்டும்; ஒரு நோக்கத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். அந்த நோக்கம் நிறைவேற அவன் செய்யும் முயற்சிகளில்

வேதனையும், மரணமும் அவனை அச்சுறுத்த முடியாது.

கமலத்தின் செலவு மேலும் மேலும் அதிகரித்தது. ஆனல், மாதவனின் வருவாய் நாள் தோறும் குறைந்தது. அவன் ரிக்ஷாவில் யாரும் ஏறவில்லை. அவன் ரிக்ஷாவில் ஏறினல், உரிய காலத்தில் போக வேண்டிய இடத்திற்குப் போக முடியாது. இருமிக் கொண்டும், தள்ளாடிக் கொண்டும் அவன் ரிக்ஷாவை இழுப்பதைக் காணச் சகிக்க வில்லை. இரவும், பகலும், வெயிலிலும், மழையிலும், பனியிலும் இருமிக் கொண்டும், நடுங்கிக் கொண்டும் ரிக்ஷாவை இழுத் தால் கூடச் செலவுக்குப் போது மான பணம் கிடைக்க வில்லை.

ஒரு நாள் அவன் ஒரு பிரயாணியை ஏற்றிக் கொண்டு போன பொழுது ரிக்ஷாவைப் பிடித்துக்கொண் டிருந்த அவன் கரங்கள் தளர்ந்தன. வண்டி பின்னே சாய்ந்தது. பிரயாணி தலை கீழாக விழுந்தான். அதன் பிறகு அவன் ரிக்ஷாவைப் பார்க் கக்கூட அஞ்சினர் பிரயாணி கள். அந்த ஊருக்குப் புதிதாக வருகிறவர்கள் தான் அவன் ரிக்ஷாவில் ஏறினர்.

கல்யாணி எங்கிருந்தோ மருந்து வாங்கிக் கொண்டு வந்தாள். அதைக் குடிக்கும்படி அவள் மாதவனை நிர்ப்பந்தப்படுத்தினள். அவன் சிரித்தான். "அதைக் குடித்தால் என் வியாதி தீருமா?

"தீரும்!"

"தீரும் என்று வைத்தியன் சொன்னனு?"

"சொன்னன்!"

"பாவம்! என் வியாதி என்ன என்பது அவனுக்குத் தெரியாது!"

"வைத்தியனுக்குத் தெரியாது என்றல் பிறகு யாருக்குத் தெரியும்?"

"எனக்கு மாத்திரம்தான் தெரியும், இந்த வியாதிக்கு ஒரு மருந்துதான் உண்டு."

"அது என்ன மருந்து?"

"பிறகு சொல்லுகிறேன்."

கல்யாணி அவனைப் பார்த்துக் கொண்டு மௌனமாக நின்ருள். அழகும், பலமும் படைத்த தேகத்தை அப்பொழுது அவள் காணவில்லை. கை எலும்புகளும் கால் எலும்புகளும் வெளியே தெரிந்தன. எலும்புக்கும், தோலுக்கும் சம்பந்தமே இல்லையா? சுருங்கின முகத்தில் வளர்ந்திருக்கும் ரோமங்களுக்கு மத்தியில் வெண் கோடுகள் தெரிந்தன. ஜலம் படாத பற்கள் வெளியில் நீண்டு நின்றன. குழி விழுந்த கண்கள் ஜீவனற்றிருந் தன. கண்ணீர் கல்யாணியின் கன்னத்தில் வடிந்தது.

"அழாதே! என் வியாதி தீரும்!" அவளைத் தேற்றுவதற் காகச் சொன்ன வார்த்தை இது.

பள்ளிக்கூடத்தி லிருந்து வெகு நேரத்திற்குப் பிறகு கமலம் வீடு திரும்ப ஆரம்பித்தாள். படிப்பில் அவள் கவனம் செலுத்த வில்லை. புத்தகத்தைப் பார்த்துக்கொண்டு பதுமையைப் போல் இருப்பாள். அடிக்கடி பெருமூச்செறிந்தாள். திறந்த வெளியைப் பார்த்து அடிக்கடி புன்னகை புரிந்தாள்.

"...இப்பொழுதெல்லாம் அந்தி நேரத்தில்தான் கமலம் வீடு திரும்புகிருள். இதற்குக் காரணம் என்ன?"

"அவளைக் கேட்கவில்லையா?"

"கேட்டால் பொய் சொல்லு கிருள். இப்பொழுதெல்லாம்

அவள் படிப்பதே இல்லை. புத்தகத்தைப் பார்த்துக்கொண்டு பெருமூச்சு விடுகிறாள்."

மாதவன் ஒன்றும் சொல்லவில்லை. அவன் சிந்தித்தான்.

பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டிய நாள் நெருங்கிற்று. பணத்திற்கு என்ன வழி என்பதைப் பற்றி அவன் இடைவிடாது சிந்தித்தான். கடைசியில் அவன் சிந்திப்பதை நிறுத்தினான். ஆனால், இருமிக்கொண்டும், நடுங்கிக் கொண்டும் அவன் வேலைக்குச் சென்றான். எப்படியாவது செலவுக்கு வேண்டிய பணத்துடன் நாள்தோறும் வீடு திரும்புவான்.

சம்பளம் கொடுக்கவேண்டிய நாளுக்கு முன்தினம் காலையில் கமலம் மாதவன் அறைக்கு அருகில் நின்றாள். கல்யாணி கட்டிலுக்கு அருகில் இருந்தாள். மாதவன் எழுந்திருக்க வில்லை. அவனால் எழுந்திருக்க முடியவில்லை.

"கமலம் வந்திருக்கிறாள்" என்றாள் கல்யாணி.

"எதற்காக?"

"ஏதாவது சொல்லவேண்டியிருக்கும்."

"என்ன குழந்தாய்?" அவன் சிரமத்துடன் அவள் முகத்தைப் பார்த்தான்.

அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவன் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு அவள் நின்றாள்.

"நாளையதினம் சம்பளம் கொடுக்கவேண்டுமாம்" என்றாள் கல்யாணி.

"நாளையதினம் சம்பளம் கொடுக்க வேண்டுமாக்கும்...... கொடுக்கலாம். நீ போ."

அவள் போகவில்லை. அவனைப் பார்த்துக்கொண்டு அவள் அங்கேயே நின்றாள்.

"போ! சம்பளம் நாளைய தினம் கொடுக்கலாம்."

அவள் தெற்கு அறைக்குப் போனாள். அங்கிருந்து அவள் பெருமூச்செறியும் சத்தம் கேட்டது.

"சம்பளம் கொடுக்கப் பணம் ஏது?" என்று கல்யாணி கேட்டாள்.

"சம்பளம் கொடுக்கவேண்டும் —சம்பளம் கொடுக்கத்தான் வேண்டும்!" ஜீவனற்ற அவன் கண்கள் புத்தொளியால் பிரகாசித்தன. உதட்டைக் கடித்துக்கொண்டு அவன் கட்டிலிலிருந்து எழுந்திருந்தான். அவன் கதவை நோக்கி நடந்தான்.

கல்யாணி அவனைத் தடுத்தாள். "போகக்கூடாது. வழியில் விழுவீர்கள்."

"அவள் சம்பளம் கொடுக்க வேண்டும். நான் அவளுக்குப் பணம் கொடுப்பேன். அவளுக்குப் பணம் கொடுக்க என்னைத் தவிர வேறு யாரும் இல்லை."

"இப்பொழுது போகக்கூடாது. வழியில் விழுவீர்கள்."

"விலகி நில். நான் போக வேண்டும்" என்று அவன் கட்டளை இட்டான்.

அவள் விலகினாள். அவன் வெளியே சென்றான். அவன் ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு போனான்.

கல்யாணி வாசலில் நின்றுகொண்டு அவன் போவதைப் பார்த்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடிற்று.

கமலமும் வாசலுக்குச் சென்ருள். "அம்மா! மாமா எங்கே போனுர்?"

"வண்டியை இழுத்துக் கொண்டுபோனுர். மகளே, நமக்காக அவர் வழியில் விழுவாரோ, என்னமோ.......நமக்காக......" அவள் அழுதாள்.

"எனக்காக அம்மா!" கமலத்தின் குரல் நடுங்கிற்று. "எனக்காகத்தான் அந்த வாழ்க்கை பாழாயிற்று...எனக்காக மாமா சாகிருர்." அவள் முகத்தை மூடிக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். அந்தக் கண்ணீர் அவள் இருதயத்தில் ஒட்டிக்கொண்டிருந்த அழுக்கைக் கழுவிற்று.

தாயும், மகளும், தியாகத்தின் பாதாரவிந்தங்களை அவர்கள் கண்ணீரால் அர்ச்சனை செய்தனர்.

அந்தி நேரமாயும் மாதவன் திரும்பி வரவில்லை. அவன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு கல்யாணி வாசலில் நின்ருள். கமலம் சிந்தனையில் மூழ்கினுள். பொறுமை இழந்த அவள் அடிக்கடி வாசலைப் பார்த்தாள்.

இடைவிடாத இருமல் சத்தத்தைக்கேட்டு கல்யாணி வீதிக்குச் சென்ருள். மாதவன் தூணைப் பிடித்துக் கொண்டு இடைவிடாது இருமினுன். நாள்தோறும் பல பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மின்னல் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்த அந்தக் கால்களுக்கு எலும்புக் கூடான தேகத்தைத் தாங்க வலிமை இல்லை. கல்யாணி அந்தப் பக்கம் ஓடினுள். கமலமும் பின்னே ஓடினுள். அவர்கள் அவனைத் தாங்கினர்.

மாதவன் தூணிலிருந்து கைகளை எடுத்தான். அவன் நிமிர்ந்து நின்ருன். "விலகு. விலகு. என்னைப் பிடிக்காதீர்கள். நான் நடக்கிறேன்." அவன் நடந்தான். அவர்கள் அவனைப் பின் தொடர்ந்தனர்.

அவன் கட்டிலில் விழுந்தான். கமலம் அவனுக்கு அருகில் நின்ருள். விளக்கைக் கொளுத்தி வைத்துவிட்டு, கல்யாணி அருகில் உட்கார்ந்தாள்.

மாதவனும் கமலமும் ஒருவரையொருவர் இமை கொட்டாது பார்த்தனர். அவர்கள் எதையோ நினைத்தனர். கடந்த காலச் சுருள்களை அவர்கள் அவிழ்த்துப் பார்க்கிருர்கள்!

எதிர்ப்புகளும், கஷ்டங்களும் நிறைந்த வாழ்க்கை அதோ, தகர்ந்து கிடக்கிறது! எண்ணற்ற எண்ணங்களும், ஆதர்சங்களும, திட்டங்களும் நிறைந்த மற்ருரு வாழ்க்கை அதோ, வாழ்க்கை வசந்தத்தின் தேனை நுகர வெம்புகிறது. அவைகளுக் கெல்லாம் சாட்சியாக மூன்ருவது வாழ்க்கை அதோ, கண்ணீரைத் துடைக்கிறது.

யாரும், ஒன்றும் சொல்லவில்லை. அசாதாரண அமைதி அங்கே நிலவிற்று!

"குழந்தாய்!" அந்த அழைப்பில் நீண்ட பத்து வருடங்களின் சிநேகத்தின் சரித்திரமும், தியாகத்தின் சரித்திரமும் பிரதிபலித்தன.

அவள் தலை குனிந்தாள்.

"குழந்தாய்! இங்கே உட்கார்"

அவள் உட்கார்ந்தாள். அவள் மனேகரமான கரங்கள் அந்த எலும்புக்கூடான தேகத்தை ஸ்பரிசித்தது. அவனுடைய நடுங்கும் கரங்கள் அவள் கைகளைப் பற்றின. சாக்கடையி லிருந்து அவளை வாரி எடுத்த கை அதுதான்! அவ

ளுக்காகப் பத்து வருடங்கள் இடைவிடாது உழைத்த கரம் அதுதான்! பலஹீனத்தை அறியாத அந்தக் கரம், யாருடைய பிடியிலும் அகப்படாத அந்தக் கரம் அதோ, நடுங்குகிறது! அந்த நடுக்கம் அவளையும் நடுங்கச் செய்தது.

"குழந்தாய்!" என்றும் நடுங்காத அவன் குரல் நடுங்கிற்று. அவள் கையை அவன் தன் நெஞ்சில் வைத்துக் கொண்டான். அவன் கண்களை மூடினான். அவன் கண்கள் கண்ணீரால் நிறைந்தன.

கல்யாணி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு இந்தக் காட்சியைக் கண்டாள். அவள் எழுந்திருந்து புதல்வியின் தலையில் கை வைத்தாள். மூன்று இருதயங்கள் அப்பொழுது ஒன்று சேர்ந்தன.

மூடியிருந்த கதவின் இடுக்கு மூலம் இரண்டு கண்கள் அந்த உணர்ச்சி யூட்டும் சம்பவத்தைக் கண்டன.

மாதவன் கண்களைத் திறந்தான். அப்பொழுது அவன் முகத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. "கமலம்!" அந்த அழைப்பு மந்திர உச்சாரணத்தைப் போன்று இருந்தது. அவன் கை உயர்ந்தது. உழைத்து மரத்த அந்தக் கை மலரைப் போன்ற அவள் முகத்தைத் தடவிற்று; அவள் கண்ணீரைத் துடைத்தது.

கமலத்தின் கை, ரோமங்கள் நிறைந்த அந்த முகத்தைத் தடவிற்று. அவள் அவன் கண்களிலிருந்த பீளையைத் துடைத்தாள்.

கல்யாணி சிலையைப் போல் நின்றாள்.

அவன் எழுந்து உட்கார்ந்தான். தானும் சாப்பிட வேண்டும் என்று அவன் சொன்னான். அவனுக்குப் பசித்தது; உணவு ருசித்தது. கமலத்தின் அருகி லிருந்து அவன் சாப்பிட்டான். சாப்பிடும் பொழுது ஆண்டு விழாவைப் பற்றியும், தனக்குப் பரிசு கொடுத்த ஆளைப் பற்றியும் அவள் சொன்னாள். அதற்குப் பிறகு தாங்கள் சந்திப்பதாகவும், பேசுவதாகவும் அவள் சொன்னாள். மாதவன் எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டான். கடைசியில் அவள் கேட்டாள்: "அவரை உங்களுக்குத் தெரியுமா?"

"ஆம்."

"அவருக்கு உங்களைத் தெரியும். உங்கள் ரிக்ஷாவில் அவர் பிரயாணம் செய்திருக்கிறாராம்!"

"ஆம்."

"உங்களை அவர் நேசிக்கிறார்—கௌரவிக்கிறார்."

"பிறகு."

"உங்களைப் பற்றி நான் அவரிடம் பேசினேன். சாக்கடையிலிருந்து என்னை வாரி எடுத்தது முதல் இது வரையில் நடந்தவைகளை எல்லாம் சொன்னேன்."

கல்யாணி மேலே பார்த்துக் கை கூப்பினாள். "கடவுளே இப்பொழுதாவது என் குழந்தைக்கு நல்ல புத்தி வந்ததே!"

"அம்மா நான் தெரியாமல் என்னென்னமோ சொன்னேன். என்னால் தப்பு அபிப்பிராயங்கள் ஏற்பட்டன. பெரிது என்று நான் கருதினவை பெரிதல்ல என்பதை அவர்தான் எனக்குக் கற்றுக் கொடுத்தார். இந்த நகரிலுள்ள எல்லோரையும் விடச் சிறந்தவர், எல்லோரையும் விட மகிமை பொருந்தினவர் — என்

மாமாதான் என்பதை அவர் எனக்கு அறிவுறுத்தினர். என் மாமாவின் பெருமையை நான் உணர அவர் உதவி எனக்குத் தேவையாய் இருந்தது...அம்மா! என் பிழைகளைப் பொறுத் தருள்.''

"கடவுளிடம் சொல், மகளே! அவர் உன்னை மன்னிப்பார்!''

மாதவன் ஒன்றும் சொல்ல வில்லை.

மறு நாள் காலையில் அவன் கமலத்தைக் கூப்பிட்டான் "இன்று தானே நீ சம்பளம் கொடுக்க வேண்டும்?''

"ஆம்.''

அவன் சில நோட்டுகளை அவளிடம் கொடுத்தான். "இது எங்கிருந்து கிடைத்தது, மாமா?''

"என் வண்டியை விற்றேன்.''

"ஐயோ! வண்டியை விற்றீர் களா?'' கல்யாணி கலங்கினள்.

"ஆம், விற்றேன். அதை விற்காமல் சம்பளம் கொடுக்க முடியாது.''

"இனி செலவுக்கு என்ன செய்வோம்?''

"வண்டியை விற்கவில்லை என்று லும் செலவுக்கு வேறு ஏதாவது வழி கண்டுபிடிக்க வேண்டும். என்னல் இனி ரிக்ஷா இழுக்க முடியாது.''

மாதவனின் கைகளைப் பிடித் துக்கொண்டு கமலம் சொன் னள்: "மாமா! இனி நீங்கள் ரிக்ஷா இழுக்கவேண்டாம். ரிக்ஷா இழுக்க உங்களுக்கு வலிமை இல்லை. எங்களுக்காகப் பத்து வருடங்கள் நீங்கள் ரிக்ஷா இழுத்தீர்கள். ரிக்ஷாவை விற்ற பணமும் இதோ, என் கையில் இருக்கிறது. போதும்! இனி நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்.''

மாதவன் துன்பத்துடன் புன் னகை புரிந்தான். "குழந்தாய்! வாழ்க்கை ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக அல்ல. வாழ்க் கையின் கடைசியில்தான் ஓய்வு. அதுதான் மரணம்!'' அவள் தலையை அவன் அன்புடன் தடவி னன். "நீ குளி. குளித்த பிறகு பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டும். சம்பளம் கொடுத்து விட்டு மீதி இருக்கும் பணத்தை ஜாக்கிரதையாக வைத்துக் கொள். உனக்குத் தேவையா னதை வாங்கிக்கொள்'' அவளை ஆசீர்வதித்துவிட்டு அவன் வெளியே சென்றான்.

"எங்கே போகிறீர்கள்?'' என்று கல்யாணி கேட்டாள்.

"சொல்லுகிறேன். நான் போகவேண்டும்.'' அவன் நடந் தான்.

கமலம் ஓடி வந்து அவனைத் தடுத்தாள். "எங்கே போகிறீர் கள்?''

"பிறகு சொல்லுகிறேன். நான் போய் வருகிறேன்.''

"இனி நீங்கள் எங்கும் போகக்கூடாது!''

அவன் சிரித்தான் "குழந்தாய் விலகி நில். கட்டளைக்குத் தலை வணங்காதவன் உன் மாமா!''

"மாமா! நீங்கள் இனி எங் கும் போகக்கூடாது''

"விலகு. இங்கிருந்து விலகு'' அது கட்டளை.

அவள் விலகி நின்றாள், அவன் வெளியே சென்றான்.

கமலம் அறைக்குச் சென்றாள். அவள் சிந்தனைக் கடலில் மூழ்கினள்.

"கமலம்!'' அன்பு கனிந்த அழைப்பு அது.

அவள் திரும்பிப் பார்த்தாள். அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்துகொண்டு கோபி அங்கே நின்றான். அவள் எழுந்திருந்தாள். ஆச்சரியமும், இன்பமும் அவள் மூச்சை அடைத்தன. "இதை......இதை...நான் எதிர்பார்க்கவில்லை!"

"எதை, எதிர்பார்க்கவில்லை?"

"இங்கே வருவீர்கள் என்று"

"பிறர் எதிர்பார்ப்பதற்கு நேர் மாறாக நடப்பவன் நான். நான் இங்கே வருவது இது முதல்தரமல்ல!"

"இதற்குமுன் இங்கே வந்திருக்கிறீர்களா?"

"நேற்றிரவு நான் இங்கே வந்திருந்தேன்"

"இரவா? எப்பொழுது?"

"உணர்ச்சி ஊட்டும் அந்தக் காட்சியை நான் கண்டேன். கட்டிலில் படுத்திருந்த அந்தத் தியாகியின் பாதங்களை வணங்க எனக்கு ஆசை. அவர் கை உன் முகத்தைத் தடவிய பொழுது எனக்கு உன் மீது பொறாமை ஏற்பட்டது. அவர் என் மாமா ஆகவேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன்."

"அந்த ஆசை...."

"அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காகத் தான் நான் இப்பொழுது வந்தேன். நீ சம்மதித்தால்...."

"அது யார் மகளே...."என்று கேட்டுக்கொண்டு கல்யாணி வந்தாள்.

"அன்று எனக்கு மோதிரம் பரிசு கொடுத்தவர்."

கல்யாணி கோபியை உற்றுப் பார்த்தாள். "அவர் என் உடன்பிறந்தவரில்லை?" என்று மகளைக் கேட்டாள்.

இந்தக் கேள்விக்குக் கோபி பதில் சொன்னான். "வேண்டாம் நான் நிற்கிறேன் கமலத்திற்குக் கொடுத்த பரிசுக்குப் பதிலாக ஒரு பரிசு எனக்கு வேண்டும்."

"நாங்கள் ஏழைகள். உங்களுக்கு நாங்கள் என்ன தர முடியும்?"

"ஒன்றும் தருவதற்கு இல்லை என்றால் உங்களையே பரிசாக அளியுங்கள்"

அவள் பதில் சொல்லவில்லை. அவள் கமலத்தைப் பார்த்தாள். கமலம் கோபியைக் கடைக் கண்ணால் பார்த்துவிட்டு அப்பால் சென்றாள்.

"உங்களையெல்லாம் என் வீட்டிற்கு அழைத்துச் செல்லுவதற்காகத்தான் நான் வந்தேன்" என்றான் கோபி.

"நாங்கள் ஏழைகள்!"

"நான் பணக்காரன்! அதனால் தான் உங்களை என் வீட்டிற்கு வரச் சொல்லுகிறேன்."

"இதை என்னிடம் சொன்னால் மாத்திரம் போதாது."

"சொல்ல வேண்டியவர்களிடம் நான் சொல்லிக் கொள்ளுகிறேன். உங்களுக்குச் சம்மதமா?"

"அவளுக்குச் சம்மதமானால் எனக்கும் சம்மதம்தான்."

"கமலத்தின் மாமா எங்கே?"

"வெளியே சென்றிருக்கிறார்."

"அவரை இனி வெளியே செல்ல அனுமதிக்காதீர்கள். இனி வேலை செய்தால் அவர் இறந்துவிடுவார். அவருக்குச் சிகிச்சை செய்யவேண்டும்."

"அவர், யார் சொல்லுகிற பேச்சையும் கேட்கமாட்டார்."

"நான் இங்கே வந்திருந்ததாகவும், அவரைக் காண ஆசைப்படுவதாகவும் சொல்லுங்கள்.

நான் மீண்டும் வருகிறேன்.'' அவன் விடை பெற்றான்.

அன்றிரவு கோபி வந்திருந்ததாக மாதவனிடம் கல்யாணி சொன்னாள். சிறிது நேரம் யோசித்துவிட்டு அவன் சொன்னான் : "அவள் படிப்பு முடியட்டும்.''

9

இரண்டு நாட்கள் வேலை தேடி அவன் நகரம் எங்கும் அலைந்தான். ஆனால் வேலை கிடைக்கவில்லை. ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று மூட்டை தூக்க முடிவு செய்தான், ஒரு மூட்டையைச் சுமந்துகொண்டு நடக்க ஆரம்பித்ததும் அவன் தள்ளாடினான். எனவே, அவன் மூட்டை தூக்குவதை நிறுத்தினான். அவனுக்குப் பீடி சுற்றத் தெரியும். ஆனால் இருமிக்கொண்டிருக்கும் நோயாளியைப் பீடி பாக்டரியில் வேலைக்கு வைத்துக்கொள்ள முதலாளிகள் இணங்கவில்லை.

அவன்மீது இரக்கப்படவும், அவனுக்குச் சிறு உதவிகள் புரியவும் பலர் முன்வந்தனர். ஆனால், அனுதாபமும், உதவியும் அவனுக்குத் தேவை இல்லை. அனுதாபத்துடன் நண்பர்கள் கொடுத்த தேநீரையும், பீடியையும் அவன் நிராகரித்தான். அவன் உணர்ச்சியும், தெளிந்த சுதந்திர பேதமும், அனுதாபத்தை அங்கீகரிக்கவும், இரக்கத்திற்கு இரையாகவும், அவனை அனுமதிக்கவில்லை. அந்த நிலையில்கூட அவன் தலைநிமிர்ந்து நடந்தான்.

வீட்டுத் தொல்லைகளைக் கமலமும், கல்யாணியும் அவனிடம் சொல்லவில்லை. கல்யாணி கையிலிருந்த பணத்தைக் கொண்டு அவர்கள் கஷ்ட ஜீவனம் நடத்தினர். வெளியே செல்லவேண்டாம் என்று அவர்கள் மாதவனை மன்றாடிக் கேட்டுக்கொண்டனர். மருந்து குடிக்கும்படி அவனை நிர்ப்பந்தப்படுத்தினர். ஆனால், பலன் இல்லை.

கோபி மீண்டும் வந்தான். மாதவன் வீட்டில் இருக்கும் பொழுது அவன் வந்தான். மாதவனை அவன் இருதய பூர்வமாக நேசித்தான். இருவரும் வெகு நேரம் பேசினர். கோபி தான் அதிகம் பேசினான்: மாதவனிடம் தனக்குள்ள இருதய பூர்வமான அன்பையும், அபிமானத்தையும் அவன் பகிரங்கமாகச் வெளியிட்டான். கமலத்தின் புத்தி கூர்மையையும், கலைப் பற்றையும் அவன் போற்றினான். தான் அவளைக் காதலிப்பதையும், அவளை மணக்க விரும்புவதையும் அவன் பிரஸ்தாபித்தான்.

"இது அவள் அதிர்ஷ்டம், எனக்குச் சம்மதம்தான். எனினும், அவள் படிப்பு முடியட்டும் பிறகு, நீ அவளை மணக்கலாம்.''

கோபி இதற்கு இணங்கினான். விடை பெறும்பொழுது அவன் மாதவனிடம் ஒரு கவரைக் கொடுத்தான். அதில் நோட்டுகள் இருந்தன.

"இது எதற்கு?'' என்று மாதவன் கேட்டான்.

"என் பரிசு.''

மாதவன் கவரைத் திறந்தான். அவன் புன்னகை புரிந்தான்: "பரிசு இது தானா? இத்தகைய பரிசு எனக்கு வேண்டாம். இதை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்.''

"அபிமானத்துடன் கொடுக்கும் பரிசை நிராகரிப்பது தர்மமில்லை''

"நான் இதுவரையில் பரிசு வாங்கினதில்லை. இனி வாங்கவும் மாட்டேன்."

88884

"அப்படியானால், கமலத்தின் பெயரில் இப் பரிசை நீங்கள் ஏற்கவேண்டும்." அவன் நடந்தான்.

"நில்லுங்கள்!" அவன் கட்டளை இட்டான். அவன் முகத் தோற்றம் மாறிற்று.

அவன் நின்றான். மாதவன் அவனை அணுகி அந்தக் கவரை அவனிடம் கொடுத்தான். "வேலை செய்து கூலி வாங்கின கை இது. இந்தக் கை பரிசு வாங்காது. இதை நீயே வைத்துக் கொள்."

கோபி கவரை வாங்கினான். சிறிதுநேரம் அங்கேயே அவன் அசையாது நின்றான். பிறகு, அவன் நடந்தான்.

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு கல்யாணியும், கமலமும் மௌனமாக நின்றனர். கோபி போனதும் கல்யாணி சொன்னாள்: "இது என்ன குணம்? சிநேகத்தினால்தானே அவர் பணம் கொடுத்தார். அதைத் திருப்பிக் கொடுக்கலாமா?"

மாதவன் முகம் சிவந்தது. அதற்குமுன் அத்தகைய தோற்றத்தை அவள் கண்டதில்லை. அவன் உறுமினான். அவள் திடுக்கிட்டுப்பின் வாங்கினாள்.

கமலம் ஓடி வந்தாள். "அம்மா! நீ ஒன்றும் சொல்லாதே மாமாவின் விருப்பத்திற்கு விரோதமாக ஒன்றும் சொல்லக் கூடாது; செய்யவும் கூடாது."

"நான் அவரைப் புண்படுத்தக் கூடாது என்று நினைத்து இதைச் சொன்னேன்."

"தீமையான ஏதும் அவர் மனதில் இடம்பெறாது. உன்னையும் என்னையும்விட அவருக்கு மாமாவைப் பற்றி அதிகமாகத் தெரியும்."

மாதவன் முகம் சாந்தம் அடைந்தது. அவன் திறந்த வெளியை உற்றுப் பார்த்தான். பிறகு, அவன் வெளியே சென்றான்.

மத்தியானம் வரையில் அவன் வீதிகளில் அலைந்து திரிந்தான். பிறகு, பீடி கொளுத்துவதற்காக ஒரு கடைக்குச் சென்றான். கடைக்குமுன் தொங்கிக்கொண்டிருந்த கயிறு அணைந்துகொண்டிருந்தது. மாதவன் பீடியைக் கொளுத்தினான்.

"மாதவா! கயிறு திரித்துக் கொண்டு வருகிறாயா? வழக்கமாக எனக்குக் கயிறு கொடுப்பவன் மூன்று நாட்களாக வரவில்லை."

மாதவன் சிறிதுநேரம் யோசித்தான். "நான் கயிறு 'சப்ளை' செய்கிறேன். மாலையில் கொடுத்தால் போதுமா?"

"போதும்"

அவன் வேகமாக வீட்டை நோக்கி நடந்தான். அவன் தேங்காய் நாரைப் பதம் செய்ய ஆரம்பித்தான்.

"எதற்காக?" என்று கல்யாணி கேட்டாள்.

"கயிறு திரிக்க."

"கயிறு எதற்கு?"

"பீடிக் கடையில் கொடுப்பதற்காக."

"உடம்பை அலட்டிக்கொண்டால் வியாதி அதிகமாகும்."

அவன் சிரித்தான்.

(அடுத்த இதழில் முடியும்)

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd. (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.

சாதாரண ஆம்லெட் தான்—



ஆனாலும் அதை டால்டாவில் பொரித்தால் தனிருசியே!

முட்டையின் வெள்ளைக்கருவை தனியாக எடுத்து கெட்டியாவதுவரை கடையவும். பிறகு மஞ்சள் கருவைப்போட்டு ஐந்து நிமிஷங்கள் கடையவும். நறுக்கின வெங்காயம், உடைத்த பயறு அல்லது அரிந்த தக்காளிப் பழம், ருசிக்குத் தகுந்தபடி உப்பு, மிளகு, இவைகளைச்சேர்த்துக்கொள்ளவும். பரந்த வாணலியில் பொரிக்குமளவு டால்டாவை சூடாக்கி அதில் கலந்துவைத்திருப்பதை ஊற்றவும். கீழ்பக்கம் இலேசாக சிவக்கும்வரை பொரித்து; இரண்டாக மடித்து, மறுபக்கம் திருப்பவும். இந்தப்பக்கமும் சிவந்ததும் சூடாக பரிமாறவும். ரொம்ப ருசியாயிருக்கும்.

நீங்கள் சாப்பிடும் பக்ஷணங்களை டால்டாவினுல் எப்படி அதிக ருசியுள்ளதாகச்செய்யலாம் . . . ஒரு சாதாரண சாப்பாட்டிற்கோ அல்லது விசேஷமாகவரும் விருந்தாளிக்கோ என்னென்ன தயாரிப்பது . . . உங்களுக்கு தேவையான தகவல்களுக்கு எழுதுங்கள்.

தி டால்டா
அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM 76-50 TM

கலியாண விசேஷங்களுக்கும்,

திருவிழா விசேஷ நாட்களிலும் அணியத் தகுந்த

எங்கள்

"போட்டோ மார்க்"

சேலைகள்

கெட்டியான சாயத்திற்கும்
உறுதியான உழைப்பிற்கும்
கியாரண்டி தரக்கூடியது

தயாரிப்பவர்கள் :

ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி.

ஏஜண்டுகள் :

1. ஸ்ரீ முருகன் அண் கோ, மால் 2-வது தெரு, மதுரை
2. M/s பால முருகன் கம்பெனி, மால் 5, ஹனுமார் கோவில் தெரு, மதுரை
3. M/s R. M. H. S. மூர்த்தி கம்பெனி, லக்ஷ்மிபுரம் குறுக்குத் தெரு மதுரை
4. ஸ்ரீ பால முருகன் கோ, 166, தெற்கு மாசி வீதி, மதுரை
5. M/s M. S. T. சுப்பய்யர் அண் சன்ஸ், 199 சந்தை ரோடு, நாகல்நகர், திண்டுகல்
6. கஸ்தூரி ரெங்கய்யர், நாகையர் அண் கோ, ஸௌராஷ்டிர தெரு' வத்தலகுண்டு
7. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி, சேலம் அண்டு N. A. Dt.
8. M. R. சுப்பையா செட்டியார் ஜவுளி, வியாபாரம், 150, ராஜாமில்ரோடு, பொள்ளாச்சி

(N. B.) *40, 60, 80 நெ. ஜவுளி தினுசுகளுக்கும்,*

பிரிண்டெட் வாயல் சேலை தினுசுகளும்,

சரஸ்வதி வீவிங் கம்பெனி

நாகல் நகர், திண்டுக்கல்

32, லக்ஷ்மிபுரம் 3-வது தெரு, மதுரை

சூதகத்தை நிறுத்தியது

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தி யளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தி யடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3

நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5

மிக்க கடுமையான கோளாறுகளுக்கு விலை ரூ. 8

கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets)

6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி. க்கு 12 அணா அதிகப்படி)

Mrs. P. DEVEE, F.D.S (M.S)

Tollygunge, : : CALCUTTA

ஸ்டாக்கிஸ்டுகள் : ஹாரி & சன், 93, சைனா பஜார்ரோட், சென்னை

ராகவன் அண்ட் கம்பெனி

ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோட், பெங்களூர் சிட்டி

சக்தி ★ மாத வெளியீடு

தனிப்பிரதி 'தபால்'	0	8	ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0	2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம்பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப்பிரதி	0	9	ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0	2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப்பிரதி	0	10	ஆறுமாதம்	4	8
ஒரு வருஷம்	8	0	2 வருஷம்	15	0

SHAKTI KARYALAYAM : : MADRAS—14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்ப வேண்டும்

சக்தி வாய்ந்த நூல்கள்

காந்தி மகான் கதை : கொத்தமங்கலம் சுப்பு

மகாத்மா காந்தியடிகள்-நம்மை அடிமை வாழ்விலிருந்து விடுவித்த சரித்திரத்தை நாட்டுப் பாடல் வடிவத்தில் பாடியிருக்கிருர். அழகான அட்டைப் படம்—உயர்ந்த காகிதம். கலிகோ பைண்டு டெம்மி அளவில் பக்கம் 260.

விலை ரூ. ஐந்து — தபால் செலவு தனி

சக்தி பிறக்குது : சுரபி

எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சாக இருந்த சுதந்தர வாரத்தில் 'சுரபி'யின் உள்ளத்தில் பெருக்கெடுத்த உணர்ச்சி வெள்ளத்திலே எழுந்த கவிதை அலைகள். அருமையான பதிப்பு.

விலை அணு : ஆறு — தபால் செலவு தனி

லெனின் பிறந்தார் : ஆர். ராமநாதன் எழுதியது

லெனின் பிறந்தார் என்ருல் கூடவே புரட்சி இயக்கமும் பிறந்தது என்றுதான் பொருள். இந் நூலில் லெனின் வரலாறு சொல்லும் வகையில் புரட்சி இயக்கம் வளர்ந்த வகையையும் ஆசிரியர் விளக்கியிருக்கிருர். படங்களுடன்

விலை ரூ. மூன்றரை — தபால் செலவு தனி

இனி நாம் செய்யவேண்டுவது யாது?

டால்ஸ்டாய் எழுதியது ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு

காந்தியடிகளின் கருத்தைக் கவர்ந்தது இந் நூல். "உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்" எனும் அரிய சித்தாந்தம்தான் இந் நூலில் அடங்கியிருக்கிறது. இப்போது தமிழில் மூன்ரும் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. அழகிய மொழிபெயர்ப்பு:

விலை ரூ. மூன்று — தபால் செலவு தனி

உலோகமும் நாமும் : மு. அருணுசலம் எழுதியது

உலோகங்களைப் பற்றிய விரிவான முறையில் தெளிவாய் விளக்குவது இந் நூல். தமிழ் உலகுக்குப் புதிது.

விலை ரூ. ஐந்து — தபால் செலவு தனி

ஹிந்து பத பாதுஷாஹி

வீர சாவர்க்கர் எழுதியது 'அபிநவம்' மொழி பெயர்ப்பு

இந்து சாம்ராஜ்ய வீழ்ச்சியை விவரிக்கும் சிறந்த நூல்.

விலை ரூ. மூன்றேமுக்கால் — தபால் செலவு தனி

சக்தி காரியாலயம் சென்னை—14.



நல்ல வழி காட்டி

ங்கே போகும் வழி?" என்று கேட்டுவிடாதீர்கள்.

தா படத்தில் தாயார் குழந்தைக்கு வாழ்க்கையில் மேன்மை அடையும் வழியைக் காட்டுகிறாள் கதைகள் சொல்லி! பார்த்தீர்களா?

ன், கதை என்றால் எல்லோருக்குந்தான் ஆனந்தம்!"

, மனித வாழ்க்கையே ஒரு பெரிய கதைதான். சம்பவங்கள் நிறைந்த சினிமாக் காட்சி அல்லவா? அதனாலேயே எல்லோரும் விரும்புகிறார்கள்.

ல், குழந்தைகளுக்குத்தான் கதைகள் மிக அவசியம். அவர்கள் நம் தேசத்தின் பொக்கிஷம் ஆகிறார்கள்.

வே, அவர்கள் அறிவும் மனமும் பண்பட அவர்களுக்கு அழகிய இனிய சிறு சிறு கதைகளும் படங்களும் நிறைந்த கதையோ கதை வாங்கிக் கொடுங்கள்.

ப் பிரதி 0—1—6 ★ வருட சந்தா ரூ. 2—4—0

கதையோ கதை

சென்னை 14.

உலகத்திலே அழகும் மணமும்
மிகுந்தது ரோஜா புஷ்பம்
உலத்திலே சுவையும் மணமும்
மிகுந்தது அசோகா பாக்குத்தூள்

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செ

'அசோகா பாக்டரி' : : கோயமுத்